28869

உ

திருச்சிற்றம்பலம்

# தமிழ்முறைத்
# திருக்குட நீராட்டுப் பெருவிழா
# திருநெறிய தமிழ் மரபு

கயிலைமாமுனிவர்
தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார்

தவத்திரு சாந்தலிங்கர் திருமடம்
பேரூராதீனம் பேரூர்
கோவை-641 010
1996

உ

ஓம் திருச்சிற்றம்பலம்

# தமிழ்முறைத்
# திருக்குட நீராட்டுப் பெருவிழா
# திருநெறிய தமிழ் மரபு

கயிலைமாமுனிவர்

தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார்

தவத்திரு சாந்தலிங்கர் திருமடம்

பேரூராதீனம் பேரூர்

கோவை 641 010

1996

நூலின் பெயர் : தமிழ்முறைத்
திருக்குட நீராட்டுப் பெருவிழா
திருநெறிய தமிழ் மரபு

ஆசிரியர் கயிலைமாமுனிவர் பேரூராதீனம் தவத்திரு
சாந்தலிங்க இராமசாமி அடிகளார்

பதிப்பு : முதற்பதிப்பு 1996

மொழி : தமிழ்

பதிப்புரிமை : சத்வித்யா சன்மார்க்க சங்கம்

தாள் : 13.7 Kg. கிரீம் வ்வ்

அச்சு எழுத்து : 10 புள்ளி

பைண்டிங் : கார்டு போர்டு

பக்கங்கள் : 100 பக்கம் (96 + 4)

அச்சிட்ட பிரதிகள் : 500

வெளியீடுவோர் : சத்வித்யா சன்மார்க்க சங்கம்
தவத்திரு சாந்தலிங்கர் திருமடம்
பேரூர், கோவை-10

விலை ரூ. : 32

# முன்னுரை

*''கற்றதனால் ஆயபயன் என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்''*

என்னும் வள்ளுவர் வாக்குக் கல்வியின் பயனை எடுத்துரைக்கின்றது. ஒவ்வொரு உயிரும் துன்பத்தைத் துரத்தவும் இன்பத்தை ஏற்கவுமே விரும்புகின்றன. இது கைகூடச் சமயம் வழிகாட்டுகின்றது. சைவ சமயம் உயிர்கள் நிலைத்த இன்பம் பெறச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு நல்வழிகளைக் காட்டுகின்றது. இவ்வழிகளின்படி ஒழுகி வாலறிவனாகிய இறைவனது இணையடிகளைத் தொழவேண்டும். இதற்கு நமது கல்வி துணைபுரிய வேண்டும். இவ்வாறு தொழுபவர் பிறவிப் பெருங்கடலை நீந்தும் ஆற்றலைப் பெறுவார். இறைவழிபாட்டின் உண்மைப் பொருளைப் புரிந்து கொண்டு செயல்பட்டால் எளிதில் பயன்பெறலாம். புரியாத மொழியில் புதிரான சடங்குகளைச் செய்தால் நாம் பயன்பெறுவதும் கடினமாகிவிடுகின்றது.

அவ்வகையில், நம் செந்தமிழ் மொழியில் இருந்த சமய நூல்கள் நாளடைவில் மறைக்கப்பட்டன. அயல் வழக்குகளில் மக்கள் மயங்கினர்; எனவே அது ஆட்சியிலும் அமர்ந்தது. இதனால் சமயத்துறையில் பொருளற்றவைகளும் போலிகளும் பெருக வழியேற்பட்டது. பொருளுள்ளவையும் புரியாப் புதிராயின. ஆகவே சமயத்துறையில் ஒரு பெரிய இடைவெளி ஏற்பட்டது; ஈடுபடுவோரும் தெளிவின்றிச் சோர்ந்தனர். இந்நிலையில் தாய்மொழியிலேயே பொருளுணர்ந்து இறைவனை வழிபட்டும் வாழ்வியல் சடங்குகளையும் திருக்கோயில் வழிபாட்டு முறைகளையும் மேற்கொண்டு பயன்பெற வேண்டுமென்று அருளாளர்களும் சான்றோர்களும் முயன்றனர். அதனை

நடைமுறைப் படுத்தினோம். ஆயிரக்கணக்கான திருக்கோயில்களில் அனைத்தும் தமிழ்மரபில் திருமுறை வழியில் திருக்குட நீராட்டுகள் நடைபெற்றன. ஊர்தோறும் சமய உணர்வுகள் பெருகின. அங்கெல்லாம் வன்முறை உணர்வுகள் மங்கின. நெஞ்சுருகி வழிபடத் துணைபுரியும் தமிழ் மரபுகாத்துத் தமிழால் எதையும் செய்யமுடியும் என்ற நம்பிக்கையோடு இத்துறையில் இறங்குபவர்கள் வெற்றியடைவார்கள் என்பதில் ஐயமில்லை.

பாரத நாட்டில் பலவகையாகத் தெய்வத் திருவுருவங்களை திருக்கோயில்களில் எழுந்தருளச் செய்து வருகின்றனர். தமிழ் நாட்டில் ஆகம வழியிலும், வைதீக வழியிலும் மேற்கொள்கின்றனர். பிறபகுதிகளில் தந்திரம், சாக்தம் என்ற முறைகளிலும் இதைச் செய்கின்றனர். தொழுவார்க்கு இரங்கியருள் புரியும் இறைவனைத் தெய்வத் தமிழ்ப்பாடல்களால் திருக்கோயில்களில் எழுந்தருளச் செய்யும் முறையை ஆகம வழியில் அமைத்துள்ளோம். இதனைச் சுருக்கியும் விரித்தும் பயன்படுத்தலாம். இது முதல் முயற்சி. இதைத் தத்தம் நிலைக்கேற்ப விரித்துக் கொள்வதுடன், இத்துடன் சேர்க்கலாம். எனத் தெளிந்து சிந்தித்தவற்றை தெரிவித்தால் இணைத்துக் கொள்ளவும் தடையில்லை.

வாழிவியல் சடங்குகளையும் இதேபோல தமிழ்மரபில் செய்ய ஏதுவாக இந்நூலின் பிற்பகுதி அமைந்துள்ளது. இவற்றை மேற்கொண்டு ஒழுகிப் பெரும்பயன் பெற வாழ்த்துகிறோம். அருண்மிகு சாந்தலிங்கப் பெருமானும் அருண்மிகு அம்பல வாணரும் அருள் புரிவார்களாக.

**(ஒ.ம்.) தவத்திரு சாந்தலிங்க இராமசாமியடிகளார்**

## சிந்திப்பரியன சிந்திப்பவர்க்கு . . .

இறைவனை எப்போதும் நெஞ்சுள் இருத்திச் சிந்தித்து அவனோடு ஒன்றுபவர்களே ஞானிகள் ஆவார்கள். அப்பர் பெருமானும் ''ஒன்றியிருந்தி நினைமின்கள்...'' என்று அருள்கின்றார். இந்த இடைவிடாச் சிந்தினைக்குத் துணைசெய்யப் பொருத்தமான சில பாடல்களைச் செயல்முறைகட்கேற்பத் தொகுத்துள்ளோம். இன்னும், தெவைக்கேற்பத் திருமுறைப் பாடல்களைச் சேர்த்துக் கொள்ளலாம். வடமொழியில் இதுபோன்ற பாடல்களைத் தியான சுலோகம் என்பர். எல்லோரும் இவற்றை ஓதி உயர்வு பெற வாழ்த்துகிறோம். இத்தோடு ஓங்காரத்தோடு கூடிய ஐந்தெழுத்தை (ஓம் நமசிவாய) வேள்விக் காலங்களில் நூற்றெட்டுக்குக் குறையாமல் ஓதுவது சாலச்சிறந்தது. வாழ்வியல் சடங்குகளிலும் மேற்கூறிய மூலமந்திரத்தைத் தவறாது ஓத வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறோம்.

### ஒன்றியிருந்து நினைத்தலுக்குரிய அறுசமயக் கடவுளர்

### கதிரவன்

*மதியினை உண்டு உமிழ்ந்து இரவும் தன்வயமாம் எனக்காட்டி மருவும் நீயே*
*கதிகொடுக்கத் தக்கபரம் என்றுணரும் தமியேனும் கலங்கலாமோ*
*பதிமுழுதும் கடல்முழுதும் பார்முழுதும் மலைமுழுதும் பரப்பும் வெயில்*
*பொதியும் ஒரு சுடராய புண்ணியமே அடியர் பிழை பொறுக்கும் கோவே*

*- சூரியமாலை*

### விநாயப் பெருமான்

*ஐந்துகரத்தைனை யானை முகத்தனை*
*இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை*

நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்து அடிபோற்றுகின்றேனே.

- திருமந்திரம்

## முருகப்பெருமான்

திருவடியுந் தண்டையுஞ் சிலம்புஞ் சிலம்பூடுருவப்
பொருவடி வேலுங் கடம்புந் தடம்புயம் ஆறிரண்டும்
மருவடிவான வதனங்களாறும் மலர்க் கண்களுங்
குருவடிவாய் வந்தென்னுள்ளங் குளிரக் குதிகொண்டவே

- கந்தரலங்காரம்

## சிவபெருமான்

அஞ்சு முகமுள ஐம்மூன்று கண்ணுள
அஞ்சினோ டஞ்சு கரதலம் தானுள
அஞ்சுடன் அஞ்சா யுதமுள நம்பியென்
நெஞ்சு புகுந்து நிறைந்து நின்றானே

- திருமந்திரம்

## அம்பிகை

ஆத்தாளை எங்கள் அபிராம வல்லினய அண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம்பூ நிறத்தாளைப் புவியடங்கக்
காத்தாளை ஐங்கணை பாசாங்குசமும்கரும்பும் அங்கை
சேர்தாளை முக்கண்ணியைத் தொழுவர்க்கு ஒரு தீங்கில்லையே

- அபிராமி அந்தாதி

## திருமால்

கண்கள் சிவந்து பெரியவாய் வாயும் சிவந்து கனிந்து, உள்ளே
வெண்பல் இலகு சுடரிலகு விலகு மகர குண்டலத்தன்,
கொண்டல்வண்ணன் சுடர்முடியன் நான்கு தோளன்குனி சார்ங்கன்
ஒண் சங்கதை வாளாழியான் ஒருவன் அடியேன் உள்ளானே.

- திருவாய்மொழி

ஓம் திருச்சிற்றம்பலம்

# தமிழ்முறைத் திருக்குட நீராட்டுப் பெருவிழா

**முன்னுரை :**

இறைவன் எங்கும் நிறைந்திருக்கிறான். அவனது அருளைப் பெறத் திருக்கோயில் வழிபாட்டையே அருளாளர்கள் நமக்கு ஏற்படுத்தித் தந்துள்ளனர். மாட்டின் உடல் முழுவதும் பால் நிறைந்திருந்தாலும் அது மடிக்காம்புகள் வழியாகவே வெளிப் படுகிறது. திருக்கோயில்களில் உள்ள இறைவனின் திருமேனிகள் காம்பின் துளை போன்றன. எனவே அத்திருமேனிகளோடு அவை இருக்குமிடம், அதைச் சூழ்ந்துள்ள நீர்நிலைகள் போன்றனவும் சமய வாழ்வில் சிறப்பிடம் பெறுகின்றன.

'மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய் தொடங்கினர்க்கு ஓர்
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே'

என்று தாயுமானாரும் அருளியுள்ளார். திருமேனிகளைப் போலவே இவையும் சிவ வடிவங்களாகவே திகழ்கின்றன. திருமுறைகள் இதைத் தெளிவாகக் காட்டுகின்றன.

'சாலக்கோயில் உளநின்கோயில் அவைஎன் தலைமேல் கொண்டாடி
மாலை தீர்ந்தேன் வினையுந்துறந்தேன் வானோர் அறியா நெறியானே'

—(சுந்தரர் தேவாரம்)

'சென்றாடு தீர்த்தங்கள் ஆனார்தாமே'

—அப்பர் தேவாரம்

''பிறவியால் வருவன கேடுள ஆதலாற் பெரியஇன்பத்
துறவியார்க் கல்லது துன்பநீங்காதெனத் தூங்கினாயே
மறவல்நீ மார்க்கமே நண்ணினாய் தீர்த்த நீர்மல்குசென்னி
அறவனாரூர் தொழுதுய்யலாம் மையல் கொண்டஞ்சல் நெஞ்சே''

—ஞானசம்பந்தர் தேவாரம்

போன்ற திருவாக்குகள் இவ்வுண்மையை உணர்த்துகின்றன. எனவேதான் அப்பர் பெருமான் திருக்கோயில் இல்லாத ஊரைத் திருமகள் வாழாத ஊர் என்றும், கொடிய காடு என்றும் குறிக்கிறார். உயிர்கள் இம்மை மறுமைப் பயன்களைப் பெறத் திருக்கோயில்களே உறுதுணையாக உள்ளன.

இத்தகைய பெருமை வாய்ந்த திருக்கோயில்களை நம் முன்னோர் பெரிதும் போற்றி வளர்த்து வந்துள்ளனர். நால்வர் பெருமக்களும் கோயில்தொறும் சென்றே சமயத்தையும், தமிழையும் வளர்த்தனர். கோச்செங்கட்சோழ நாயனார் திருக்கோயில் அமைப்பதில் பெரிதும் ஆர்வம் உடையவர். இவர் சிவபெருமானுக்கு எழுபது மாடக் கோயில்களை அமைத்தார் இதைத் திருமங்கை ஆழ்வாரும் குறிப்பிட்டுச் சிறப்பிக்கின்றார்.

''இருக்கிலங்கு திருமொழிவாய் எண்டோள் ஈசற்கு
எழில்மாடம் எழுபது செய்து உலகமாண்ட
திருக்குலத்து வளச்சோழன்'' (பெரியதிருமொழி 6-6-8)

இவரையடுத்துப் பிற்காலத்தில் இராசராசசோழன் மலையை நிகர்த்த திருக்கோயிலைக் கட்டிச் சிறந்த புகழை அடைந்தார். திருக்கோயில்கள் மொழி, சமயம், சிற்பம், ஓவியம், ஆடல், பாடல், கல்வி, பண்பாடு முதலியவற்றுக்கு நிலைக்களமாக இருந்து வந்துள்ளன. இத்திருக்கோயில்கள் தமிழகத்தில் மிகப் பழங்காலத்திலிருந்தே இருந்து வந்துள்ளன,

தமிழ் மன்னர்கள் மட்டுமின்றிப் பொதுமக்களும் ஏராளமான திருக்கோயில்களை அமைத்தனர். தெய்வத் திருவுருவத்தைத் திருக்கோயிலில் எழுந்தருளச் செய்து, இருந்து அருள் செய்வதற்கான வழிபாட்டு முறைகள் திருக்குட நீராட்டு என வழங்குகிறது. இம்முறை அவ்வப்பகுதிகளின் வழிபாட்டு முறைகட்கு ஏற்ப அமைகின்றன. தமிழகத்தில் திருக்கோயில்கள் பல அமைப்புக்களில் இருக்கின்றன என்பதை அப்பரடிகள் அருளியுள்ளார். ஆங்காங்கே நின்ற இறைவனுக்குக் கோயில் எடுத்துள்ளனர். பத்தினித் தெய்வக் கோயிலைச் சிலப்பதிகாரத்திலும் காணலாம். பெருங்கதையில் கட்டடக் கலையின் அமைப்பு முறைகள் கூறப்படுகின்றன. பெரிய புராணத்தில் பூசலார் புராணத்தில் மனக்கோயில் அமைத்த முறையைச் சேக்கிழார் கூறுகிறார். உள்ளம் பெருங்கோயில், காயமே கோயிலாக என்பன போன்ற அருளிப் பாடுகளைக் காண்கின்றோம்.

பண்டைய முறையில் பக்தியில் சிறந்தோர் எங்கும் பரந்து, எல்லாமாய் விளங்கும் முழுமுதலைத் தாம் எண்ணிய வடிவத்தில் எழுந்தருளச் செய்தனர் என்பது தலபுராணங்களில் காணப் படுவனவாகும். எழுந்தருளச் செய்யும் முறை காலப்போக்கில் வடமொழியில் மட்டுமே நின்று அயல்நெறி மரபுகளாய் நிலை பெற்றன பண்டைக்காலம் முதலே கோயில் அமைத்தல், வழிபாட்டு முறைகள் போன்றவற்றை விளக்கும் நூல்களும் அவ்வப்பொழுதிருந்தே தோன்றி வளர்ந்து வந்துள்ளன. அவை முதலில் தமிழிலும், பிற்காலத்தில் வடமொழியிலும் ஆக்கப் பட்டன. நாளடைவில் தமிழ் நூல்கள் மறைய வடமொழி நூல்கள் நிலைத்தன. இன்று அவையும் அருகி வருகின்றன.

திருமுறைப் பாடல்கள் இறைவன் அருள் பெற்றவர்களால் வழங்கப்பட்டன. எனதுரை தனதுரையாக ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கித் தெய்வத் திருவருள் வடிவாய் நின்று அருளிய பாடல்களாகும்.

இறைவன் வான்பழித்து மண்புகுந்து மனிதரை ஆட்கொள்வ தற்குத் திருமுறைப்பாடல்கள் துணைபுரிகின்றன. வண்ணம் காட்டி வடிவு காட்டித் ஆட்கொண்ட பெருமையைத் திருமுறைப் பாடல்களால் உணர்கிறோம். நம் இல்லங்கள்தோறும் எழுந் தருளிச் செங்கமலப் பொற்பாதம் தந்த நிலையே திருத்தொண்டர் புராண வரலாறுகளாகும். திருக்கோயில்கள், திருவுருவங்கள், வழிபாட்டு முறை ஆகியன பற்றிய செய்திகள் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாகப் பரவி வளர்ந்திருக்கின்றன. பாரதநாடு இமய மலைக்கும், கன்னியாகுமரிக்கும் இடையில் உள்ள நாடு. இந்நாட்டில் பல்வேறு மொழிகளைப் பேசும் மக்கள் தத்தம் மொழியில் இறைவழிபாடு செய்கின்றனர். அவற்றுள் தொன்மை மொழியாகத் திகழ்வது தமிழ். இது உயர்தனிச் செம்மொழி எனப் போற்றப்படுகிறது. தமிழகத்தில் திருக்கோயில்கள் மிகுதியாக உள்ளன.

அறு சமய வழிபாட்டில் சிவநெறியும், திருமால் நெறியும், பெரிதாக இடம்பெறுவன. சிவநெறியில் சக்தி, விநாயகர், முருகன் ஆகியனன இணைந்துள்ளன. பருதி வழிபாடு இருவகை நெறிக்கும் உரியதாகக் கொள்ளுகின்றனர். இத்தகைய வழிபாட் டுக்குரிய முறைமைகளைக் கூறுவது ஆகமம் எனப்படும். இந்நூல் தமிழ்மொழியில் சிறப்பாக விளங்கி அயல் வழக்குகள் புகுந்த

காலத்து வடமொழியாக மாறியிருக்க வேண்டும். சிற்பநூல் தமிழர்களுக்கு முற்றிலும் உரியது என்பதற்குத் தமிழகத்தின் சிற்பக்கலைகள் நிறைந்த கோயில்கள் சான்றாக விளங்கு கின்றன.

சிவபெருமானுக்குத் திருக்கோயில் அமைக்கப்படும்பொழுது அதில் எல்லாத் தெய்வங்களுக்கும் இடம் அளிக்கப்படுகிறது. திருமால், அம்பிகை, பிள்ளையார், முருகன் முதலிய தெய்வங் களுக்குத் தனித்தனியாகவும் சேர்த்தும் திருக்கோயில்கள் அமைக் கப்படுகின்றன. திருமால் கோயில்களில் திருமால், திருமகள், நிலமகள் முதலிய தெய்வங்களுக்கு மட்டுமே திருமேனிகள் நிறுவப் படுகின்றன இவையல்லாமல் ஊர்க்காவல் தெய்வங்களாகச் சில தெய்வங்கள் அமைந்துள்ளன. இவற்றுக்குப் பெரும்பாலும் சிறிய கோயில்கள் அமைப்பது வழக்கம். மேற்குறிப்பிட்ட திருக்கோயில் அமைப்பு முறைகளில் பல விதிமுறைகள் அமைந்துள்ளன. திருக் கோயில் அமைத்தல், அதற்குத் திருக்குட நன்னீராட்டு முறைகள், வழிபாட்டு முறைகள் முதலியவற்றைப் பார்ப்போம். இவை யனைத்தும் தெய்வத் திருமுறைகளின் அடிப்படையிலும் வேறுசில அருள்நூல்களின் துணையிலும் அமைந்துள்ளன. எல்லா நற்செயல் களையும் உரிய காலத்தில் தொடங்குவது முறை. எனவே ஏற்புடைக் காலங்களை முதலில் அறிந்து கொண்டு பிறகு செயல் படுவது நன்மை பயக்கும்.

## ஏற்புடைய காலங்கள்

ஓராண்டில் கதிரவன் நேர்கிழக்கிலிருந்து சற்றுத் தள்ளி வடக்குப் பக்கமாக ஆறு மாதங்களும், தெற்குப் பக்கமாக ஆறு மாதங்களும் இருக்கிறான். பூமியின் சுழற்சியால் நமக்குக் கதிரவன் இவ்வாறு காட்சியளிக்கிறான். இதில் கதிரவன் வடக்கே தெரியும் (உத்தராயணம்) காலம் தை முதல் ஆனி வரை ஆகும். இக்காலத்தில் எல்லா நற்செயல்களையும் செய்யலாம். கதிரவன் தெற்கே தெரியும் (தட்சிணாயணம்) காலம் ஆடி முதல் மார்கழி வரை ஆகும். இக்காலத்தில் செய்வதாக இருந்தால், ஆவணி, ஐப்பசி, கார்த்திகை மாதங்கள் ஏற்புடையன அதே போல் வளர்பிறைக் காலம் ஏற்புடையது தேய்பிறையில் முதல் ஏழாம் நாள்வரை ஏற்புடையது.

## தக்க இடங்கள்

புதிதாகத் திருக்கோயில் அமைக்கும்போது அதற்குத் தக்க நிலத்தைத் தேர்வு செய்ய வேண்டும். அதற்குச் சில வழிமுறைகள் உள்ளன. நல்ல நாளில் பிள்ளையாரை வணங்கி நிலத்தைத் தெரிவு செய்ய வேண்டும். தெரிவு செய்த நிலத்தைத் திருக் கோயில் அமைக்க ஏற்றதாக்க முதலில் நுழைவு வழிபாடு செய்ய வேண்டும் இதை வடமொழியில் பிரவேசபலி (பலி உணவளித்தல்) என்பர்.

## நிலத்தேவர்

சிவபெருமான் அந்தகன் என்னும் அவுணனோடு போரிட்ட பொழுது அவருக்கு ஏற்பட்ட சினத்தால் நெற்றியில் வியர்வை தோன்றியது. அதில் ஒரு துளி நிலத்தில் விழுந்தது. அதிலிருந்து ஒரு பூதம் தோன்றியது. அது சிவபெருமானின் கட்டளைப்படி அந்தகனை அழித்தது. பிறகு சிவபெருமானைக் குறித்து அது தவமிருந்து வரங்கள் பல பெற்றது. வரப்பயனால் அது எல்லா உலகங்களையும் ஆட்டிப் படைக்கத் தொடங்கியது. அனைவரும் சிவபெருமானிடம் புகலடைந்தனர். சிவபெருமான் அதிபல உருத்திரர் என்ற உருத்திரரையும், எட்டு மாயா பாசங்களையும் படைத்துப் பூதத்தை அடக்க ஏவினார். அதிபவர் மாயாபாசங் களால் அதைக் கட்டித் தள்ளினார். பிறகு நான்முகன் முதலான ஐம்பத்து மூன்று தேவர்களை அதன் உடலில் எப்போதும் இருக்கச் செய்தார். ஒவ்வொருவரும் அதன் உடம்பில் ஒவ்வொரு இடத்தில் வாழத் தொடங்கினர். அன்றுமுதல் அது நிலத்தேவர் (வாஸ்து புருசன்) என்ற பெயரைப் பெற்றது.

## நிலத்தேவர் வழிபாட்டு முறைகள்

தெரிவு செய்த இடத்தைச் சாணத்தால் மெழுகிப் பிறகு முறைப்படி ஐந்து நிறைகுடங்கள் வைக்கவும், அதற்கு முன்புறம் சதுரமான புதிய ஒரு வெள்ளைத் துணியை விரிக்கவும். அதன்மீது மஞ்சட்பொடியினால் ஐம்பத்து மூன்று (53) கட்டங்கள் ஏற்படுத்தவும். ($7 \times 7 = 49$ கட்டங்கள், நான்கு மூலைகளில் நான்காக 53 கட்டங்கள்) ஒவ்வொரு கட்டத்திலும் திருநீறு, சந்தனம், குங்குமம், மலர்கள் முதலியவற்றை வைக்கவும். துணியின் நடுவில் தருப்பை முடி வைக்கவும்.

துணிக்கு முன்னால் சதுரமான வெள்ளிக்குண்டம் ஒன்றை அமைக்கவும். குண்டம் தோண்டியோ அல்லது செங்கற்களை அடுக்கியோ அமைக்கலாம். வலதுபுறம் ஒரு மனையை வடக்கு நோக்கியிடவும் இடதுபுறம் ஒரு வாழை இலையை முறைப்படி போட்டு, அதன்மீது பச்சரிசி பரப்பி, அதன்மேல் ஓங்காரத்தையும் திருவைந்தெழுத்தையும் எழுதி ஒரு பூசணிக்காயை அதன்மீது வைக்கவும். அதற்கும் திருநீறு முதலியன இடவும். புதிய மண் கலசத்தில் ஆன் ஐந்தை எடுத்து வைக்கவும். (பசுவின் நெய், தயிர், கோசலம், சாணம்)

நிறைகுடத்திற்கு வலதுபுறம் பிள்ளையார் வைக்கவும். முன்புறம் வைக்கோலால் மனித உருவம் செய்து, அதன் பகுதியில் ஒரு கயிற்றை நீரில் நனைத்துக் கட்டி வைக்கவும். அதற்கும் திருநீறு முதலியவற்றை இட்டு ஒரு சிறிய புத்தாடையைச் சுற்றி வைக்கவும்.

முதலில் பிள்ளையார் வழிபாடு செய்யவும். அப்பொழுது

''உருகும் அடியார் அள்ளூற உள்ளே ஊறும் தேன்வருக
உண்ணத்தெவிட்டாச் சிவானந்த ஒளியே வருக புலன்வழி போய்த்
திருகும் உள்ளத்தார் நினைவினுக்கும் சேயாய் வருக எமை
ஆண்ட செல்வா வருக உமை ஈன்ற சிறுவா வருக இணைவிழியால்
பருகும் அமுதே வருக உயிர்ப்பைங்கூழ் தழைக்க கருணை
மழை பரப்பும் முகிலே வருக நறும்பாகே வருக வரைகிழித்த
முருகவேட்கு முன் உதித்த முதல்வா வருக வருகவே
மூரிக்கலசைச் செங்கழுநீர் முனிவா வருக வருகவே''

'பிடியதனுரு வுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே''

—சம்பந்தர் தேவாரம்

''இன்ப மாயது அறாதிடை ஓங்கவும்
துன்ப வாயது தூரத்துள் நீங்கவும்
முன்பயா பரன் மொய்குழலோடணைந்து
அன்பின் ஈன்றதோர் ஆனையைப் போற்றுவாம்''

—சாந்தலிங்க சுவாமிகள்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றினை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே —திருமந்திரம்

உம்பர் தருத் தேனு மணிக்கசிவாகி
ஒண்கடலில் தேனமுதத் துணர்வூறி
இன்பரசத்தே பருகிப் பலகாலும்
எந்தனுயிர்க் காதரவுற் றருள் வாயே
தம்பி தனக்காக வனத்தணைவோனே
தந்தை வலத்தால் அருள்கைக் கனியோனே
அன்பர் தமக்கான நிலைப் பொருளோனே
ஐந்துகரத்தானை முகப்பெருமாளே —திருப்புகழ்

முதலிய பாடல்களைப் பாடவும்.

பிற்கு ஆனைந்திற்கு வழிபாடு செய்யவும். ஆனைந்து வைக்கப்பட்டுள்ள கலத்திற்குத் திருநீறு முதலியவற்றை இடவும். அதனுள் ஒரு மாவிலைக் கொத்தையும், தருப்பையையும் இடவும். பிறகு அதற்கு நறும்புகை முதலியவற்றைக் காட்டி வழிபட்டு மலர்தூவி வாழ்த்தவும்.

பாவமும் பழி பற்றற வேண்டுவீர்
ஆவிலஞ்சுகந்தாடும் அவன்கழல்
மேவராய் மிகவும் மகிழ்ந்துள்குமின்
காவலாளன் கலந்தருள் செய்யுமே — தேவாரம்

பூவினுக்கருங்கலம் பொங்குதாமரை
ஆவினுக்கருங்கலம் அரன் அஞ்சாடுதல்
கோவினுக்கருங்கலம் கோட்டமில்லது
நாவினுக்கருங்கலம் நமச்சிவாயவே

—அப்பர் தேவாரம்

என்னும் பாடல்களை ஓதி வழிபடவும். மாவிலையால் ஆனைந்தை எல்லா இடங்களிலும், எல்லாப் பொருட்களின் மீதும் தெளிக்கவும். பிறகு நிறைகுடங்களுக்கு வழிபாடு செய்ய வேண்டும்.

எல்லா உலகமும் ஆனாய் நீயே
ஏகம்பம் மேவி இருந்தாய் நீயே
நல்லாரை நன்மை அறிவாய் நீயே
ஞானச்சுடர் விளக்காய் நின்றாய் நீயே
பொல்லாவினைகள் அறுப்பாய் நீயே
புகழ்ச் சேவடியென் மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வம் தருவாய் நீயே
திருவையா றகலாத செம்பொற்சோதி

—அப்பர் தேவாரம்

சாதனத்தோடு தச்சர் தம்மையும் மனத்தால் தேடி
நாதனுக்கு ஆலயம் செய்நலம்பெறு நன்னாட் கொண்டே
ஆதரித்தாகமத்தால் அடிநிலை பாரித்தன்பால்
காதலிற் கங்குல் போதும் கண்படாதெடுக்கலுற்றார்

—சேக்கிழார் பெரியபுராணம்

என்னும் பாடல்களை ஓதி நிறைகுடங்களுக்கு மலர்தூவி வழிபடவும். பிறகு,

வெந்த குங்கிலியப் புகை விம்மவே
கந்தம் நின்றுலவும் கழிப்பாலையார்
அந்தமும் அளவும் அறியா ததோர்
சந்தமாலவர் மேவிய சாந்தமே —சம்பந்தர் தேவாரம்

என்னும் பாடலை ஓதி நறும்புகை காட்டி மலர்தூவி வழிபடவும். பிறகு துணியிலுள்ள ஒவ்வொரு கட்டத்திலும் ஐந்தெழுத்தை ஓதி அமுதைச் சிறிது சிறிதாக வைக்கவும். பிறகு அதற்கும் நறும்புகை முதலியன காட்டி மலர்தூவி வழிபடவும்.

முறைப்படி வேள்விக் குண்டத்தில் எரி வளர்க்கவும். சிவபுராணம், கோளறு பதிகம் முதலியவற்றை ஓதி நெய் வார்க்கவும். மாவிலையாலே நெய் வார்க்கவும்.

''இருநிலனாய்த் தீயாகி நீருமாகி
இயமானனாய் எறியுங் காற்றுமாகி
அருநிலைய திங்களாய் ஞாயிறாகி
ஆகாசமாய் அட்டமூர்த்தியாகிப்

பெருநலமும் குற்றமும் பெண்ணும் ஆணும்
பிறருவும் தம்முருவும் தாமேயாகி
நெருநலையாய் இன்றாகி நாளையாகி
நிமிர்புன் சடையடிகள் நின்றவாறே''

—அப்பர் தேவாரம்

என்னும் பாடலை ஓதவும்.

பிறகு எண்திசைக் காவலர்களுக்கு முறைப்படி அமுதூட்டவும். நெய்யாலேயே நிறையவி (பூர்ணாகுதி) அளிக்கலாம். பிறகு நறும் புகை காட்டவும். விளக்குக் காட்டி,

இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி உள்ளது
பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே

—அப்பர் தேவாரம்

என்னும் பாடலை ஓதி மலர் தூவி வழிபாடு செய்யவும். அதே போல் பூசணிக்காய், வைக்கோல் உருவம் ஆகியவற்றுக்கும் கருப்பூர ஒளி காட்டவும். பிறகு பூசணிக்காயை எட்டுத் துண்டு களாக்கிக் குங்குமம் தடவி ஒரு தட்டில் எடுத்து வைததுக் கொள்ளவும். நடுவிலுள்ள நிறைகுடத்தை எடுத்து அதில் மற்ற நான்கு நிறைகுடங்களிலுள்ள நீரைச் சிறிது கலக்கவும், நிறைகுட நீரை வைக்கோல் உருவின் மீது சிறிது தெளிக்கவும். பிறகு அதை வேள்வித் தீயில் காட்டி நெருப்பு அதில் பற்றும்படி செய்யவும். ஒருவர் நிறைகுட நீரையும், மற்றொருவர் பூசணித் துண்டு களையும் எடுத்துக் கொள்ளவும். இன்னொருவர் வைக்கோல் உருவை இழுத்து வர வேண்டும். அப்பொழுது,

உருவளர் பவளமேனி ஒளிநீறணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி செயமாது பூமி
திசை தெய்வமான பலவும்
அருநெறிநல்ல நல்ல அவை நல்லநல்ல
அடியாரவர்க்குமிகவே

நஞ்சணி கண்டன் எந்தை மடவாள் தனோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடும் உருமிடியும் மின்னும்
மிகையான பூதமவையும்
அஞ்சிடும் நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியாரவர்க்கு மிகவே

என்னும் பாடல்களை ஓதியபடி திருக்கோயிலை வலமாகச் சுற்றிக் கொண்டு வரும்பொழுது எட்டுத் திசைகளிலும் நிறைகுடநீரைச் சிறிது தெளித்து அதன்மீது ஒரு பூசணித் துண்டை வைக்கவும். இறுதியில் வடகிழக்கு மூலையில் எஞ்சிய உருவை முழுவதும் எறியும்படி செய்ய வேண்டும். நிறைகுடநீரை எல்லா இடங் களிலும் தெளிக்கவும். இவ்வாறு தூய்மையாக்கிய நிலத்தில்தான் பணிகளைத் தொடங்க வேண்டும்.

## இளங்கோயில் அமைத்தல் (பாலாலயப் பிரதிஷ்டை)

புதியதாகத் திருக்கோயிலை அமைத்தாலும், பழுதடைந்த திருக்கோயிலைப் புதுப்பித்தாலும் முதலில் இளங்கோயில் அமைக்க வேண்டும். இளங்கோயில் கோயிலின் வடக்கு, வடகிழக்கு. கிழக்கு ஆகிய திசைகளில் அமையலாம். கருவறையின் பாதி அளவுக்கு இளங்கோயிலின் கருவறை அமையலாம். இயங்கு ராசியில் இளங்கோயில் பணிகளை மேற்கொள்வது ஏற்புடையது.

இளங்கோயிலில் அமைய இருக்கும் தெய்வத் திருமேனிகளை கருங்கல், உலோகம், மரம் முதலியவற்றால் செய்யலாம். மரமே அதிகமான வழக்கில் உள்ளது. புரசு (பலாசு அல்லது முருக்கு) ஆல், அரசு, அத்தி, இலுப்பை, பலா, கல்லால், ஆச்சா, சந்தனம், கருங்காலி, தேவதாரு, பவளமல்லிகை முதலியன இதற்குப் பயன்படுவன. அத்திமரம் அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது.

சிவபெருமானுக்கு இளங்கோயில் திருமேனியை அமைக்கும் போது பீடம் முதலியன இன்றிப் பாணம் மட்டும் அமைத்தால் போதும். அம்பிகை, பிள்ளையார், முருகன் முதலிய தெய்வங் களுக்கு உருவங்களாக அமைக்க வேண்டும். அம்பிகைக்குத் திரிசூலம் அமைத்தலும் போதுமானது. ஒவ்வொரு தெய்வத்

திற்கும் உரிய வாயில் காவலர்கள், ஊர்திகள் (வாகனங்கள்), அடியார்கள், சண்டிகேசுவரர்கள் முதலியோரை அத்தெய்வத் திருமேனியிலேயே ஒடுக்கிக் கொள்ளலாம். கோபுரங்கள், விமானங்கள் முதலியவற்றுக்குத் தனித்தனியே அத்திப் பலகைகளில் எழுதப்பட்ட உருவங்கள் அல்லது முகம் பார்க்கும் கண்ணாடிகளில் எழுதப்பட்ட உருவங்கள் இளங்கோயில் திருமேனிகளாக அமையும்.

''இன்ப நிலையை எமக்கருள்வாய்
அன்பால் நினைவோம் அருளுகதேவே''
தொழுவார்க்கிரங்கு இருந்தருள் புரிவாய்
முழுமுதலே இத்தெய்வாகி முன்னின்றது
இளங்கோயிற்கு எழுந்தருளுக
உளநெகிழ்ந்தேத்துவம் உவந்தெழுந்தருள்க

என்று கூறித் தேவரீர் திருக்கோயில் பணிகள் தொடங்கி நிறைவடையும் வரை இளங்கோயிலில் திருவுருச் சேர்ந்து அருள் புரிய வருக என வேண்டுகின்றோம் என்று கூறவும். அப்பொழுது,

''ஓசை ஒளியெலாம் ஆனாய் நீயே உலகிற்கு ஒருவனாய் நின்றாய் நீயே
வாசமலரெலாம் ஆனாய் நீயே மலையான் மருகனாம் நின்றாய் நீயே
பேசப்பெரிதும் இனியாய் நீயே பிரானால் அடியென்மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கெலாமானாய் நீயே திருவையாறகலாத செம்பொற்சோதி''

—அப்பர் தேவாரம்

(ஒரு பாடலோ அல்லது முழுப்பதிகமோ பாடலாம்)

''அம்மையே அப்பா ஒப்பிலாமணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையேயாய சிவபதமளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவதினியே''

''பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறம்திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப்பிடித்தேன்
எங்கெழுந்தருளுவதினியே'' —திருவாசகம்

''பெருக்காறு சடைக்கணிந்த பெருமான்சேரும்
பெருங்கோயில் எழுபதினோடெட்டும் மற்றும்
கரக்கோயில் கடிபொழில்சூழ் ஞாழற்கோயில்
கருப்பறியல் பொருப்பனைய கொகுடிக் கோயில்
இருக்கோதி மறையவர்கள் வழிபட்டேத்தும்
இளங்கோயில் மணிக்கோயில் ஆலக்கோயில்
திருக்கோயில் சிவனுறையும் கோயில் சூழ்ந்து
தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீருமன்றே''

—அப்பர் தேவாரம்

முதலிய பாடல்களை ஓதி வழிபடவும்

# திருக்குட நீராட்டுப் பெருவிழாவின் வகைகள்

1. தொடக்கத் திருக்குட முழுக்கு:

புதியதாகத் திருக்கோயில் அமைத்து முறைப்படி குடமுழுக்) நடத்துவதற்குத் தொடக்கத் திருக்குடமுழுக்கு (அனாவர்த்தனம் என்று பெயர்.

2 திருத்திய திருக்குட முழுக்கு:

பழைய காலத்தில் கட்டப்பட்டு, வழிபாடுகள் முதலியன இன்றித் திருக்கோயில் மிகவும் பாழ்பட்டிருந்தால், அதைத் திருத்திச் செய்யப்படும் குடமுழுக்கிற்குத் திருத்திய குடமுழுக்கு (ஆவர்த்தனம்) என்று பெயர்.

3. மறு திருக்குடமுழுக்கு:

கோபுரம், கருவறை, திருச்சுற்று (பிரகாரம்), பலிமேடை (பலிபீடம்), கொடிமரம், திருமேனிகள் முதலியவற்றில் குறை ஏற்பட்டிருந்தாலும், முன்பு சாத்தப்பட்ட எண்வகை மருந்துக் கலவை சிதைந்திருந்தாலும், விமானம் முதலியவற்றின் வண்ணம் அழிந்திருந்தாலும் முறைப்படி இளங்கோயில் அமைத்துக் குடமுழுக்குச் செய்ய வேண்டும் இப்படிச் செய்யும் குடமுழுக்கிற்கு மறுதிருக்குடமுழுக்கு (புனராவர்த்தனம்) என்று பெயர்.

4. எளிய திருக்குடமுழுக்கு:

திருக்கோயில் வளாகத்தில் எதிர்பாராத மரணம் நேரிட்டாலும், தூய்மையற்றவை நிகழ்ந்து விட்டாலும், திருக்கோயிலைக் கழுவித் தூய்மையாக்கி, நிறைகுடம் வைத்து தூய்மை வேள்வி செய்து அத்திருக்குடநீரைத் திருக்கோயில் முழுவதும் தெளித்துத் தூய்மை செய்ய வேண்டும். இதற்கு எளியகுட முழுக்கு (அந்தரீதம்) என்று பெயர்.

பழைய தெய்வத் திருமேனிகளைத் தூய்மையாக்கும் முறைகள்

பழைய கருங்கல் திருமேனிகளில் எண்ணெய்ப் பிசுக்கு முதலியன கெட்டியாக அப்பிக் கொண்டிருக்கும். சில உருவங்களே தெரியாதபடி இவை மூடியிருக்கும். இவற்றை நீக்கக்

கத்தி, தகடு, கம்பி, நகம் முதலியவற்றைப் பயன்படுத்தலாகாது. அதற்காக மாக்காப்பு முறையைக் கையாள வேண்டும். பச்சரிசியை ஊற வைத்து நன்றாக ஆட்டி வைத்துக் கொள்ளவும். இது குழைவான நிலையில் இருக்க வேண்டும். இதை மூன்று நாட்கள் புளிக்கும்படி வைத்திருக்க வேண்டும். அது போலவே மாட்டுத் தயிரை மூன்று நாட்கள் வைத்திருந்து புளிக்கச் செய்யவும். இரண்டையும் நன்கு கலக்கித் தெய்வத் திருமேனிகளில் இடைவெளியின்றிப்பூசி ஒருநாள் விடவும், பிறகு மாக்கலவையை நீக்கினால் எண்ணெய்ப் பற்றுக்கள் அத்தோடு சேர்ந்து வந்து விடும். பிறகு தூய நீராலும், குச்சுப் புல்லாலும் திருமேனியை நன்கு தூய்மைப்படுத்திக் கொள்ளலாம். நீண்ட நாட்களாகத் திருமஞ்சனம் முதலியன நடைபெறாத உலோகத் திருமேனிகள் நாளடைவில் கறுத்து அழுக்குப் படிந்து கிடக்கும். இவற்றை நீக்கப் புளிக்கரைசல், எலுமிச்சம் பழச்சாறு, நாரத்தம் பழச்சாறு, புளித்த தயிர் திருநீறு முதலியவற்றைப் பயன்படுத்தலாம்.

## புதிய தெய்வத் திருமேனிகளைத் தூய்மைக்கும் முறைகள்

திருக்கோயில் நிறுவ இருக்கும் புதிய கருங்கல் திருமேனிகளைப் பாதுகாப்பான நீர்நிலைகளில் வைத்து நீர்நிரப்ப வேண்டும், அல்லது தொட்டிகளில் வைத்து நீர் நிரப்ப வேண்டும். நாற்பத்தெட்டு நாட்கள் நீரில் வைத்திருக்க வேண்டும். இதற்கு நீர் இருப்பு (ஜலவாசம்) என்று பெயர். புதிய உலோகத் திருமேனிகளை இவ்வாறு வைக்க வேண்டியதில்லை. இனிவரும் மற்ற இருப்புகள், கண் திறத்தல் முதலியன எல்லாத் திருமேனிகளுக்கும் உரியன.

மலர் இருப்பு (புஷ்ப வாதம்), செல்வ இருப்பு (தனவாசம்). படுக்கை (சயனம்), கண்திறத்தல் (நயனோன் மீலனம்) முதலியன.

திருக்குட முழுக்கு நடைபெறும் நாளுக்கு முந்தைய நாள் இரவு திருமேனிகளை உரிய இடத்தில் நிறுவ வேண்டும் அதற்கு முன்னால் மேற்சொன்ன இருப்புகளையும், கண் திறத்தலையும் செய்ய வேண்டும். இதற்காகத் திருக்கோயிலில் அல்லது வேள்வி மண்டபத்தில் திருமேனிகளுக்கு ஏற்பப் புதிய போர்வைகளை விரிக்கவும். அவற்றின் மீது தருப்பை, மலர்கள், வில்வம், புதிய காசுகள் முதலியவற்றைத் தூவித் திருமேனிகளை, தலை மேற்கிலும், கால்கள் கிழக்கிலும் இருக்கும்படி கிடத்தவும்.

திருமேனிகளின் மீதும் தருப்பை, மலர்கள், வில்வம், புதிய காசுகள் முதலியவற்றைத் தூவவும். பிறகு வேறு புதிய போர்வைகளால் சிறிது நேரம் திருமேனிகளை மூடவும். பிறகு சிற்பியை அழைத்துத் திருமேனிகளின் கண்களைத் திறக்கச் செய்யவும். சிற்பி இல்லாவிட்டால், தருப்பைப் புல்லின் நுனியால் யார் வேண்டுமானாலும் கண் திறக்கலாம். இதற்காகச் சிறிது தருப்பையைச் சுட்டுச் சாம்பலாக்கி நெய்யில் குழைத்து வைத்துக் கொள்ளவும். அருகில் ஒரு புதிய முகம் பார்க்கும் கண்ணாடியை வைத்துக் கொள்ளவும்.

கண் திறத்தலை மற்றவர்கள் பார்க்கக் கூடாது. எனவே, கண் திறப்பவர் திருமேனி மேலிருக்கும் போர்வையால் தன்னையும் (தலைப் பகுதியை) மூடிக் கொண்டு புதிய தருப்பைப் புல்லின் நுனியில் மேற்சொன்ன தருப்பையைத் தொட்டுக் கண்களின் நடுவில் வைக்க வேண்டும். முதலில் வலது கண் பிறகு இடது கண் எனத் திறக்கவும். பிறகு உடனே திருமேனியின் முகத்திற்கு நேராகக் கண்ணாடியைக் காட்டவும். (அதாவது திருமேனிகள் முதலில் தம்மையே பார்த்துக் கொள்கின்றன என்பது. இதன் திறந்த கண்களின் மீது சிறிது மாட்டு வெண்ணெயைப் பூசவும். தூய சந்தனத்தையும் பூசலாம். இவ்வாறு எல்லாத் திருமேனிகளுக்கும் கண் திறந்தவுடன்,

''வடிவேறு திரிசூலம் தோன்றும் தோன்றும் வளர்சடைமேல்
இளமதியந் தோன்றும் தோன்றும்
கடியேறு கமழ்கொன்றைக் கண்ணி தோன்றும் காதில்
வெண்குழைதோடு கலந்து தோன்றும்
இடியேறு களிற்றுரிவைப் போர்வை தோன்றும் எழில்திகழும்
திருமுடியும் இலங்கித் தோன்றும்
பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும் பொழில்திகழும்
பூவணத்தெம் புனிதனார்க்கே

—அப்பர் தேவாரம்

''ஆட்டுவித்தால் ஆரொருவராடாதாரே அடக்குவித்தால்
ஆரொருவர் அடங்காதாரே
ஓட்டுவித்தால் ஆரொருவர் ஓடாதாரே உருகுவித்தால்
ஆரொருவர் உருகாதாரே

*பாட்டுவித்தால் ஆரொருவர் பாடாதாரே பணிவித்தால்*
*ஆரொருவர் பணியாதாரே*
*காட்டுவித்தால் ஆரொருவர் காணாதாரே காண்பாரார்*
*கண்ணுதலாய்க் காட்டாக்காலே''*

*—அப்பர் தேவாரம்*

என்னும் பாடல்களை ஓதியபடி கருப்பூரவொளி காட்டவும். பிறகு மலர்தூவி வாழ்த்தி வணங்க வேண்டும். அடுத்ததாகத் திருமேனிகளை நன்கு நீராட்டி உரிய இடங்களில் பொருத்தி எண் வகை மருந்துகளைச் சாத்த வேண்டும்

## திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாச் செயல்முறைகள்

**பிள்ளையார் வேள்வி :**

திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாத் தொடங்கும் நாளில் காலையில் பிள்ளையார் வேள்வி செய்வது முறை. இது இடையூறுகள் அகலும் பொருட்டுச் செய்யப்படுவது. முறைப்படி ஒரு வேள்விக்குண்டம் அமைத்து வேள்வி செய்ய வேண்டும். வேள்விக் காலத்தில்,

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

—திருமந்திரம்

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்—உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர் தங்கை

என்னும் பாடல்களையும் பிடியதன். இன்பமாயது, உம்பர்தருந் தேனு எனத் தொடங்கும் பாடல்களையும், விநாயகர் அகவலையும் ஓதவும். மேலும்,

பந்தம் அகற்றும் அனந்த குணபரப்பும்
எவன்பால் உதிக்குமோ
எந்த உலகு எவனிடத்தில் ஈண்டிஇருந்து கரக்குமோ
சந்தமறை ஆகமக்கலைகள் அனைத்தும் எவன்பால்
தகவருமோ
அந்த இறையாம் கணபதியை அன்பு கூரத்தொழுகின்றோம்

உலகம் முழுதும் நீக்கமற ஒன்றாய் நிற்கும் பொருள்எவன்அவ்
உலகில் பிறக்கும் விகாரங்கள் உறாத மேலாம் ஒளியாவன்
உலகம் புரியும் வினைப்பயனை ஊட்டும் களைகண்
எவன்அந்த
உலக முதலைக் கணபதியை உவந்து சரணம் அடைகின்றாம்

இடர்கள் முழுதும் எவனருளால் எரிவீழ்பஞ்சி எனமாயும்
தொடரும் உயிர்கள் எவனருளால் சுராவாழ்பதியும்
உறச்செய்யும்
கடவுள் முதலோர்க்கு ஊறுஇன்றிக் கருமம் எவனால்
முடிவுறும்அத்
தடவுமருப்புக் கணபதி பொற்றாள் சரணம் அடைகின்றாம்

மூர்த்தியாகித் தலம்ஆகி முந்நீர் கங்கைமுதலான
தீர்த்தமாகி ஆகிஅறிந்து அறியாத் திறத்தினாலும்
உயிர்க்குநலம்
ஆர்த்திநாளும் அறியாமை அகற்றி அறிவிப்பான் எவன்அப்
போர்த்த கருணைக் கணபதியைப் புகழ்ந்து சரணம்
அடைகின்றாம்

செய்யும் வினையின் முதல்யாவன் செய்யப்படும்
அப்பொருள் யாவன்
ஐயம் இன்றி உளதாகும் அந்தக் கருமப் பயன்யாவன்
உய்யும் வினையின் பயன்விளைவின் ஊட்டி விடுப்பான்
எவன்அந்தப்
பொய்யில் இறையைக் கணபதியைப் புகழ்ந்து அடைகின்றாம்

வேதம் அளந்தும் அறிவரிய விகிர்தன் யாவன் விழுத்தகைய
வேத முடிவில் நடம் நவிலும் விமலன் யாவன் விளங்குபர
நாதமுடிவில் வீற்றிருக்கும் நாதன் எவன் எண்குணன்
எவன்அப்
போதமுதலைக் கணபதியைப் புகழ்ந்து சரணம்
அடைகின்றாம்

*மண்ணின் ஓர் ஐங்கணப் ஆகிவதிவான் நீர்இடை நான்காய்*
*நண்ணி அமர்வான் எவன் தீயின்மூன்றாய் நவில்வான்*
*எவன்வளியின்*
*எண்ணும் இரண்டு குணம்ஆகி இயைவான் எவன்வான்*
*இடை ஒன்றாம்*
*அண்ணல் எவன் அக்கணபதியை அன்பில் சரணம்*
*அடைகின்றாம்*

*பாசஅறிவில் பசுஅறிவில் பற்றற்கு அரிய பரன்யாவன்*
*பாசஅறிவும் பசுஅறிவும் பயிலப்பணிக்கும் அரன்யாவன்*
*பாசஅறிவும் பசுஅறிவும் பாற்றி மேலாம் அறிவான*
*தேசன் எவன் அக்கணபதியைத் திகழச் சரணம்*
*அடைகின்றாம்*

என்னும் கச்சியப்ப முனிவரின் விநாயகர் புராண விழிபாட்டுப் பர்டல்களை ஓதியபடி நெய், மும்மதுரம் (தேங்காய்க் கீற்றுடன் கலந்து இடப்படும் கரும்புச் சருக்கரை தேன், நெய் என்பன) பசுமையான அருகம்புல், எண்ணமுது, (அஷ்டதிரவியம்) (எண்ணமுது : கொழுக்கட்டை, அவல், நெற்பொரி, சத்துமாவு, கரும்புத்துண்டு, தேங்காய்க் கீற்று, எள், வாழைக்கனி என்பன) முதலியவற்றை இட்டு வேள்வி செய்யவும். அமுதூட்டவும் எண்ணமுதையே பயன்படுத்தலாம். பிறகு எண்திசைக் காவலர் களுக்கு முறையாக அமுதூட்டி நிறை அவி அளிக்கவும் நறும்புகை முதலியவற்றைக் காட்டி மலர்தூவி வாழ்த்தி வணங்கவும். வேள்வியில் விளைந்த அருட்சத்தியை முறைப்படி நிறைகுடத்திற்கு எழுந்தருளச் செய்து, தருப்பை மையிட்டு மலர் தூவவும். நிறை குடநீரை எல்லா இடங்களிலும் தெளிக்கவும்,

## வேள்வி மண்டபத்தில் வேள்விக்குண்டம் அமைத்தல்

திருக்கோயிலின் வடகிழக்கே (ஈசானதிசை) வேள்வி மண்டபம் அமைய வேண்டும். சிற்ப ஆசிரியரைக் கொண்டு, தேவைப்படும் அளவிற்கு வேள்வி மண்டபத்தை அமைத்துக் கொள்ள வேண்டும். திருக்கோயிலில் உள்ள இராச கோபுரங்கள், விமானங்கள், தெய்வத் திருமேனிகள் முதலியவற்றுக்கு ஏற்ப வேள்வி மேடைகளையும், வேள்விக் குண்டங்களையும் ஏற்புடைய வகையில் அமைத்துக் கொள்ள வேண்டும். வைக்கும் நிறை குடங்களுக்கு ஏற்ப வேள்வி மேடைகள் போதிய பரப்பளவில் இருக்க வேண்டும்.

ஒன்பான்குண்டம் (நவகுண்டம்) அமைக்கும்போது மேடைக்குக் கிழக்குத் தொடங்கி, வடகிழக்கு வரை முறையே சதுரம், அரசிலை, அரைவட்டம், முக்கோணம், வட்டம், அறுகோணம், தாமரைப்பூ வடிவம் (பத்மம்), எண்கோணம் என அமைக்கவும். கிழக்கு வடகிழக்கு ஆகிய திசைகளின் நடுவே வட்டம் அல்லது சதுர வடிவில் ஒரு குண்டம் அமைக்கவும். இதுவே தலைமை வேள்விக் குண்டமாகும்.

ஐந்து குண்டங்கள் (பஞ்சகுண்டம்) அமைக்கும்போது குண்டங்கள் கிழக்கு (சதுரம்), தெற்கு (அரைவட்டம்), மேற்கு (வட்டம்), வடக்கு (தாமரைப்பூ வடிவம்), வடகிழக்கு (வட்டம் அல்லது சதுரம்) என அமையும். ஒரே குண்டம் (ஏக குண்டம்) அமைத்தால் வடகிழக்கே (வட்டம் அல்லது சதுரம்) அமைக்க வேண்டும்.

## நிறைகுடங்களை அமைக்கும் முறை

இராசகோபுரங்கள் இருந்தால் ஒவ்வொரு கோபுரத்திற்கும், தனித்தனி மேடையும், அவற்றுக்கு ஒற்றைப்படை எண்ணிக்கையில் வேள்விக் குண்டங்களும் அமையும் கோபுரக் குடங்களுக்கு ஏற்ப நிறைகுடங்களின் எண்ணிக்கை இருத்தல் வேண்டும். விமானங்களுக்கு உரிய நிறைகுடங்களை அந்தந்தத் தெய்வங்களின் நிறைகுடங்களோடு ஒரே மேடையில் வைத்துக் கொள்ளலாம். ஒவ்வொரு தெய்வத்திற்கும் உரிய வாயில் காவலர்கள், ஊர்திகள், அடியார்கள் முதலியோர்க்குரிய நிறை குடங்களையும், அவ்வத் தெய்வங்களுக்குரிய நிறைகுடங்களோடு சேர்த்தே வைக்கலாம். ஊர்திகள் முதலியவற்றுக்கு விமானங்கள் இருந்தால் அவற்றுக்குரிய நிறைகுடங்களையும் இவற்றோடு சேர்த்தே வைத்துக் கொள்ளலாம்.

சண்டிகேசுவரர், அதிகார நந்தி, முதலியோர்க்குத் தனித் தனியாகவோ அல்லது சிவபெருமானின் நிறைகுடங்களோடு சேர்த்தோ நிறைகுடங்களை அமைக்கலாம். ஒன்பான் கோள் களுக்குத் தனித்தனி மேடையமைத்து நிறைகுடங்கள் வைக்கலாம். தனிக்கோயில் சூரியன், சந்திரன், சனி முதலியோர்க்கும் இம்மேடையிலேயே தனித்தனிக் குடங்கள் வைத்துக் கொள்ளவும். மற்றவற்றைச் சூழ்நிலைகளுக்கு ஏற்பச் செய்ய வேண்டும். வேள்வி மண்டபத்தின் எண்திசைகளில் எண்திசைக்

காவலர்களுக்கு நிறைகுடங்கள் அமைக்கவும். உலோகத் திருமேனிகளைப் பொறுத்தவரை, திருமுழுக்காட்டும்பொழுது அவற்றுக்குரிய மூலத்திருமேனிகளோடு சேர்த்து வைத்தே எல்லாவற்றையும் செய்து நீராட்ட வேண்டும் ஆயினும் சேயிடைச் செல்வர் (சோமாஸ்கந்தர்), அம்பலவாணர் (நடராஜர்), அம்மையப்பர் (அர்த்தநாரீஸ்வரர்) முதலிய தெய்வத் திருமேனிகளுக்குத் தனி மேடையமைத்து வேள்வி செய்வதே சிறந்தது

ஒவ்வொரு வேள்விக் குண்டத்தின் பக்கத்திலும் ஒரு மணை இருக்க வேண்டும். அரசு, ஆல், அத்தி, மா, அறுகு. தருப்பை, நாயுருவி, புரசு, வெள்ளெருக்கு, கருங்காலி, சந்தனம், அகில், வன்னி முதலிய வேள்விக் குச்சிகள் (சமித்துக்கள்) வேள்விக் குண்டங்களுக்கு அருகில் வைக்கப்பட்டிருக்க வேண்டும். தருப்பைக் கட்டு ஒன்றும் இருக்க வேண்டும் வேள்வித் துடுவைகள் (சிருக்கு, சிருவம்), நெய்க்கலன், மணி, தூபக்கால், நீர் நிறைந்த செம்பு, மலர்கள், அருகு, வில்வம். தட்டு, கைவிளக்கு, திருநீறு, சந்தனம், குங்குமம், மஞ்சளரிசி, மஞ்சள், சாம்பிராணி, கருப்பூரம், பழங்கள் முதலிய பொருட்களும் அருகில் வைக்கப்பட்டிருக்க வேண்டும், இன்னும் வேண்டிய பொருட்களை அருகில் சேமித்து வைத்துக் கொள்ளவும்.

## வேள்வி மண்டபச் செயல்முறைகள்

**ஆணை பெறுதல் :**

மாலையில் வேள்வி மண்டபத்தில் முதலில் செய்ய வேண்டியது ஆணை பெறுதல் என்னும் செயற்பாடாகும். திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவை நடத்தும் ஒரு நல்லாசிரியரைத் தெரிவு செய்து இறைவனுடைய ஆணையைப் பெற்று அவரை நியமிக்க வேண்டும். இறைவனுடைய ஆணையைப் பெறுதலென்பது, மனத்தால் பெற்றதாகப் பாவிக்கும் பாவனையாகும். அப்பொழுது,

தூண்டு சுடரனைய சோதி கண்டாய்
தொல்லமரர் சூளாமணிதான் கண்டாய்
காண்டற்கரிய கடவுள் கண்டாய் கருதுவார்க்கு
ஆற்ற எளியான் கண்டாய்

வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்
மெய்ந்நெறி கண்டாய் விரதமெல்லாம்
மாண்ட மனத்தார் மனத்தான் கண்டாய்
மறைக் காட்டுறையும் மணாளத்தானே.

—அப்பர் தேவாரம்

தேனமர் பொழில்கொளாலை விளை செந்நெல்துன்னி
வளர்செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிரமாபுரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும்நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே

—சம்பந்தர் தேவாரம்

என்னும் பாடல்களை ஓதவும்.

## பிள்ளையார் வழிபாடு (கணபதி பூசை)

மஞ்சள் அல்லது மாட்டுச் சாணத்தால் பிள்ளையார் பிடித்து ஒரு இலை மீது வைக்கவும். பிள்ளையாருக்குத் திருநீறு முதலிய வற்றையும் அறுகு, மலர்கள் முதலியவற்றையும் அணிவிக்கவும். பிள்ளையாரின் மீது அறுகு முதலியவற்றைக் குத்தி வைக்கக் கூடாது. பிள்ளையாருக்கு நறும்புகை முதலியவற்றைக் காட்டி மலர்தூவி வாழ்த்தி வணங்கவும், எல்லா இடையூறுகளையும் நீக்கியருளும்படி வேண்டிக் கொண்டு, 'ஐந்து கரத்தனை' என்று தொடங்கும் பாடலை ஓதவும்.

## நிலத்தேவர் வழிபாடு

நிலத்தேவர் வழிபாட்டை முன்பு விளக்கிய முறைப்படி செய்யவும்.

## மண்ணெடுத்தல

தூய இடங்களில் வளர்ந்துள்ள தருப்பை, அரசு, ஆல், அத்தி, வில்வம், புற்று முதலியவற்றுக்குக் கீழிருக்கும் ஏதாவது ஒரு

மண்ணை எடுத்து வர வேண்டும் இதற்கு முதலில் எண்திசைக் காவலர்களின் ஆணையைப் பெற வேண்டும். குறிப்பிட்ட இடத்திற்குச் சென்று முதலில் அலகிட்டு (பெருக்கி), தூய நீர் தெளிக்கவும். பிறகு,

ஊரார் வந்தார் அமரர்குழாத்தில் அணியுடை ஆதிரைநாள்
நாராயணனொடு நான்முகன் அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர்குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும் பல்லாண்டு கூறுதுமே.

—திருப்பல்லாண்டு

என்னும் பாடலை ஓதி மலர்தூவி எண்திசைக் காவலர்கள் மண்ணெடுக்க உடன்பட்டதாக எண்ணவும்.

மண்ணதனில் ஐந்தை மாநீரில் நான்கை
வயங்கெரியில் மூன்றை மாருதத்திரண்டை
விண்ணதினில் ஒன்றை விரிகதிரைத் தண்மதியைத்
தாரகைகள் தம்மின் மிக்க
எண்ணதனில் எழுத்தை ஏழிசையைக் காமன்
எழிலழிய எரியுமிழ்ந்த இமையா நெற்றிக்
கண்ணவனைக் கற்குடியில் விழுமியானைக்
கற்பகத்தைக் கண்ணாரக்கண்டேன் நானே.

—அப்பர் தேவாரம்

பொறையுடைய பூமி நீரனாய் போற்றி
பூதப்படையாள் புனிதா போற்றி
நிறையுடைய நெஞ்சினிடையாய் போற்றி
நீங்காதென்னுள்ளத் திருந்தாய் போற்றி
மறையுடைய வேதம் விரித்தாய் போற்றி
வானோர் வணங்கப்படுவாய் போற்றி
கறையுடைய கண்டம் உடையாய் போற்றி
கயிலை மலையானே போற்றிபோற்றி

என்னும் பாடல்களை ஓதி மலரிட்டு மண்ணை எடுத்து ஒரு பெரிய தட்டில் வைத்துக் கொண்டு வரவும்.

## முளையிடுதல்

கொண்டுவந்த மண்ணை வேள்வி மண்டபத்தின் வடகிழக்கு மூலையில் மண்தொட்டிகளில் இட்டு, நீர் வார்த்து, முன்பே ஊற வைத்துள்ள நெல், கோதுமை, பயறு, துவரை, கடலை முதலியவற்றை இட்டு மேலே சிறிது மண்ணைத்தூவி நீர் வார்க்கவும்.

முளைத்தானை எல்லார்க்கும் முன்னே தோன்றி முதிரும்
சடைமுடிமேல் முகிழ்வெண் திங்கள்
வளைத்தானை வல்லசுரர் புரங்கள் மூன்றும் வரைசிலையா
வாசுகி மாநாணாக் கோத்துத
துளைத்தானைச் சுடுசரத்தால் துவள நீறாத்தூமுத்த
வெண் முறுவலுமையோடாடித்
திளைத்தானைத் தென்கூடல் திருவாலவாயச் சிவனடியே
சிந்திக்கப் பெற்றேன் நானே

—அப்பர் தேவாரம்

கண்காட்டு நுதலானும் கனல்காட்டும் கையானும்
பெண்காட்டும் உருவானும் பிறைகாட்டும் சடையானும்
பண்காட்டும் இசையானும் பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டில் உறைவானும் விடைகாட்டும் கொடியானே

—சம்பந்தர் தேவாரம்

வித்தாம் முளையாகும் வேரே தானாம்
வேண்டும் உருவமாம் விரும்பி நின்ற
பத்தாம் அடியோர்க்கோர் பாங்கனுமாம்
பால்நிறமுமாம் பரஞ்சோதி தானாம்
தொத்தாம் அமரர் கணஞ் சூழ்ந்து போற்றத்
தோன்றாதென் உள்ளத்தினுள்ளே நின்ற
கத்தாம் அடியேற்குக் காணா காட்டும்
கண்ணாம் கடுகாவூர் எந்தைதானே

—அப்பர் தேவாரம்

என்னும் பாடல்களைச் சொல்லி அவற்றின்மீது மலர்தூவி கருப்பூரவொளி காட்டவும்,

## திருக்காப்பு அணிவித்தல்

அமுதலுக காப்புக் கட்டும் செயலைச் செய்ய வேண்டும். இடையூறுகளை நீக்கும் பொருட்டும், எடுத்த செயலை உறுதியாக நின்று செய்து முடிப்பேன் என்பதைக் காட்டும் பொருட்டும் இதைக் கட்டுவர். மஞ்சள் தடவிய கெட்டியான நூலில் விரலி மஞ்சள் துண்டையும், வெற்றிலையையும் சேர்த்து முடிந்து வைத்துக் கொள்ளவும். இதை வலது முன்கையில் கட்ட வேண்டும். பெண்களுக்கு இடது முன்கையில் கட்டுவது முறை. தெய்வத் திருமேனிகள், மணிகள், கோபுரக் குடங்கள், வேள்வித் துடுவைகள், வேள்வி மேடைகள், வேள்விக் குண்டங்கள் முதலியவற்றுக்கும் வேள்வி செய்பவர்கள், திருக்கோயில் ஊழியர்கள், திருக்கோயில் பணியில் முன்னிற்பவர்கள் முதலியோர்க்கும் இதைக் கட்ட வேண்டும். கட்டும்பொழுது கட்டப்படுபவர் கையில் தேங்காய், மலர்கள் முதலியவற்றைக் கொடுத்துப் பின்னர் கட்டவும். கட்டும்பொழுது,

மணிசெய் கண்டத்து மான்மறிக் கையினான்
கணிசெய் வேடத்தராயவர் காப்பினால்
பணிகடாஞ் செயவல்லவர் யாவர்தம்
பிணிசெய்யாக் கையை நீக்குவர் பேயரே

—தேவாரம்

சிந்தும் புனற்கெடில வீரட்டமும்
திருவாஞ்சியமும் திருநள்ளாறும்
அந்தண் பொழில்புடைசூழ்
அயோகந்தியுமாக் கூறுமாவூருமான் பட்டியும்
எந்தன் பெருமாற்கிடமாவது இடைச்சுரமும்
எந்தை தலைச்சங்காடும்
கந்தம் கமழும் கரவீரமும் கடம்பூர்க்
கரக்கோயில் காப்புக்களே

என்னும் பாடல்களை ஓதவும். விழா நிறைவடைந்ததும் முன் போலவே தேங்காய், மலர்கள் முதலியவற்றைக் கையில் கொடுத்துக் காப்பை அவிழ்த்துப் பாலில் போடவும்

## நிறைகுடம் முதலியன வைத்தல்

வேண்டிய நிறைகுடங்களை முறைப்படி வேள்வி மேடைகளில் வைத்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு தெய்வத்

திருமேனிக்கும் உரிய யந்திரத்தையும் அந்தந்தத் திருமேனிக்காக வைக்கப்படும் நிறைகுடங்களுக்கு முன்னால் வைக்கவும். (இவை மாறிப் போகாமல் இருக்கச் சீட்டு எழுதிக் கட்டுவது நல்லது) மருந்து சாத்துவதற்கு முன்னால் இவற்றைத் திருமேனி நிறுவும் பீடத்தில் சேர்க்க வேண்டும்.

## இறைவனைத் திருக்குடங்களில் எழுந்தருளச் செய்தல்

திருக்கோயில்களில் அமைக்கும் தெய்வத் திருமேனிகளிலும் கோபுரம், விமானம் ஆகியவற்றிலும் உரிய தெய்வங்களை எழுந்தருளச் செய்யவே நிறைகுடம் வைத்து வேள்வி செய்யப் படுகிறது. அதற்கு முன்பு நிறைகுடங்களில் உரிய தெய்வங்களை எழுந்தருளச் செய்ய வேண்டும். புதிய திருக்கோயிலாக இருந்தால் நிறைகுடங்களின் மேல் மலர் தூவியபடி அவ்வத் தெய்வங்களுக்குரிய மூல மந்திரம் கூறிக் கிரியைகளைச் செய்து, திருக்குடத்தில் எழுந்தருளி நிலைபெற வேண்டும் என முத்திரை காட்டிப் பாவனையால் அத்தெய்வத்தை நெஞ்சக் கமலத்தில் இருத்தித் திருக்குடத்தில் சேர்க்கவும். அப்பொழுது,

இருநிலனாய்த் தீயாகி நீருமாகி
இயமானனாய் எறியும் காற்றுமாகி
அருநிலைய திங்களாய் ஞாயிறாகி
ஆகாசமாய் அட்டமூர்த்தியாகிப்
பெருநலமும் குற்றமும் பெண்ணும் ஆணும்
பிறர் உருவும் தம்உருவும் தாமேயாகி
நெருநலையாய் இன்றாகி நாளையாகி
நிமிர்புன் சடையடிகள் நின்றவாறே

எல்லா உலகமும் ஆனாய் நீயே
ஏகம்பம் மேவி இருந்தாய் நீயே
நல்லாரை நன்மையறிவாய் நீயே
ஞானச்சுடர் விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைகளறுப்பாய் நீயே
புகழ்ச்சேவடியென் மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வம் தருவாய் நீயே
திருவையாறகலாத செம்பொற் சோதி

—அப்பர் தேவாரம்

வடிவேறு திரிசூலம் தோன்றும் தோன்றும் வளர்சடைமேல்
இளமதியம் தோன்றும் தோன்றும்
கடியேறு கமழ்கொன்றைக் கண்ணிதோன்றும் காதில்
வெண்குழைதோடு கலந்து தோன்றும்
இடியேறு களிற்றுரிவைப் போர்வைதோன்றும் எழில்திகழும்
திருமுடியும் இலங்கித் தோன்றும்
பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும் பொழில்திகழும்
பூவணத்தெம் புனிதனார்க்கே

—அப்பர் தேவாரம்

முந்தைகாண் மூவரினும் முதலானான்காண் மூவிலைவேல்
மூர்த்தி காண் முருகவேற்குத்
தந்தைகாண் தண்கடமா முகத்தினாற்குத் தாதைகாண்
தாழ்ந்தடியே வணங்குவார்க்குச்
சிந்தைகாண் சிந்தாத சித்தத்தார்க்குச் சிவனவன்காண்
செங்கண்மால் விடையொன்றேறும்
எந்தைகாண் எழிலாரும் பொழிலார் கச்சிஏகம்பன்காண்
அவனென் எண்ணத்தானே

—அப்பர் தேவாரம்

தூண்டு சுடரனைய சோதிகண்டாய் தொல்லமரர்
சூளாமணிதான் கண்டாய்
காண்டற்கரிய கடவுள்கண்டாய் கருதுவார்க்கு
ஆற்றஎளியான் கண்டாய்
வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்
மெய்ந்நெறி கண்டாய் விரதமெல்லாம்
மாண்ட மனத்தார் மனத்தான் கண்டாய்
மறைகாட்டுறையும் மணாளன்தானே

—அப்பர் தேவாரம்

எங்கேனுமிருந்து உன்னடியேன் உனை நினைந்தால்
அங்கே வந்தென்னொடும் உடனாகி நின்றருளி
இங்கே என்வினையை யறுத்திட்டெனையாளும்
கங்கா நாயகனே கழிப்பாலை மேயானே

—சுந்தரர் தேவாரம்

பால்நினைந்தூட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத்தொடர்ந்து சிக்கெனப்பிடித்தேன்
எங்கெழுந்து அருளுவதினியே

— திருவாசகம்

ஆகிய பாடல்களை ஓதவும்.

பழைய திருக்கோயில்களாக இருந்தால் இளங்கோயில் அமைக்கப்பட்டிருக்கும். இளங்கோயில் நிறைகுடங்களை வைத்து அங்குள்ள இறைவனைக் குடத்தில் எழுந்தருளும்படி வேண்டிக் கொண்டு, தருப்பையை இளங்கோயில் திருமேனி மீது வைத்து, இறைவன் அதில் எழுந்தருளியதாக எண்ணித் தருப்பையை நிறை குடத்தின் மீது வைத்து அதிலுள்ள இறைவன் திருக்குடத்துக்குள் எழுந்தருளியதாக எண்ணவும். அப்பொழுது மேலே கூறப்பட்ட பாடல்களை ஓதி மலர் தூவவும். பிற திருமேனிகள், கோபுரங்கள், விமானங்கள் முதலிய எல்லாவற்றுக்கும் இதே முறையைக் கையாளலாம். பழைய கோயில் குடமுழுக்கின்பொழுது நிறை குடங்களில் இவ்வாறு இறைச் சக்திகளை எழுந்தருளச் செய்த பிறகே வேள்வி மேடைகளில் வைக்க வேண்டும். புதிய கோயில் குடமுழுக்கிலும் அங்கு இளங்கோயில் அமைக்கப்பட்டிருந்தால் இவ்வாறு செய்தே வேள்வி மேடைகளில் வைக்கவேண்டும். பிறகு மங்கல இசை முழங்க, வேள்வி இயற்றுவார் வேள்வி மண்டபத்தை வலம் வந்து உள்ளே செல்ல வேண்டும். இதை வேள்வி மண்டபம் புகுதல் (யாகசாலைப் பிரவேசம்) என்பர்.

## வேள்வித் தொடக்கம்

மாலை, மறுநாள் காலை என இரண்டு கால வேள்விகளோடு திருக்குட முழுக்கை நடத்துவதுமுண்டு. இது எளியமுறை. நான்கு, ஆறு, எட்டு எனவும் கால வேள்விகளைச் செய்து திருக்குடமுழுக்கை நிறைவடையச் செய்யலாம். இவற்றுக்கு முறையே மூன்று, நான்கு, ஐந்து நாட்கள் தேவைப்படும். எப்படி யிருப்பினும் மருந்து சாத்துதல் குடமுழுக்கிற்கு முந்தைய நாள்

இரவு நடைபெறுதல் வேண்டும். ஒவ்வொரு காலத்திற்கும் பிள்ளையார் வழிபாடு விரிவாக நடைபெற வேண்டியதில்லை. முதற்காலத்தில் மட்டும் விரிவாகச் செய்யவும். மற்ற காலங்களில் 'ஐந்து கரத்தனை' எனத் தொடங்கும் பாடலை மட்டும் சொல்லி மலரிட்டால் போதுமானது. முதலில் வாயில் காவலர் வழிபாட்டை,

மூவெயில் செற்றஞான்று உய்ந்தமூவரில்
இருவர்நின் திருக்கோயிலின் வாய்தல்
காவலாளரென்று ஏவியபின்னை
ஒருவநீகரிகாடங்காக
மானை நோக்கியோர் மாநடமகிழ
மணிமுழா முழக்கவருள் செய்த
தேவதேவரின் திருவடியடைந்தேன்
செழும்பொழிற் திருப்புன்கூருளானே

என்னும் பாடலை ஓதி நான்குபுறமும் செய்யவும். வாயில் காவலர்களுக்கு நறும்புகை முதலியவற்றைக் காட்டி வழிபடவும்.

எப்போதும் மனை மீதமர்ந்தபடியேதான் வேள்வி முதலிய வழிபாடுகளைச் செய்ய வேண்டும. முறைப்படி எரி வளர்த்து, நெய் முதலிய வேள்விப் பொருட்களைக் குண்டத்தில் இட்டபடி வேள்வியை நடத்த வேண்டும். முதலில் எல்லா வேள்வியிலும் பிள்ளையார், முருகன், அம்பிகை, சிவபெருமான், சண்டிகேசுவரர், நந்தி கணங்கள், வாயில் காவலர்கள், எண்திசைக் காவலர்கள், சிவனடியார்கள், ஒன்பான் கோள்கள், பைரவர், கலைமகள், நான்முகன், திருமால், திருமகள், காளி, உருத்திரர் முதலியோரை நினைவுகூறும் பாடல்களைப் பாடவும்.

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகணபதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே

—சம்பந்தர் தேவாரம்

அரவணையான் சிந்தித்து அரற்றும்மடி
அருமறையான் சென்னிக்கு அணியாம்மடி
சரவணத்தான் கைதொழுது சாரும்மடி
சார்ந்தார்கட்கெல்லாம் சரணம்மடி
பரவுவார் பாவம் பறைக்கும்மடி
பதினெண் கணங்களும் பாடுமடி
திரைவிரவு தென்கெடில நாடன்னடி
திருவீரட்டானத்தெஞ் செல்வனடி

— அப்பர் தேவாரம்

தேவர்கோ அறியாத தேவதேவன்
செழும்பொழில்கள் பயந்து காத்தழிக்கும் மற்றை
மூவர்கோனாய் நின்ற முதல்வன் மூர்த்தி
மூதாதை மாதாளும் பாகத்தெந்தை
யாவர்கோன் என்னையும் வந்தாண்டு கொண்டான்
யாமார்க்கும் குடியல்லோம் யாதுமஞ்சோம்
மேவினோம் அவனடியார் அடியாரோடும்
மேன்மேலும் குடைந்தாடி ஆடுவோமே

— திருவாசகம்

தழைத்ததோர் ஆத்தியின் கீழ்த்தாபர மணலாற் கூப்பி
அழைத்தங்கே ஆவின்பாலைக் கறந்துகொண்டாடக் கண்டு
தழைத்ததன் தாதைதாளைப் பெருங்கொடு மழுவால் வீசக்
குழைத்ததோர் அமுதம் ஈந்தார் குறுக்கை வீரட்டனாரே

—அப்பர் தேவாரம்

திருமகட்குச் செய்யதாமரையாமடி
சிறந்தவர்க்குத் தேனாய் விளைக்கும்மடி
பாருளவர்க்குப் பொன்னுரையாய் நின்றவடி
புகழ்வார் புகழ்தகைய வல்லவடி
உருவிரண்டு மொன்றோடொன்றொவ்வாவடி
உருவென்றுணரப் படாதவடி
திருவதிகைத் தென்கெடில நாடன்னடி
திருவீரட்டானத்தெஞ் செல்வனடி
சேவுயரும் திண்கொடியான் திருவடியே
சரணென்று சிறந்த அன்பால்

நாவியலும் மங்கையொடு நான்முகத்தான்
வழிபட்ட நலம்கொள் கோயில்
வாவிதொறும் வண்கமலம் முகங்காட்டச்
செங்குமுதம் வாய்கள் காட்டக்
காவியிருங் கருங்குவளை கருநெய்தல்
கண்காட்டும் கழுமலமே

— சம்பந்தர் தேவாரம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணைதடவி
மாசறுதிங்கள் கங்கை முடிமேலணிந்தென்
உளமேபுகுந்த அதனால்
ஞாயிறுதிங்கள் செவ்வாய்புதன் வியாழம்
வெள்ளி சனி பாம்பிரண்டுமுடனே
ஆசறு நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியாரவர்க்கு மிகவே

சம்பந்தர் தேவாரம்

விரித்த பல்கதிர்கொள் சூலம்வெடிபடு தமரு கங்கை
தரித்ததோர் கோலகால பயிரவனாகி வேழம்
உரித்து உமை அஞ்சக்கண்டு ஒண்திருமணிவாய் விள்ளச்
சிரித்தருள் செய்தார் சேறைச் செந்நெறிச் செல்வனாரே

—அப்பர் தேவாரம்

தண்டி குண்டோதரன் பிங்கிருடி சார்ந்த
புகழ்நந்திசங்கு கண்ணன்
பண்டைஉலகம் படைத்தான் தானும்
பாரைஅளந்தான் பல்லாண்டிசைப்பத்
திண்டி வயிற்றுச் சிறுகட்பூதம் சிலபாடச்
செங்கண்விடை யொன்றூர்வான்
கண்டியூர் கண்டியூர் என்பீராகில்
கடுகநும் வினையைக் கழற்றலாமே

—அப்பர் தேவாரம்

கூடினார் உமை தன்னோடே குறிப்புடை வேடங்கொண்டு
சூடினார் கங்கையாளைச் சுவறிடு சடையர் போலும்
பாடினார் சாமவேதம் பைம்பொழிற்பனை மேயார்
ஆடினார் காளிகாண ஆலங்காட்டடிகளாரே

முதலிய திருமுறைப் பாடல்களை ஓதி நெய் வார்க்கவும். அடுத்து பிள்ளையார் வேள்வியில் மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை, விநாயகர் அகவல் முதலியவற்றை ஓதி நெய் வார்க்கவும். முருகப்பெருமானின் வேள்வியில் திருமுருகாற்றுப் படை, கந்தர் கலிவெண்பா, கந்தரலங்காரம் முதலியவற்றை ஓதி நெய் வார்க்கவும். அம்பிகையின் வேள்விக்குச் சிவபுராணம். அபிராமி அந்தாதி, மீனாட்சியம்மை, கலிவெண்பா முதலியன உரியன. சிவ வேள்விக்குச் சிவபுராணம், அப்பர் கயிலைப் பதிகங்கள், இருநிலனாய் எனத் தொடங்கும் அப்பர் பதிகம் முதலியன உரியன

அடியார் வேள்விகளில் திருத்தொண்டத்தொகை ஓதத் தக்கது, மற்ற எல்லா வேள்விகளுக்கும் சிவபுராணமே ஏற்றது. அல்லது திருமுறைப் பாடல்களை அடுத்து விநாயகர் அகவல், கந்தர் கலிவெண்பா, மீனாட்சியம்மை கலிவெண்பா சிவபுராணம் முதலியவற்றையே எல்லா வேள்விகளிலும் ஓதி நெய் முதலிய வற்றை அளிக்கலாம். அடுத்து முறைப்படி எண்திசைக் காவலர் களுக்கு அமுதூட்டவும். பிறகு நிறைஅவி (மகாபூர்ணாகுதி) அளிக்க வேண்டும். தொடர்ந்து நறும்புகை முதலியவற்றைக் காட்டி மலர்தூவி வாழ்த்தி வணங்கவும். பின்னர் வேள்வித்தீயில் விளைந்த அருட்சத்தியை முறைப்படி தருப்பைக் கட்டுகளை இரண்டு கைகளிலும் ஏந்திக் கொண்டு பாவனையாக வேள்வித் தீயிலிருந்து குடங்களுக்கு எழுந்தருளச் செய்யவும். அப்பொழுது ஓங்காரத்துடன் கூடிய ஐந்தெழுத்தைச் சிந்திக்க வேண்டும்.

ஒரு மேடைக்கு ஒன்றுக்கு மேற்பட்ட வேள்விக் குண்டங்கள் இருந்தால் இதை வேள்வித் தலைவர்தான் செய்ய வேண்டும். மற்றவர்கள் இரண்டு கைகளிலும் வில்வம், மலர், தருப்பைப்புல் முதலியவற்றை ஏந்திக் கொண்டு வேள்வித்தீயில் எழுந்த அருட்சத்தியை அவற்றின் பாவனையாக ஏற்றுக் கொண்டு வலமாக வந்து தலைமை வேள்விக் குண்டத்தின் முன்பிருக்கும் தலைவரிடம் அளிக்க வேண்டும். அவற்றைத் திரட்டிக் கொண்ட தலைவர் நிறைகுடங்களின் மேல் அவற்றைத் தூவி எல்லாச்

சக்திகளையும் நிறைகுடங்களில் எழுந்தருளச் செய்வார். பிறகு குண்டங்களைச் சுற்றி இடப்பட்டுள்ள தருப்பையை எடுத்துச் சாம்பலாக்கி நெய் விட்டுக் குழைத்து நிறைகுடங்களுக்குப் பொட்டிடவும். பிறகு எல்லோரும் அதை இட்டுக்கொள்ளலாம்.

கோபுரங்கள், விமானங்கள் முதலியவற்றிற்குரிய குடங்களை (கலசங்கள்) முன்பே பதித்துவிட வேண்டும். குடங்களில் வரகு தானியத்தை நிரப்பிப் பதிக்க வேண்டும். இது இடிகளால் உண்டாகும் விளைவுகளைத் தாங்கும் ஆற்றல் உடையது.

## எண்வகை மருந்து சாத்துதல் (அஷ்டபந்தனம்)

இரவு தெய்வத் திருமேனிகளை உரிய மேடைகளின் மீது பொருத்தி வைக்கவும். திருமேனிகளைப் பொருத்துவதற்கு முன்பு அவற்றின் கீழே வேள்வியில் வைக்கப்பட்டிருந்த யந்திரம், பொன், வெள்ளி, ஒன்பான் மணிகள், புதிய காசுகள் முதலியவற்றை இடவேண்டும்

சுக்கான் ¼ பங்கு (இது செங்கல் சூளைகளிலிருந்து எடுப்பது), கொம்பரக்கு ஒரு பங்கு, செம்பஞ்சு 3 பங்கு, எருமை வெண்ணெய் 3 பங்கு, தேன் மெழுகு 3 பங்கு, சாதிலிங்கம் ¼ பங்கு, குங்கிலியம் 3 பங்கு, செங்காலி 3 பங்கு என்று கூட்டி இவற்றை மரஉரலில் இட்டு இரும்புக் கம்பிகளால் இளமெழுகுப் பதம் வரும்படி நன்கு இடிக்கவும். இடிக்கும்பொழுது ஏற்படும் வெப்பத்தினால்தான் இப்பதம் கிடைக்கும். அல்லது இவற்றைப் புதிய இரும்பு அல்லது மண் சட்டிகளில் இட்டுக் காய்ச்சி உருக்கிக் குழம்பாக்கலாம். முதல் முறையில் மருந்து விரைவில் இறுகிவிடும். இரண்டாவது முறையைக் கையாள வேகமும், கவனமும் தேவை. பிறகு திருமேனியின் அடியில் மருந்தைப் பரப்பித் திருமேனியை உரிய திசையில் கவனமாகப் பொருத்தவும். பிறகு சுற்றிலும் மருந்தைச் சாத்தி நன்கு அழுத்தி விடவும், மருந்து சாத்தும் பொழுது மருந்தைச் சிதறடிக்காமல் அழகாகப் பொருத்தவும். பிறகு கருவறைக்குத் திரையிடவும் காலையில் மருந்து இறுகி விடும். பிறகு ஆனைந்து, தூயநீர் முதலியவற்றை ஆட்டிக் காப்பணிவித்து நறும்புகை காட்டி வழிபடவும் மீண்டும் திரையிட்டுத் திருமேனிகளைத் திருக்குட நன்னீராட்டுக்கு ஆயத்தமாக்க வேண்டும்.

## திருவருள் உரு ஏற்றல்

குடமுழுக்கு நடைபெறும் நாளன்று காலையில், இராச கோபுரங்கள், விமானங்கள், முக்கியத் திருமேனிகள் முதலிய வற்றையும் அவற்றிற்காக வேள்வியில் வைக்கப்பட்டுள்ள நிறை குடங்களையும் தருப்பைக் கயிற்றால் பிணைக்க வேண்டும். பொற்கம்பி அல்லது வெள்ளிக் கம்பி பிணைப்பதற்கு ஏற்றவை. பிறகு கடைசிக்கால வேள்வியை முடித்துவிட்டுக் குடங்களில் உள்ள இறைவனை அக்கயிற்றின் வழியாகத் திருமேனிக் கோபுரம் முதலியவற்றில் எழுந்தருளச் செய்யவும். இதற்காகச் சத்தி துடுவையில் சிறிது நெய்யை ஊற்றி அதன்மேல் தருப்பை, மலர்கள் போன்றவற்றை வைத்து அதைச் சிவதுடுவையால் மூடிக் கொண்டு குடங்களைத் தொட்டு, அங்குள்ள இறைவன் கயிற்றின் வழியாக வருவதாகப் பாவித்துக் கொள்ளவும். துடுவைகளால் கயிற்றைத் தொட்டபடியே வேள்வித் தலைவரும் மற்ற வேள்வியாளர்களும் வேள்வி மண்டபத்திலிருந்து திருமேனியை அடையவும். துடுவையில் உள்ள நெய்யைத் திருமேனியின் தலையில 'நிறைஅவி' அளிக்கும் முறையில் விட்டுவிட்டுத் துடுவைகளைத் திருமேனியின் பாதத்தில் வைத்துக் கருப்பூரவொளி காட்டி வழிபடவும்.

இவ்வாறு மூன்றுமுறை வேள்வி மண்டபத்திலிருந்து வந்து செய்யவும். கோபுரங்கள், விமானங்கள் முதலியவற்றுக்கும் மேலே சென்றோ, அல்லது கீழிருந்தபடி பாவனையாகவோ இதைச் செய்ய வேண்டும். இவ்வாறு திருக்குடத்திலிருந்து திருமேனி, விமானம் போன்றவற்றுக்கு இறைவனை எழுந்தருளச் செய்யும்போது. இருநிலனாய், எல்லா உலகமும், வடிவேறு திரிசூலம், முந்தைகாண், தூண்டு சுடரனைய, எங்கேனுமிருந்து, பால்நினைந்தூட்டும் என்று தொடங்கும் திருமுறைப் பாடல்களை ஓதவேண்டும்.

## திருக்குட நன்னீராட்டு

நிறைய தெய்வத் திருமேனிகள் அமைந்துள்ள திருக் கோயிலாக இருந்தால், திருச்சுற்றுத் தெய்வங்களுக்கும் (பரிவார தெய்வங்கள்) அவற்றின் விமானங்களுக்கும் முதலிலேயே திருக்குட

நன்னீராட்டை நடத்தி விட வேண்டும். உரிய காலத்தில் இராச கோபுரங்கள், முக்கியமான தெய்வங்களின் விமானங்கள் ஆகிய வற்றுக்கும், அடுத்து முக்கியமான தெய்வத் திருமேனிகளுக்கும் திருக்குட நன்னீராட்டை நடத்த வேண்டும். அதற்கேற்ப, வேள்வி மண்டபத்திலிருந்து நிறைகுடங்கள் புறப்பட்டு வேள்வி மண்டபத்தையும், திருக்கோயிலையும் வலம் வந்து உரிய இடங்களுக்குச் செல்ல வேண்டும். குறிப்பிட்ட நல்ல நேரத்தில் இசைக்கருவிகள், பெரிய மணிகள், திருமுறைகள் முதலியவற்றின் முழக்கத்தோடு திருக்குட நன்னீராட்டைத் தொடங்கவும்.

முதலில் நிறைகுடத்தில் உள்ள இறைவனை உரிய திருமேனி அல்லது கோபுரக் குடத்தில் எழுந்தருளும்படி வேண்டவும் ஐந்தெழுத்து மந்திரத்தை ஓங்காரத்தோடு சேர்த்து ஓதி மலர் தூவவும். அடுத்துத் திருவாசகத்தில் உள்ள பிடித்த பத்தில் உள்ள பாடல்களை இயன்ற அளவு ஓதவும்

''உம்பர்கட்கரசே ஒழிவற நிறைந்த
யோகமே ஊற்றையேன் தனக்கு
வம்பெனப் பழுத்தென் குடிமுழுதாண்டு
வாழ்வற வாழ்வித்த மருந்தே
செம்பொருட்டுணிவே சீருடைக் கழலே
செல்வமே சிவபெருமானே
எம்பொருட் டுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவ தினியே''

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்கு
செம்மைய ஆயசிவபதமளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப்பிடித்தேன்
எங்கெழுந்தருளுவ தினியே

—திருவாசகம்

திருக்குடத்தின் மேலுள்ள கூர்ச்சத்தை எடுத்துத் தலைமீது வைக்கவும். அதேபோல மலர்களையும் வைத்து நிறைகுட நீரை ஊற்ற வேண்டும் தேங்காய், மாவிலை போன்றவற்றை எடுத்துக்

கீழே வைத்துவிட்டுக் குடத்திற்கு இடப்பட்டுள்ள திருநீறு முதலிய வற்றையே திருமேனி முதலியவற்றுக்கும் இட்டு மாலை அணிவிக்கவும் குடத்திற்குச் சுற்றப்பட்டுள்ள ஆடையையே திருமேனிக்கும் அணிவிக்கவும். கோபுரக் குடங்களுக்கு மாவிலை, தருப்பை முதலியவற்றை வைத்துக் குடத்துக்குக் கட்டியிருந்த ஆடையாலேயே கட்டவும். பிறகு நறும்புகை முதலியவற்றைக் காட்டி மலர்தூவி வாழ்த்தி வழிபட வேண்டும். தெய்வத் திருமேனிகளுக்குத் திரையிட்டுப் பத்துமங்கலங்களைக் காட்ட வேண்டும்.

## பத்துமங்கலம் (தச தர்சனம்)

அடுத்துத் தெய்வத் திருமேனிகளுக்கு முன்னால் பின்வரும் முறைப்படி பத்துமங்கலங்களைக் காட்ட வேண்டும். ஒவ்வொரு காட்சி காட்டப்பட்டதும் கருப்பூரவொளி காட்டி மலர் தூவவும். உடனே திரையிடவும். முதலில் மாடும் கன்றும் தெய்வத் திருமேனிகளுக்குப் பின்புறத்தைக் காட்டியபடி காட்சி தரவேண்டும். அவற்றுக்கும் கால்கழுவி திருநீறு முதலியவற்றை இட்டு, நறும்புகை முதலியவற்றைக் காட்டி மலர்தூவி வாழ்த்தி வழிபாடு செய்யவும். பிறகு திரையிடவும். இரண்டாவதாகக் கன்னிப்பெண் நிற்க வேண்டும். மூன்றாவதாகப் பாலையும், ஆனைந்தையும் காட்டவும். நான்காவதாக ஒன்பான் தானியங் களைக் காட்டவும். ஐந்தாவதாக எல்லா வகைத் தானியங் களையும் காட்டவும். ஆறாவதாகக் கண்ணாடி காட்டவும். ஏழாவதாகத் துறவியை நிற்கச் செய்யவும். எட்டாவதாகத் திருமுறையைத் திருமேனிக்கு முன்பாக ஓதவும். ஒன்பதாவதாகச் சிவனடியார்கள் நிற்க வேண்டும். பத்தாவதாகத் திருக்கோயில் பொறுப்பாளர்கள் முதலான மக்கள் கூட்டம் இறைவனைக் கண்டு வழிபடலாம். பிறகு கருப்பூரவொளி காட்டி மலர்தூவி வாழ்த்தி வணங்கி எல்லோருக்கும் திருநீறு வழங்கலாம். பிறகு தெய்வத்திருமேனிகளுக்கு முறைப்படி பெருந்திரு மஞ்சனம் (மகாபிஷேகம்) செய்ய வேண்டும். நண்பகலில் பெரும் பேரொளி வழிபாட்டை (மகாதீபாராதனை) செய்யவேண்டும். அதற்கேற்பப் பெருந்திருமஞ்சனத்தை முன்பே தொடங்கிவிட வேண்டும்.

## பெருந்திருமஞ்சனம்

பெருந்திருமஞ்சனத்தின் போது ஒவ்வொரு திருமுழுக்கிற்கும் ஒருமுறை சந்தனம் மலர் முதலியவற்றை இட்டு அமுதூட்டிக்

கருப்பூரவொளி காட்ட வேண்டும். உரிய திருமுறைப் பாடல்களை ஓதியபடி திருமுழுக்காட்ட வேண்டும், சிவலிங்கத் திருமேனியாக இருந்தால் எப்பொழுதும் மலர் அல்லது வில்வம் இருக்க வேண்டும். முதலில் தூயநீரால் திருமுழுக்காட்டவும். அப்பொழுது,

தடங்கொண்டதோர் தாமரைப் பொன்முடி தன்மேல்
குடங்கொண் டடியார் குளிர்நீர் சுமந்தாட்டப்
படங்கொண்டதோர் பாம்பரை யார்த்த பரமன்
இடங்கொண்டிருந்தான் தன் இடைமருதீதோ

—சம்பந்தர் தேவாரம்

என்னும் பாடலை ஓதவும், பிறகு நறுமண எண்ணெய் அல்லது நல்லெண்ணெய் பூசித் தூயநீரால் திருமுழுக்காட்டவும். ஒவ்வொரு முறையும் தூயநீராட்டு நடைபெற வேண்டும். அடுத்து ஆனைந்து (பால், தயிர், நெய் சிறுநீர், சாணம் ஆகியவற்றின் கலப்பு) முழுக்காட்டவும். தேன், இளநீர் கரும்புச்சாறு இவற்றையும் தனித்தனியே முழுக்காட்டவும். அப்பொழுது,

வேணலானை வெருவ உரி போர்த்து உமைஅஞ்சவே
வானை ஊடறுக்கும் மதிசூடிய மைந்தனார்
தேன்நெய் பால்தயிர் தெங்கிளநீர் கரும்பின்தெளி
ஆனஞ்சாடும் முடியானும் ஐயாறுடை ஐயனே

—சம்பந்தர் தேவாரம்

என்னும் பாடலை ஓதவும். பச்சரிசி மாப்பொடி, நெல்லி முள்ளிப் பொடி (பெரு நெல்லிக்காயை உலர வைத்து இடித்த பொடி) முழுக்காட்டவும். அப்பொழுது

சிந்தித்தெழுவார்க்கு நெல்லிக்கனியே
சிறியார் பெரியார் மனத்தேறலுற்றால்
முந்தித்தொழுவாரிறவார் பிறவார்
முனிகண்முனியே அமரர்க்கமரா

சந்தித்தடமால்வரை போற்றிரைகள்
தணியாதிடறுங் கடலங் கரைமேல்
அந்தித் தலைச்செக்கர் வானேயொத்தியா
லணியார் பொழில் அஞ்சைக்களத்தப்பனே

—சுந்தரர் தேவாரம்

என்னும் பாடலை ஓதவும்.

ஐந்தமுது (பஞ்சாமிர்தம்), பழவகைகள், (மா, பலா, வாழை, நெல்லி, மாதுளை முதலியன), பழச்சாறுகள் (எலுமிச்சை நாரத்தை, ஆரஞ்சு முதலியன) கொண்டு திருமுழுக்காட்டும் போது,

பாலினால் நறுநெய்யால் பழத்தினால் பயின்றட்டி
நூலினால் மணமாலை கொணர்ந்தடியார் புரிந்தேத்தச்
சேலினார் வயல்புடைசூழ் செங்காட்டங்குடியதனுள்
காலினால் கூற்றுதைத்தான் கணபதீச்சரத்தானே

—சம்பந்தர் தேவாரம்

என்னும் பாடலை ஓதவும்,

சந்தனம், நிறைகுடம், வில்வம் இட்டநீர் முதலியனவற்றை நீராட்டும்பொழுது,

வாவிவாய்த் தங்கிய நுண்சிறை வண்டினங்
காவிவாய்ப் பண்செயுங் கானப்பேர் அண்ணலை
நாவிவாய்ச் சாந்துளும் பூவுளும் ஞானநீர்
தூவி வாய்ப்பெய்து நின்றாட்டுவார் தொண்டரே

—சம்பந்தர் தேவாரம்

தொண்டனேன் பட்டதென்னே தூயகாவிரியில் நன்னீர்
கொண்டிருக்கோதி ஆட்டிக் குங்குமக் குழம்புசாத்தி
இண்டை கொண்டேற நோக்கி ஈசனை எம்பிரானைக்
கண்டனைக் கண்டிராதே காலத்தைக் கழித்தவாறே

—அப்பர் தேவாரம்

ஆகிய பாடல்களை ஓதவும்.

ஆயிர ஒழுக்கின்போது (சகஸ்ரதாராபிஷேகம்)

ஆயிரந்தாமரை போலும் ஆயிரம் சேவடியானும்
ஆயிரம்பொன்வரை போலும் ஆயிரம் தோளுடையானும்
ஆயிர ஞாயிறுபோலும் ஆயிரம் நீண்முடியானும்
ஆயிரம் பேருகந்தானும் ஆரூரமர்ந்த அம்மானே

என்னும் பாடலை ஓதவும் காட்டு மாட்டின் கொம்புநீர் (கவயச் சிருங்கோதகம்), பொன்னிட்ட நீர் (சொர்ணோதகம்). மணியிட்ட நீர் (இரத்தினோதகம்), தருப்பை இட்டநீர் (குசோதகம்), சங்கு நீர் (சங்காபிஷேகம்) இவைகளைக் கொண்டு நீராட்டுகின்ற போது,

இறைகளோடிசைந்த இன்பம் இன்பத்தோடிசைந்த வாழ்வு
பறைகிழித்தனைய போர்வை பற்றியானோக்கினேற்குத்
திறை கொணர்ந்தீண்டித் தேவர் செம்பொனு மணியுந்தூவி
அறை கழலிறைஞ்சும் ஆரூரப்பனே அஞ்சினேனே

—சுந்தரர் தேவாரம்

குசையும் அங்கையில் கோசமும் கொண்டவவ்
வசையின் மங்கல வாசகர் வாழ்த்தவே
இசைய மங்கையும் தானும் ஒன்றாயினான்
விசைய மங்கையுள் வேதியன் காண்மினோ

—அப்பர் தேவாரம்

நலம் பெரியன சுரும்பார்ந்தன நங்கோனிடமறிந்தோம்
கலம் பெரியன சாருங்கடற்கரை பொருதிழி கங்கைச்
சலம்புரி சடைமுடியுடையவர்க் கிடமாவது பரவை
வலம்புரியொரு சலஞ்சலங் கொணர்ந்தேற்றும் மறைக்காடே

—சுந்தரர் தேவாரம்

என்னும் பாடல்களை ஓதவும். பிறகு திரையிட்டுப் புத்தாடை அணிவித்துத் திருநீறு முதலியன இடவும். அறுகு, வில்வம், மலர் மாலைகள், உருத்திராக்க மாலைகள், அணிகலன்கள் முதலியவற்றால் தெய்வத் திருமேனியை அணிசெய்து வணங்கவும்

## பெரும் பேரொளி வழிபாடு

திருமுழுக்கை அடுத்துப் பெரும் பேரொளி வழிபாட்டைத் தொடங்க வேண்டும். திரையிட்டு நறும்புகை, ஒற்றைத்திரி விளக்கு முதலியவற்றைக் காட்டி அமுதூட்டவும். நறும்புகை, விளக்கு, கருப்பூரம் போன்றவற்றை எப்போதும் ஓங்காரமாகவே மும்முறை வலமாகச் சுற்ற வேண்டும். சுற்றுவதற்கு முன்பு அவற்றின் மேல் ஒரு மலரிடவும். சுற்றிய பிறகும் ஒரு மலரை இறைவன் திருவடியில் இடவும். மலர்களை எப்பொழுதும் நீரில் நனைத்தேயிடவும். அமுதூட்டும் பொழுது, சுட்டுவிரல், நடுவிரல், அணிவிரல் மூன்றினாலும் மலரைப் பிடித்துக் கொண்டு ஆட்காட்டி விரலையும் நீட்டிக் கொண்டு (மிருக முத்திரை) ஊட்டும் பாவனையோடு அமுதிலிருந்து இறைவன் வாய்வரை மூன்றுமுறை கைகளை நீட்டி மலரிடவும். பிறகு திரையை நீக்கவும். முறைப்படி அடுக்கு விளக்கு (மகாதீபம்), உடுவிளக்கு (நட்சத்திர தீபம்), தீ விளக்கு (அக்னி தீபம்), கதிர் விளக்கு (சூரிய தீபம்), மதி விளக்கு (சந்திர தீபம்) பணி விளக்கு (நாகதீபம்), மனிதமா விளக்கு (புருஷாமிருகதீபம்), விடை விளக்கு (நந்தி தீபம்), சிங்க விளக்கு, அன்ன விளக்கு, மயில் விளக்கு, சேவல் விளக்கு (குக்குட தீபம்), ஐந்துதிரி விளக்கு, ஐந்துதட்டு விளக்கு குடவிளக்கு, ஐந்து கிளைக் கருப்பூரவொளி முதலியவற்றைக் காட்டவும்.

## ஐந்து தட்டு விளக்குக் காட்டும் முறை

இறைவனுக்கு எதிரில் நடுவில் ஒரு தட்டையும், அதன் நான்கு புறமும் நான்கு தட்டுக்களையும் வைக்கவும். ஒவ்வொன்றிலும் ஒரு திரியிருக்க வேண்டும். முருகன் கோயிலில் ஆறு தட்டுக்களை வைக்க வேண்டும். நடுத்தட்டு ஈசான முகத்தைக் குறிக்கும். அதற்கு முன்னால் இருப்பது தற்புருட முகத்தைக் குறிக்கும். நடுத்தட்டுக்கு வலதுபுறம் இருப்பது அகோர முகத்தையும், இடதுபுறம் இருப்பது வாமதேவ முகத்தையும், பின்புறம் இருப்பது சத்தியோசாத முகத்தையும் குறிக்கும். ஆறு தட்டுக்கள் வைத்தால் அதை எல்லாத் தட்டுக்களுக்கும் முன்னால் வைக்க வேண்டும். அது அதோ முகத்தைக் குறிக்கும். சத்தியோசாத முகத்தட்டுக்குப் பின்னால் குடவிளக்கை வைக்கவும். மலர்களை எடுத்து எல்லாத் தட்டுக்

களிலும் இறைவனை எழுந்தருளும்படி வேண்டிக் கொண்டு தூவவும். அப்பொழுது,

அஞ்சு முகமுள ஐம்மூன்று கண்ணுள
அஞ்சினொடஞ்சு கரதலந் தானுள
அஞ்சுடன் அஞ்சாயுதமுள நம்பியென்
நெஞ்சு புகுந்து நிறைந்து நின்றானே

—திருமந்திரம்

என்ற பாடலைச் சொல்லவும்.

பிறகு ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம், (அதோமுகம்) என ஒவ்வொன்றாகக் காட்டவும்.

அடுத்து இறைவனுக்குக் கண்ணாடி, குடை, கொடி, திருச்சின்னம் முதலியவற்றைக் காட்டி மலரிடவும். காட்டுவதற்கு முன்பும் அவற்றுக்கு மலரிடவும் பிறகு அதேபோல் விசிறி, சாமரம் (கவரி), ஆலவட்டம் முதலியவற்றால் வீசி இறைவனுக்கு மலரிடவும். அடுத்துத் திருமுறைகளை (பஞ்சபுராணம்) ஓதல், நாதசுரப் பண்ணிசை, மத்தளத்தாள இசை, ஆடல் முதலிய வற்றால் இறைவனை மகிழ்விக்க வேண்டும் அடுத்துக் கனியமுதூட்டிக் கற்பூரம் காட்ட வேண்டும். பிறகு இறை வனுக்குத் திருநீறிடல் வேண்டும். (நடுவிரல், அணிவிரல், கட்டை விரல் இவற்றால் சிறிது திருநீற்றை (மிருக முத்திரை) எடுத்து இறைவனின் தலையை மும்முறை ஓங்காரமாகச் சுற்றி இறைவனுடைய நெற்றியில் இட்டதாகப் பாவனையால் காட்டி எரியும் கருப்பூரவொளியைப் போடவும். இவ்வாறு மூன்றுமுறை செய்யவும் பிறகு திருநீற்றைத் தானும் அணிந்து கொண்டு மற்றவர்களுக்கும் வழங்கலாம். எக்காரணத்தைக் கொண்டும் திருநீற்றைப் போடும்போது கற்பூரத்தை அணைத்துவிடக் கூடாது. இப்பெரும் பேரொளி வழிபாட்டுமுறை சிவபெருமான், அம்பிகை, பிள்ளையார், முருகன், சிவனடியார்கள், முதலிய தெய்வங்களுக்கு உரியது. மற்ற தெய்வங்களுக்கும் இதேமுறையில் செய்யலாம். குடமுழுக்கு நாளன்று ஒரு பெரிய குடவிளக்கை ஏற்றிக் கருவறையில் தொங்கவிட வேண்டும். அதை நாற்பத் தெட்டு நாட்கள்வரை அணையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். நாற்பத்தெட்டாவது நாள் மண்டலத் திருமுழுக்கை நடத்த வேண்டும்.

## மண்டலத் திருமுழுக்கு

இதற்கும் முறைப்படி நிறைகுடம் வைத்து வேள்வி செய்ய வேண்டும். முதலில் பிள்ளையார் வழிபாட்டைச் செய்யவும். முறைப்படி எரி வளர்த்து, எல்லாத் தெய்வங்களையும் நினைவு கூறும் திருமுறைப் பாடல்களைச் சொல்லி நெய் முதலிய வேள்விப் பொருட்களை வார்க்கவும். பிறகு அந்தந்தத் தெய்வங்களுக்குரிய வற்றை ஓதியபடி வேள்வி செய்யவும். முறைப்படி எண்திசைக் காவலர்களுக்கு அமுதூட்டி 'நிறைஅவி' அளிக்க வேண்டும். நறும்புகை முதலியவற்றைக் காட்டி மலர்தூவி வாழ்த்தி வணங்கவும். வேள்வியில் விளைந்த அருட்சக்தியை முறைப்படி நிறை குடங்களில் எழுந்தருளச் செய்யவும். நிறைகுடங்களுக்குத் தருப்பைச் சாம்பலை இடவும். பிறகு இறைவனுக்குப் பெருந்திரு மஞ்சனம் செய்வித்து இறுதியில் நிறைகுடங்களில் உள்ள நீரை முறைப்படி ஊற்றி முழுக்காட்டவும், அணி செய்தல், பெரும் பேரொளி வழிபாடு முதலியவற்றையும் முறைப்படி செய்து எல்லோருக்கும் திருநீறு வழங்கவும்.

## சில பொதுவான செயல்முறைக் குறிப்புகள

நிறைகுடம் வைத்தல் ;

நிறைகுடத் தேங்காயின் மீது தருப்பை, மலர்கள், வில்வம் வைக்க வேண்டும். நிறை குடங்களுக்கு நான்கு புறமும் திருநீறு, சந்தனம், குங்குமம், மஞ்சளரிசி முதலியவற்றை இடவும். மலர் மாலை அணிவிக்கவும். நுனி வடக்கே இருக்கும்படி பெரிய வாழை யிலைகள் இரண்டை ஒன்றின்மேல் ஒன்றாக இடவும், குடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்பத் தேவையான அளவிற்கு இலைகளை இதே போல் இட்டுக் கொள்ளவும். அவற்றின் மீது பச்சரிசியைப் பரப்பி ஓங்காரத்தையும் ஐந்தெழுத்தையும் எழுதவும். பிறகு அதன்மீது நிறைகுடங்களை வைத்து அதில் எல்லாச் சிவதீர்த்தங்களும் இருப்பதாகப் பாவித்து,

ஏவி இடர்க்கடல் இடைப் பட்டிளைக்கின்றேனை
இப்பிறவி அறுத்தேற வாங்கி ஆங்கே
கூவி அமருலகனைத்தும் உருவிப் போகக்
குறியிலறு குணத்தாண்டு கொண்டார் போலும்

தாவி முதற்காவிரி நல்யமுனை கங்கை சரசுவதி
பொற்றாமரை புட்கரணி தெண்ணீர்க்
கோவியொடு குமரி வருதீர்த்தஞ் சூழ்ந்த குடந்தைக் கீழ்
கோட்டத்து எம் கூத்தனாரே

— அப்பர் தேவாரம்.

ஒன்றா உலகனைத்தும் ஆனார் தாமே
ஊழிதோறூழி உய்ந்தார் தாமே
நின்றாகி எங்கும் நிமிர்ந்தார் தாமே
நீர் வளி தீயாகாசமானார் தாமே
கொன்றாடுங் கூற்றை உதைத்தார் தாமே
கோலப் பழனை உடையார் தாமே
சென்றாடு தீர்த்தங்கள் ஆனார் தாமே
திருவாலங்காடுறையும் செல்வர் தாமே.

— அப்பர் தேவாரம்

என்னும் பாடல்களை ஓதி மலரிடவும். பிறகு இறைவனை நிறை குடங்களில் முறைப்படி எழுந்தருளச் செய்ய வேண்டும்.

## மஞ்சளரிசி ( அட்சதை)

இது, சிறிது மஞ்சட்பொடியை நீரில் குழைத்துப் பச்சரிசியோடு கூட்டிக் கலந்தால் கிடைப்பது. எல்லா மங்கலச் செயல்களிலும் இதைப் பயன்படுத்துவர்.

கூர்ச்சம் முதலியன :

நீளமான தருப்பைப் புற்களின் நுனிகளையும் அடிகளையும் ஒன்றாக வைத்துக் கூர்ச்சம், தூவணி (பவித்திரம்), ஞானவாள் (ஞான கட்கம்) முதலியவற்றைச் செய்ய வேண்டும். ஒரே அளவுள்ள ஒன்பது தருப்பைப் புற்களின் நுனிக்குச் சற்றுக் கீழே ஒருவித முடியிட்டு அமைப்பது கூர்ச்சம் எனப்படும். இரண்டு தருப்பைப் புற்களை மோதிரம் போல் சுற்றி ஒருவித முடியிட்டு அமைப்பது தூவணி (பவித்திரம்) எனப்படும். எல்லா சமயச் செயற்பாடுகளின் போதும் இதை வலது மோதிர விரலில் அணிந்து கொள்ள வேண்டும். பொன்னாலும் இவ்வாறு செய்து அணிந்து கொள்ளலாம். முப்பத்தாறு தருப்பைப் புற்களின் நுனிகளையும்,

அடிகளையும் சரியாக வைத்துச் செய்வது ஞானவாளாகும். அடியிலிருந்து தருப்பைகளை ஒரு தருப்பையால் சுற்றிக் கொண்டு வந்து நுனிக்குக் கீழே ஒருவித முடியிட்டு இதை அமைக்க வேண்டும்

கூர்ச்சம் முதலிய எல்லாவற்றிலும் முடியிடுவதற்கு முன்னால் புற்களை வலமாகச் சுற்றியே முடியிட வேண்டும். தீய சக்திகளை ஓட்டுவதற்கு இதைப் பயன்படுத்துவர். தலைமை நிறைகுடங்களின் மேல் ஞானவாளைச் சார்த்தி வைக்கலாம். திருவாசகம் இதைக் குறிப்பிடுகிறது.

''ஞானவாள் ஏந்துமையர் நாதப் பறையறைமின்
மானமா ஏறுமையர் மதிவெண்குடை கவிமின்
ஆனநீற்றுக்கவசம் அடையப் புகுமின்கள்
வானவூர் கொள்வோம் நாம் மாயப்படை வாராமே

என்பது அப்பாடல்

**வேள்வித் தீ வளர்க்கும் முறைகள் :**

வேள்விக் குண்டத்தின் நாற்புறமும் தருப்பைகளை இட்டு அதன் மேற்புறம் எட்டிடங்களில் திருநீறு, சந்தனம், குங்குமம், மஞ்சளரிசி, மலர்கள் முதலியவற்றை அணிவிக்கவும். பிறகு கருப்பூரம் ஏற்றி வைத்து அதில் நெய்யில் நனைத்த வேள்விக் குச்சிகளை இட்டு எரி வளர்க்கவும். வேள்வித் தீயும் சிவ பெருமானின் ஒரு வடிவமே. அது வேள்வியில் இடப்படும் பொருட்களைத் தூய்மை செய்து உரிய தெய்வங்களுக்கு முறைப்படி சேர்ப்பிக்கிறது. எரியூட்டும் பொழுது

மாறிநின்றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத்து அமுதே
ஊறிநின்றென்னுள் எழு பரஞ்சோதி
உள்ளவா காண வந்தருளாய்
தேறலின் தெளிவே சிவபெருமானே
திருப்பெருந்துறை உறைசிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த
இன்பமே என்னுடையன்பே

— திருவாசகம்

இரந்துருக என் மனத்துள்ளே
    எழுகின்ற சோதியே இமையோர்
சிரந்தனில் பொலியும் கமலச் சேவடியாய்
    திருப்பெருந்துறைஉறை சிவனே
நிரந்த ஆகாய நீர் நிலம் தீ
    காலாயவை யல்லையா யாங்கே
கரந்ததோருருவே களித்தனனுன்னைக்
    கண்ணுறக் கண்டு கொண்டின்றே

— திருவாசகம்

சோதியாய்த் தோன்றும் உருவமே அருவாம்
    ஒருவனே சொல்லுதற்குரிய
ஆதியே நடுவே அந்தமே பந்தம் அறுக்கும்
    ஆனந்த மாகடலே
தீதிலா நன்மைத் திருவருட்குன்றே
    திருப்பெருந்துறைஉறை சிவனே
யாதுநீ போவதோர் வகையெனக் கருளாய் வந்து
    நின்னிணையடி தந்தே

— திருவாசகம்

திருமகன் முருகன் தேவியேல் உமையாள்
    திருமகன் மருமகன் தாயாம்
மருமகன் மதனன் மாமனேல் இமவான்
    மலையுடை அரையர் தம்பாவை
தருமலி வளனாம் சிவபுரன் தோழன்
    தனபதி சாட்டியக்குடியார்
இருமுகம் கழல் மூன்று ஏழுகைத்தலம் ஏழ்
    இருக்கையில் இருந்த ஈசனுக்கே.

— திருவிசைப்பா

எரியலால் உருவமில்லை ஏறல்லால் ஏறவில்லை
கரியலாற் போர்வையில்லை காண்டகு சோதியார்க்கு
பிரிவிலா அமரர் கூடிப் பெருந்தகை பிரானென் றேத்தும்
அரியல்லால் தேவி இல்லை ஐயன் ஐயாறனார்க்கே

— அப்பர் தேவாரம்.

முதலிய பாடல்களை ஓத வேண்டும். எல்லாவற்றையும் சொல்ல முடியாவிட்டால் திருமகன் முருகன் என்னும் பாடலையாவது பாட வேண்டும் நெய்யில் தொடாமல் வேள்விக் குச்சிகளை குண்டத்தில் இடக்கூடாது. எண்திசைக் காவலர்களுக்கு அமுதூட்டும் போது 'ஆரார் வந்தார்' என்று தொடங்கும் பாடலைச் சொல்ல வேண்டும். கிழக்கு, தென் கிழக்கு, தெற்கு, தென் மேற்கு, மேற்கு, வடமேற்கு. வடக்கு, வடகிழக்கு என முறையாக அமுதூட்டவும். எல்லாச் சமயச் செயல்பாடுகளுக்கும் இம் முறையே உரியது.

வேள்வியில் எப்பொழுதும் சிவ துடுவையாலேயே நெய் வார்க்கவும். பிறபொருட்களைச் சக்தி துடுவையாலேயே இடவும். வேள்வியில் ஒவ்வொரு பொருளையும் இட்டவுடன் ஒருமுறை நெய் வார்க்கவும். வாயால் எப்பொழுதும் வேள்வித் தீயை ஊதக் கூடாது. விசிறியைப் பயன்படுத்தி நன்கு எரியச் செய்யலாம். வேள்வியின் இறுதியில் 'நிறைஅவி' (மகாபூர்ணாகுதி) அளிக்க வேண்டும். வேள்வி முதலிய வழிபாடுகளில் மலர் தூவும் போதும், வாழ்த்தி வணங்கும் போதும்

கைப்போது மலர் தூவிக் காதலித்து வானோர்கள்
முப்போது முடிசாய்த்துத் தொழநின்ற முதல்வனை
அப்போடு மலர்தூவி ஐம்புலனும் அகத்தடக்கி
எப்போதும் இனியானை என்மனத்தே வைத்தேனே

— அப்பர் தேவாரம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே

— சம்பந்தர் தேவாரம்

என்னும் பாடல்களை ஓத வேண்டும்

## நிறை அவி அளிக்கும் முறை

முதலில் சத்தி துடுவையில் (சிருக்கு) சிறிது நெய்யை ஊற்றி அதன்மேல் நிறை அவியை வைத்து, துடுவையின் நுனியில் மலர்கள்,

தருப்பை, முதலியவற்றை வைத்துச் சிவதுடுவையைச் (சிருவம்) சத்தி துடுவையின் மேல் கவிழ்த்து வைக்கவும். பிறகு அடியில் இடது கையும், மேலே வலது கையும் இருக்கும் படியாக இரண்டு கைகளாலும் துடுவைகளை எடுத்துக் கொள்ளவும். (சங்கு முத்திரையால் பிடித்தல் என்பர்) நேராக நிமிர்ந்து நிற்கவும். துடுவைகளின் அடிப்பகுதி கொப்பூழுக்கு (ஞாபி) நேராக இருக்கும் படி பிடித்துக் கொண்டு சத்தி துடுவையின் நுனியைப் பார்த்துக் கொண்டு மெதுவாகத் துடுவைகளின் அடிப்பகுதியை இடது மார்பு வரை உயர்த்தி நெய்யை ஊற்றியபடி நிறையவி அளிக்கவும். அப்பொழுது

' கலியார் கச்சி — மலியே கம்பம்
பலியாற் போற்ற — நலியா வினையே''

— சம்பந்தர் தேவாரம்

என்ற பாடலை ஓதவும். பிறகு சிவ துடுவையால் நெய் வார்த்து நறும்புகை முதலியவற்றைக் காட்டி மலர்தூவி வாழ்த்தி வணங்கவும்.



# திரு நெறிய தமிழ் மரபு

நமது மொழியும், சமயமும் வாழ்வில் உயர்வு தருபவை சமய நெறி திருக்கோயிலுடன் தொடர்புடையது. திருக்கோயில் வழிபாட்டு முறைகளை நாம் தெரிந்து கொள்ளுதல் நல்லது. நாமும் திருக்கோயிலைத் தூய்மையாக வைத்துக் கொள்ள உதவி செய்யலாம்.

1. சமய நெறியில் நான்கு நிலையுண்டு. திருக்கோயிலைத் தூய்மை செய்தல், வலம் வருதல், வணங்குதல், வழிபாட்டிற்கு வேண்டியவற்றை வழங்குதல் முதலியன. இவைசரியை எனப் படும்.

2. மலர் கொண்டு வழிபடுதல், கூடிப்பாடுதல், இறைவன் திருநாமத்தை ஓதுதல் முதலியன கிரியை எனப்படும்.

3. இறைவனுடைய திருவுருவத்தை நெஞ்சில் இருத்துதல், மனத்தை அடக்குதல் முதலியன யோகம் எனப்படும்.

4, எப்பொழுதும் கடவுள் தொடர்பு நீங்காதிருத்தல் ஞானம் எனப்படும்.

இத்தகைய நெறிகளில் நின்று அருள் பெற்றவர்களது வாழ்க்கையை, வரலாற்றைத் தெரிந்துகொள்வது பயனுடையதாகும். அவர்கள் பெற்ற அருளை நாமும் பெற இறைவனை வழிபட வேண்டும். அவ்வகையில், குறிப்பாக இளைஞர்கட்கு வழி காட்டுவது இந்நூலாகும்.

இந்நூல் நமது ஆதீனத்தின் சார்பில், சத்வித்யா சன்மார்க்க சங்கத்தின் எண்பதாவது ஆண்டு நிறைவு வெளியீடாக வெளிவருகிறது. பயின்று பயன்பெற வாழ்த்துகிறோம்.

சாந்தலிங்க இராமசாமி அடிகளார்

## உருவ வழிபாடு

*மருந்து வேண்டில் இவை மந்திரங்கள் இவை*
*புரிந்து கேட்கப்படும் புண்ணியங்கள் இவை*
*திருந்து தேவன்குடித் தேவர் தேவெய்திய*
*அருந்தவத்தோர் தொழும் அடிகள் வேடங்களே*

— *திருஞானசம்பந்தர்*

*எங்கும் நிறைந்த இறைவனுக்கு எழில் வடிவங்கள் பலவற்றை மனிதன் எடுப்பித்தான். கருணையே உருவான கடவுள் அவ்வடிவங்களில் விளங்கி எல்லோருக்கும் அருள்புரிகின்றான். ஒவ்வொரு வடிவமும் வழிபடுவோர்க்கு ஒவ்வொரு பயனைச் சிறப்பாக அளிக்கவல்லது என்பது ஆன்றோர் கண்ட முடிவு. அந்த வகையில் கீழே சில குறிப்புகள் தரப்பட்டுள்ளன. அறிந்து, வழிபட்டுப் பயன் பெறுக.*

**பிள்ளையார் :**

*எல்லா இடையூறுகளையும் நீக்கும் இறைவன், இவரை வழிபட்ட பிறகுதான் எக்காரியத்தையும் தொடங்க வேண்டும்.*

**முருகப்பெருமான் :**

*வழிபடுவோர்க்கு அறிவு, அழகு, வெற்றி முதலியவற்றை அருளுபவர்.*

**ஆலமர் செல்வர் :**

*(தட்சிணாமூர்த்தி) வழிபடுவோர்க்குப் பேரறிவை வழங்குபவர்.*

**அண்ணாமலையார் :**

*(இலிங்கோற்பவர்) நான்முகன், திருமால் ஆகியோரின் செருக்கை அடக்கிய சிவ வடிவம். வணங்குவோர்க்கு அமைதியைத் தருபவர்.*

**சேயிடைச் செல்வர் :**

*(சோமாஸ்கந்தர்). உலக இன்பங்களை வாரிவழங்குபவர்.*

அம்மையப்பர் :

(அர்த்தநாரீஸ்வரர்) மகிழ்ச்சியையும் ஒற்றுமையையும் வேண்டுவோர் வழிபட வேண்டிய கடவுள்.

அம்பலவாணர் :

(நடராசர்) வீடுபேற்றை அருளும் பெருமான்.

பைரவர் :

இவரை வழிபட்டால் தொடங்கும் செயல்கள் அனைத்தும் வெற்றி பெறும். அச்சம் நீங்கும்.

கொற்றவை :

(துர்க்கை) இடையூறுகள் நீங்கி எல்லவற்றிலும் வெற்றி பெற வழிபட வேண்டிய வடிவம்.

அம்பிகை :

இம்மை, மறுமைப் பயன்களை அருள்பவள்.

சிவலிங்கம் :

வேண்டும் (எல்லாவற்றையும்) அருள்கின்ற கருணைக் கடவுள்.

நந்திஎம் பெருமான் :

இவரை வழிபட்டால் பணிவும், தலைமைப் பண்பும் வளரும்.

சிவனடியார்கள் :

இவர்களை வழிபட்டால் சிவபெருமானின் அருளைப் பெறலாம்.

சண்டிகேசுவரர் :

இவரை வழிபட்டால் அறியாமல் செய்யும் குற்றங்கள் நீங்கும்.

## சரியை வழிபாடு

சிவபெருமான் கடவுள். நாம் அவருக்குத் தொண்டு செய்ய வேண்டும். அவர் நமக்குத் தாயும் தந்தையுமாக இருக்கிறார். நமக்கு வேண்டிய நன்மைகளை அவரே செய்கிறார். இறைவனாகிய அவருக்கு நம்மால் இயன்ற பணிகளை, அன்புடன்

செய்தல் வேண்டும். இப்படிச் செய்யும் தொண்டு சரியை வழிபாடு எனப்படும்.

திருக்கோயிலில் செய்வதற்குப் பல தொண்டுகள் உண்டு. கோயிலின் உட்புறத்தையும் வெளிப்புறத்தையும் கூட்டித் தூய்மையாக்கலாம். இதற்கு 'அலகிடுதல்' என்று பெயர். பசுவின் சாணநீரால் கோயிலின் முன் பகுதியை மெழுகலாம். அல்லது நீர் தெளிக்கலாம். கோயிலின் உட்பகுதிகளையும் நன்கு கழுவித் தூய்மையாக்கலாம். அங்கு சிலவிடங்களில் சாணநீரால் மெழுகலாம்.

கோயிலுக்குள்ளும் வெளியேயும் வளர்ந்திருக்கும் தேவையற்ற புல் பூண்டுகளை வெட்டலாம். கற்களோ, முட்களோ இருந்தால் அவற்றை அகற்றலாம். தூய இடத்தில் செய்யும் வழிபாடே பயன்தரும். அதனால் நமது உள்ளம் அமைதியும் தூய்மையும் அடையும்.

கோயிலுக்கு அருகில் பூந்தோட்டம் அமைத்தல் மிகவும் சிறந்த சரியை வழிபாடாகும். அங்கே வழிபாட்டிற்கு உதவும் கொன்றை, வில்வம் முதலிய மரங்களையும் மலர்க் கொடிகள், செடிகள் முதலியவற்றையும் வளர்க்கலாம். மலர்களைப் பறித்துத் தூய இடத்தில் வைத்து மாலை கட்டிக் கொடுக்கலாம்.

கோயிலில் இறைவன் திருமுன்பு விளக்கேற்றுவதும் நறுமணப் புகை இடுவதும் (தூபம்) சிறந்த தொண்டுகளாகும்.

திருவிழாக் காலங்களில், இறைவன் திருவீதியுலா வரும் பொழுது தேர்வடம் பிடித்தல், இறைவனைத் தோளில் தாங்கி வருதல், கூட்டத்தை ஒழுங்குபடுத்துதல் முதலியன பெரிய தொண்டுகளாகும். இன்னும் எத்தனையோ பணிகள் கோயிலில் உள்ளன, இவற்றையெல்லாம் செய்து திருக்கோயிலை மிகவும் அழகாகவும் தூய்மையாகவும் வைத்திருப்பது சாலச் சிறந்ததாகும்.

## திருக்கோயிலுக்குச் செல்லுதல்

கடவுள் எங்கும் இருக்கிறார். அவரை எவ்விடத்திலும் வணங்கலாம். ஆயினும் கடவுளைத் திருக்கோயில்களில் வணங்குதல் நன்று.

பசுவின் இரத்தத்திலிருந்தே பால் உண்டாகிறது. இரத்தம் பசுவினது உடல் முழுவதும் பரந்திருக்கிறது. ஆயினும் நாம் பாலைப் பசுவின் மடியிலிருந்தே பெறுகிறோம். அதுபோலவே, கடவுள் எங்கும் இருந்தாலும், கோயில்களுக்குச் சென்று வணங்குதலே சிறந்தது. அதனால் நமக்கு இறைவனுடைய அருள் எளிதில் கிடைக்கும்.

நாள்தோறும் கோயிலுக்குச் சென்றால் பல நன்மைகள் கிடைக்கும். எந்த நேரத்திலும் நாம் கடவுளை வணங்கலாம். எனினும் கடவுளைக் காலை, மாலை வணங்குதலே சிறந்ததாம். தினமும் செல்ல இயலாதவர்கள் திங்கள், செவ்வாய், வெள்ளி, பௌர்ணமி, அமாவாசை, மாதப் பிறப்பு, ஆண்டுப் பிறப்பு முதலான சிறப்பு நாட்களிலாவது கோயில்களுக்குச் சென்று வணங்குதல் வேண்டும்.

கோயில்களுக்குப் போகும் முன் நீராடுதல் வேண்டும், தூய ஆடை அணிய வேண்டும். கடவுளை மனதில் நினைத்து 'சிவ, சிவ' என்று சொல்லித் திருநீறு பூசுதல் வேண்டும். தேவார, திருவாசகப் பாடல்களைப் பாடிக்கொண்டே கோயிலுக்குள் செல்லுதல் வேண்டும்.

கோயிலுக்குச் செல்லும்போது கோபுரத்தைக் கண்ட உடனேயே வணங்க வேண்டும். வாசலில் நின்று திருநந்தி தேவரை வணங்கிக் கொண்டு கோயிலுக்குள் செல்லுதல் வேண்டும். அதன் பின்னர் கோயிலினுள் சென்று பிள்ளையார் முன்இரண்டு கைகளிலும் நெற்றியில் மூன்று முறை குட்டி வலக் காதை இடக் கையிலும், இடக்காதை வலக்கையிலும் பிடித்து மூன்று முறை கீழே குனிந்து வணங்க வேண்டும்.

பிள்ளையாரை வணங்கியபின் கருவறையில் உள்ள கடவுளை வணங்க வேண்டும். பின்பு முருகர், தென்முகக் கடவுள் இறையடியார்கள் இலிங்கோற்பவர் (அண்ணாமலையார்), துர்க்கை, பைரவர் முதலான மூர்த்திகளை வணங்குதல் வேண்டும். பின் உமாதேவியார், நடராசர் முதலிய கடவுள்களை வணங்க வேண்டும். அப்படி வணங்கும் பொழுது இரு கைகளையும் கூப்பி வணங்குதல் வேண்டும், இறுதியாகச் சண்டேசுவரரை வணங்கிய பின் கொடி மரத்திற்கு பின்புறம் வந்து அங்கு ஆண்கள் எட்டுறுப்பு நிலம்படிய (அட்டாங்க) கீழே விழுந்து வணங்க வேண்டும்.

அட்டாங்கம்—என்பது தலை, கைகள் இரண்டு, காதுகள் இரண்டு, தோள்கள் இரண்டு, மோவாய் ஆகிய எட்டு உறுப்பு களும் நிலத்திலே படும்படி வணங்குதல்.

(அட்டம்—எட்டு—அங்கம்—உறுப்பு)

தலை, முழங்கால் இரண்டு, கைகள் இரண்டு என ஐந்து உறுப்புகள் நிலத்தில் பொருந்த வணங்குவது (பஞ்ச –ஐந்து)

இவ்வாறு வணங்கிய பின் கோயிலிலே ஓரிடத்தில் இருந்து அருட்பாடல்களைப் பாடுதல் வேண்டும்

கோயிலில் வழிபாடு நடைபெறும் பொழுது ஒழுங்காக நின்று இறைவனை வழிபட வேண்டும்.

## திருக்கோயிலில் செய்ய வேண்டுவன

''ஆலயம் தொழுவது சாலவும் நன்று'' என்பது பழமொழி.

கடவுளை வழிபட நாம் நாள்தோறும் இறைவன் வீற்றி ருக்கும் கோயிலுக்குச் செல்ல வேண்டும். அவ்வாறு செல்லும் போது துவைத்து உலர்ந்த ஆடை அணிந்து, திருநீறு அணிந்து இளநீர், பால், பழம், வெற்றிலை, பாக்கு, பூக்கள், கற்பூரம், முதலான வழிபாட்டுக்குரிய பொருட்களை எடுத்துக் கொண்டு பக்தியோடு செல்லவேண்டும்.

கோயில் அருகில் சென்றவுடன் நம் கண்களில் முதலில் தெரிவது அதன் கோபுரமாகும். அதனை முதலில் வணங்க வேண்டும்.

கோயிலினுள் சென்றதும் பலிபீடத்தைக் காணலாம், அப்பலி பீடத்துக்கு முன்பு நின்று அமைதியுடன், அட்டாங்க, பஞ்சாங்க வழிபாடுகள் செய்தல் வேண்டும்.

இவ்வாறு வணங்கியபின் இருகைகளையும் குவித்து திரு ஐந்தெழுத்தைச் சொல்லி உள்சென்று வழிபாட்டிற்கான பொருட்களை கடவுளுக்கு அளித்து இறைவனைத் தொழ வேண்டும். வணங்கிய பின் கோயிலை வலம் வரவேண்டும். வலம் வரும்போது மூன்றுமுறை அல்லது ஐந்துமுறை கோயிலை வலம் வருதல் நல்லது.

பின்னர் கோயிலில் தேவாரம், திருவாசகம், சிவ புராணம், திருப்புகழ் முதலிய பாடல்களை ஓதி வழிபடல் வேண்டும்.

நாள்தோறும் கோயிலுக்குச் சென்று வணங்குதல் மிகவும் நன்றாகும். இவ்வாறு செல்ல இயலாதவர் திங்கள், செவ்வாய், வெள்ளி. அமாவாசை, பௌர்ணமி, பிரதோசம், திருவாதிரை கார்த்திகை, வருடப்பிறப்பு, சிவராத்திரி, நவராத்திரி முதலிய புண்ணிய நாட்களில் தவறாது சென்று வழிபடல் வேண்டும். கோயிலில் செய்யத் தகாதவை.

1. தூய்மையின்றிச் செல்லுதல்.
2. எச்சில் உமிழ்தல், பாக்கு, வெற்றிலை உண்டல்.
3. மயிர்கோதி முடித்தல், மூக்குநீர் சிந்தல்.
4. வீண் சொற்கள் பேசுதல்.
5. சண்டையிடுதல்.

## திருக்கோயிலைத் தூய்மை செய்தல்

பலரும் வந்து வழிபடும் கோயிலை நாம் மிகத் தூய்மையாக வைத்திருக்க வேண்டும். அடிக்கடி வழிபாட்டிற்காக மக்கள் வந்து செல்வதால், நாள்தோறும் இடையிடையே கோயிலைத் தூய்மை செய்தல் நல்லது.

பழைய பூக்கள், மாலைகள், இளநீர், தேங்காய் மூடிகள், வாழைத்தார்கள் முதலியன கோயிலின் பக்கங்களில் குவியும். அவற்றை அடிக்கடி அகற்ற வேண்டும், அகற்றத் தவறினால் கோயில் அழுக்காகிவிடும்.

இறைவனுக்கு அபிடேகம் செய்வதால் அபிடேக நீர் கோமுகை வழியாகப் பாய்ந்து நிலத்தைச் சேறாக்கிவிடும். அதனால் அடியார்கள் துன்பப்படுவார்கள்.

கோயிற் பாத்திரங்களைத் துப்புரவு செய்யும் போது சாம்பல், கரி தேங்காய் மட்டைகள், நீர் முதலியவற்றால் நிலம் அழுக்கடையும்.

ஆகவே கோயிலின் சுற்றாடலை அடிக்கடி தூய்மை செய்தல் அவசியம்.

அதிகாலையில், புலர்வதன் முன் திருக்கோயிலைக் கூட்டி, சாணநீர் தெளித்தல் அவசியம். கோயிலிலும் அதன் சுற்றுப் புறமும் சுத்தமாக இருக்கும் நிலையிலேயே எம்பெருமானுக்குத் தூப தீபமிட்டுப் பூஜை நடைபெறல் வேண்டும். அப்பொழுது தான் அடியாருள்ளமும் தூய்மையடையும்.

இப்படித் தாம் செல்லுமிடமெல்லாம் உழவாரம் செய்து கொண்டு ஆலயத் திருத்தொண்டாகிய சரியைத்தொண்டு செய்து முத்தியடைந்தவர் அப்பர் சுவாமிகள். அவரே நமக்கு வழி.

''விளக்கினார் பெற்ற இன்பம் மெழுக்கினாற் பதிற்றி யாகும்.''

## திருநீறு

திருநீறு சிவசின்னங்களில் ஒன்று. சைவசமய ஒழுக்கங்களில் இன்றியமையாதது, திருநீறணிதல். வெண்ணிற விபூதியே அணியத் தக்கதாகும். திருநீற்றை வடக்கு முகமாகவோ கிழக்கு முகமாகவோ பூச வேண்டும். அதனைப் பூசும்போது சிவபிரானை நினைத்தலும், திருஐந்தெழுத்தைச் சொல்லுதலும் வேண்டும். திருநீறு பூசும் போது வலக்கையில் நடுவிரல் மூன்றி னாலும் எடுத்து அண்ணாந்து கீழே சிதறாதவாறு அணிய வேண்டும்

திருநீற்றின் சிறப்புக்களைத் திருஞான சம்பந்தர் பாடி யருளிய திருநீற்றுப் பதிகத்தில் விரிவாகக் காணலாம். திருநீறணிவ தால் முத்தியும் சிவஞானமும் உண்டாகுமென ஞான நூல்கள் கூறுகின்றன. ''முத்தி தருவது நீறு'', ' போதம் தருவது நீறு'' என்பன ஞானசம்பந்தர் திருவாக்குகள் ''நீறில்லா நெற்றி பாழ்'' என்று ஆன்றோர் கூறுவர்.

## திருவிளக்கிடுதல்

திருக்கோயில்களில் திருவிளக்கிடுதல் சரியைத் தொழில்களுள் சிறப்புடையது. விளக்கு ஏற்றுபவர்கள், விளக்கைத் தாங்கு

பவர்கள், விளக்கிற்கு நெய் முதலியவற்றை உதவுபவர்கள் யாதும் நீங்கிக் கடவுள் திருவடியை அடைவர்.

திருவிளக்கிற்குப் பசு நெய் மிகவும் சிறப்பானது. திருவிளக்குக்குப் பஞ்சால் திரி செய்ய வேண்டும்.

திருவிளக்கிடுதல் உடம்பால் செய்யும் சரியை வழிபாட்டில் ஒன்றாகும். ஆதலால் நமது அறியாமை எனும் இருளைப் போக்கலாம் அறிவு வடிவான சிவபெருமானைத் திருவிளக்கேற்றி வழிபடுதல் நல்ல திருத் தொண்டாகும்.

நாள்தோறும் அவ்வாறு செய்தால் கடவுளும் நமது வழிபாட்டை ஏற்றுத் திருவருள் புரிவார். எவ்விதத் துன்பமும் நம்மை அணுகா. சோழ நாட்டில் இருந்த நமிநந்தியடிகள் திருவிளக்கிடும் திருப்பணி செய்தே சிவபெருமானை அடைந்தார்.

மாவலி என்னும் அரசன் முற்பிறப்பில் எலியாகப் பிறந்திருந்தான். அவ்வெலி திருக்கோயிலில் உள்ள திருவிளக்கில் இடப்பட்ட திரியைத் தூண்டி ஓங்கி எரியச் செய்தது. அக்காரணத்தால் அது உலகம் காக்கும் நல்வாழ்வையும், இறுதியில் முத்தியையும் பெற்றது.

ஆதலின் சிறுவர்களாகிய நாமும் தூய உள்ளத்துடன் திருவிளக்கேற்றி வழிபாடாற்றித் திருவருளைப் பெற வேண்டும்.

''திருவிளக்கிட்டாரைத் தெய்வம் அறியும்''

## ஆறுபடை வீடுகள்

முருகப்பெருமான் கருணைக் கடலாக விளங்குபவர். அவர் குடிகொண்டுள்ள திருக்கோயில்கள் ஏராளம். அவற்றில் சிறந்தன. ஆறுபடை வீடுகள். அவை முருகப் பெருமானின் அருள் பொங்கும் ஊற்றுக்கள், அவற்றை நாம் கண்டு வழிபடவேண்டும். அதனால் நமக்குப் பெரும் பயன் விளையும்.

முதல் படைவீடு திருப்பரங்குன்றம். இது மதுரைக்கு அருகில் உள்ளது. இத்திருக்கோயில் பெரியது. மலைச்சரிவில் அமைந்

துள்ளது. கருவறைக் குகையில் முருகன் தெய்வானையோடு காட்சி தருகிறார். அருகில் விநாயகர், சிவன், உமை, திருமால் சந்நிதிகளும் உள்ளன.

இரண்டாவது படைவீடு திருச்செந்தூர். இது கடற்கரையில் அமைந்துள்ளது. இங்கு மிகப்பெரிய கோயில் முருகப் பெருமானுக்கு உண்டு இங்கு முருகப்பெருமான் சிவவழிபாடு செய்யும் கோலத்தில் காட்சியளிக்கிறார், முருகர் சூரபதுமன் முதலான சூரர்களை அழித்த இடம் இதுவே.

மூன்றாவது படைவீடு பழனியில் உள்ளது. திருவாவினன் குடி என்பர். இங்கு மலையடிவாரத்தில் ஒரு கோயில் பெரிய அளவில் அமைந்துள்ளது. இது தான் படை வீடாகும், ஆயினும் மலை மேல் உள்ள பெருங்கோயிலே தற்பொழுது புகழ் பெற்று விளங்குகிறது. கீழே உள்ள முருகர் குழந்தை வேலாயுதசாமி என்று அழைக்கப்படுகிறார்.

மேலே முருகர் தவக்கோலத்தில் உள்ளார். இவரைப் பழனியாண்டவர் என்பர். இத்திருக்கோயில் உலகப் புகழ் பெற்றதாகும்.

நான்காவது படைவீடு சுவாமிமலை. இதற்குத் திருவேரகம் என்ற பெயரும் டண்டு. இது கும்பகோணத்துற்கு அருகில் உள்ளது. இக்கோயிலுக்கு அருகில் காவிரியாறு ஓடுகிறது. ஒரு பெரிய மேட்டின் மீது இக்கோயில் அமைந்துள்ளது. இம்மேடே மலை எனப்படுகிறது. இக் கோயில் பெரியது இங்குதான் முருகப்பெருமான் சிவபெருமானுக்கு உபதேசித்தார். எனவே இங்கு சுவாமிநாதப்பெருமான் எனப்படுகிறார் இங்கு நின்ற கோலத்தில் முருகர் காட்சியளிக்கிறார்.

ஐந்தாவது படைவீடு குன்றுதோறாடல் எனப்படும். முருகன் உறையும் மலைகள் எல்லாம் இதிலடங்கும். இவற்றில், திருத்தணிகை, வள்ளிமலை, மயிலம், குன்றக்குடி, கழுகுமலை, சென்னிமலை, சிவன் மலை, திருச்செங்கோடு, மருதமலை, கதிர்காமம் முதலிய மலைகள் புகழ்பெற்றன.

ஆறாவது படைவீடு பழமுதிர்சோலை இது சோலை மலை அல்லது அழகர்மலை எனப்படும். மதுரைக்கு அருகில் உள்ளது.

மலைமீது முருகப்பெருமானின் சிறிய திருக்கோயில் அமைந்துள்ளது. இங்கு முருகர், வள்ளி தெய்வானையோடு நின்ற கோலத்தில் காட்சி தருகிறார். மலையடிவாரத்தில் திருமாலிருஞ்சோலை அழகராகிய திருமால் கோயில் உள்ளது.

## இதயக் கோயிலில் ஆடும் இறைவன்

மனிதனுக்குக் கைகால் முதலிய உறுப்புக்கள் உள்ளன. அதே போல இந்த உலகிற்கும் அத்தகைய உறுப்புகள் உண்டு: உலகம் இறைவனின் ஒரு வடிவம். எனவே அதற்கும் உறுப்புகள் அமைந்துள்ளன என்று சமய நூல்கள் கூறுகின்றன

உறுப்புகளில் சிறந்தது இதயம், அங்கிருந்து தான் உடலின் மற்ற பகுதிகளுக்குக் குருதி பாய்கிறது. இதயம் இயங்காவிட்டால் உடல் இயங்காது. உலகமாகிய உடலுக்கு இதயமாக விளங்குவது தில்லை, தில்லை என்ற மரமே இங்கு தலமரம். எனவே இதற்குத் தில்லை என்ற பெயர் வந்தது தில்லையை வடமொழியில் 'சிதம்பரம்' என்பர். 'இதயக் கோயில்' என்பது அதற்கு மற்றொரு பெயர்,

தில்லைத் திருக்கோயிலுக்குக் 'கோயில்' என்றே பெயர். இக்கோயில் மிகவும் பெரியது நான்கு புறமும் உயர்ந்த மதில் சூழ்ந்தது. நான்கு திசைகளிலும் உயர்ந்த கோபுரங்கள் உள்ளன. ஆயிரங்கால் மண்டபம், சிவகங்கைக் குளம் முதலியவற்றை உள்ளடக்கியது, இங்குள்ள இறைவனின் கருவறைக்குச் 'சிற்றம்பலம்' என்று பெயர் இதன் கூரை பொன் தகடுகளால் வேயப்பட்டுள்ளது எனவே பொன்னம்பலம் எனவும் படும் இதயம் உடலின் நடுவில் அமையாமல் சற்றுத் தள்ளியே அமைந்துள்ளது. அதுபோலவே இச் சிற்றம்பலமும் கோயிலின் வாயிலுக்கு நேராக அமையாது சற்றுத் தள்ளி இடப்புறம் அமைந்துள்ளது இதயம் ஓயாமல் துடிக்கின்றது. அதுபோலவே இங்கும் சிவபெருமான் ஓயாமல் ஆடிக்கொண்டு இருக்கின்றார். அவரது ஆட்டம் நின்றால் உலகம் அழிந்துவிடும். இதை உணர்த்த நடராசப் பெருமான் என்னும் ஆடல் வல்லானின் சிலை கருவறையில் விளங்குகின்றது. இதை உணர்த்தவே எல்லாச் சிவன் கோயில்களிலும் ஆடல் வல்லான் சிலை அமைந்துள்ளது.

உடல் முழுமைக்கும் குருதியை இதயம் அனுப்புகிறது. அதுபோல எல்லாத் திருக்கோயில்களுக்கும் தில்லைத் திருக்கோயிலே அருளை வழங்குகிறது. எனவே இக்கோவில் சைவத்துக்குத் தலைமை இடமாக இருக்கிறது. இங்கு நாள்தோறும் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன. ஆண்டுக்கு ஆறு முறை ஆடல் வல்லானுக்குப் பெருந்திருமஞ்சனம் நடைபெறும். இரண்டு முறை தேர்த் திருவிழா நடைபெறும் இக் கோயிலில் உள்ள அம்பிகைக்குச் சிவகாமியம்மை என்பது திருப்பெயர். இங்குள்ள பிள்ளையாரை முக்குறுணிப் பிள்ளையார் என்பர். முருகனைப் பாண்டிய நாயகர் என்பர். இது வணங்குவோர்க்குப் பேரின்பம் அளிக்கும் சிறப்புடையது. சமயக் குரவர்கள் நால்வரும் இக்கோயிலின் நான்கு வாயில்கள் வழியாகச் சென்று இறைவனை வழிபட்டனர். இத் திருக்கோயிலைக் கண்டு வணங்குவது நம் கடமையாகும்.

## பிள்ளையாருக்கு அமுதூட்டிய சிறுவர்

சிவபெருமானின் மூத்தபிள்ளை விநாயகர். இளைய பிள்ளை முருகர். விநாயகரைப் 'பிள்ளையார்' என்பர். அவர் 'ஓங்கார' வடிவினர். அடியார்கள் வேண்டும் வரங்களை அளித்து மகிழ்பவர் அவரை வணங்கிய பிறகே நாம் மற்ற பணிகளைச் செய்ய வேண்டும். அதனால் அவருக்கு எல்லா இடங்களிலும் கோயில்கள் உள்ளன.

திருநாரையூர் என்பது சிதம்பரத்திற்கு அருகில் உள்ளது. அங்கு சிவன்கோயில் உள்ளது, அக்கோயிலில் பிள்ளையாரும் உள்ளார். அவர் திருப்பெயர் பொல்லாப் பிள்ளையார். பொல்லாப் பிள்ளையார் என்றால் உளியில் செதுக்கப்படாமல் தானே உருவானவர் என்பது பொருள்.

முன்பொரு காலத்தில் அந்தணர் ஒருவர் வழிபாடு செய்து வந்தார். அவருக்கு ஒரு மகன் இருந்தார். அவர் பெயர் நம்பியாண்டார் நம்பி என்பது. ஒரு நாள் தந்தை வெளியூர் செல்ல நேர்ந்தது தன் மகனையே கோயில் வழிபாடுகளைச் செய்யச் சொல்லிவிட்டுப் புறப்பட்டார்.

நம்பியாண்டார் நம்பி சிறுவர். கோயிலுக்குச் சென்று வழிபாட்டைத் தொடங்கினார். முதலில் பொல்லாப் பிள்ளை

யாரிடம் சென்றார். அவருக்கு நீராட்டினார்; பின்னர் ஆடைகளை அணிவித்தார்; திருநீறு, சந்தனம், மலர்கள், மாலை என முறையாக அணிவித்தார். பிறகு இறைவனுக்கு அமுதை (சோறு) எடுத்தார், அதைப் பிள்ளையாருக்கு முன்பு வைத்து வைத்து உண்ணச் சொன்னார். பிள்ளையார் உண்ணவில்லை சிறுவருக்குக் கவலை பிறந்தது. ஒரு வேளை நாம் வைத்ததால் தான் இவர் உண்ணவில்லையோ? உளம் வருந்தினார். பலவாறு வற்புறுத்தி உண்ணும்படி அமுது அன்பால் நெகிழ்ந்து வேண்டினார். பிள்ளையாருக்குச் சிறுவர் மீது கருணை பிறந்தது. தனது துதிக்கையை நீட்டி அமுதை உண்டருளினார். இதனால் சிறுவர் மகிழ்ந்தார். பிள்ளையார் அருளால் நம்பியாண்டார் நம்பி பேரறிவு பெற்றார். அவர் புகழ் எங்கும் பரவியது.

## காலையும் மாலையும் கடவுளை வணங்கு

கிடைத்ததற்கரிய மனிதப் பிறவி நமக்கு உண்டு. இதை அளித்தவர் பரம் பொருளாகிய சிவபெருமான். நாம் நாள் தோறும் அவரை வழிபட வேண்டும்.

நாம் கதிரவன் உதிப்பதன் முன் படுக்கையை விட்டெழுதல் வேண்டும். எழும்போது சிவசிவ என்று சொல்லிச் சிவபிரானை மனதில் எண்ண வேண்டும்.

உணவு உண்ணும் முன்பும் உண்டபின்பும் சிவபெருமானை மனதில் நினைத்தல் வேண்டும். செல்லும் வழிகளில் கோயில்களைக் கண்டால் வணங்குதல் வேண்டும்.

நாம் அன்றாடக் கடமைகளைச் செய்யத் தொடங்கும் முன் கடவுளை வணங்கித் தொடங்குதல் வேண்டும். வீண் சொற்கள் பேசாமல் தேவாரம் திருவாசகம், அடியார் வரலாறுகள் முதலான நூல்களைப் படித்தல் வேண்டும்.

தூங்கச் செல்லும் போதும் கடவுளை நினைத்துத் திருநீறு அணிய வேண்டும். நாள் தோறும் இவ்வாறு செய்தால் கடவுளைப் பற்றிய எண்ணம் மேன்மேலும் உண்டாகும். மெய்யறிவு வளரும். அதனால் நாம் பிறவிப் பயனையும் அடையலாம்,

## முதலை உமிழ்ந்த சிறுவன்

திருப்புக்கொளியூர் என்பது கொங்கு நாட்டில் உள்ள ஊராகும் தற்போது இவ்வூர் அவிநாசி என வழங்கி வருகிறது. அவ்வூரில் திருக்கோயில் ஒன்று உள்ளது. அங்குள்ள சிவபெருமானின் திருப்பெயர் 'அவிநாசியப்பர்' என்பது. ஒரு சமயம் சுந்தரமூர்த்தி நாயனார் அங்கு சென்றார் கோயிலுக்கு அருகில் ஒரு வீட்டில் அழுகை ஒலி கேட்டது. இன்னொரு வீட்டில் மங்கல ஒலி கேட்டது. சுந்தரர் அங்கிருந்தோரைப் பார்த்து அதற்குக் காரணம் வினவினார். அவர்கள் 'சுவாமி' சில ஆண்டுகளுக்குள் முன்பு இவ் வீடுகளைச் சேர்ந்த சிறுவர்கள் குளத்திற்குக் குளிக்கச் சென்றார்கள். அப்பொழுது ஒரு சிறுவனைக் குளத்திலிருந்த முதலை விழுங்கிவிட்டது. தப்பிய சிறுவனுக்கு இன்று பூனூல் அணிவிக்கின்றனர் எனவே அந்த, சிறுவனின் வீட்டில் மங்கல ஒலி கேட்கிறது பிள்ளையை இழந்த வீட்டில் இன்னும் வருந்தி அழுகின்றனர்'' என்றனர்.

இதைக் கேட்ட சுந்தரர் வருந்தினார். நேராக அவிநாசியப்பர் முன்பு சென்று வணங்கினார். பின்பு குளக்கரைக்குச் சென்றார். அங்கு சிவபெருமானைப் போற்றிப் பாடத் தொடங்கினார். அதில் ஒரு பாடலில் ''யமனிடமிருந்து சிறுவனை மீட்டுத்தா'' என்று வேண்டினார் சுந்தரர். பாடலுக்கு அவிநாசிப் பெருமான் மனம் இரங்கினார். உடனே வற்றிக் கிடந்த அக்குளத்தில் நீர் நிறைந்தது அதில் ஒரு முதலையும் தோன்றியது; அது கரைக்கு வந்து. முன்பு விழுங்கிய சிறுவனை உமிழ்ந்தது; பிறகு நீரினுள் சென்று மறைந்தது. அச் சிறுவன் முன்பு பிழைத்த சிறுவனின் தற்போதைய வளர்ச்சியை ஒத்திருந்தான்.

இதைக் கண்டவர்கள் பெரும் வியப்புற்றனர். தமிழ்ப் பாடலின் உயர்வை உணர்ந்து மகிழ்ந்தனர்.

சுந்தரரையும் அவிநாசியப்பரையும் பல முறை வீழ்ந்து வணங்கினர். சுந்தரர் பாடல்கள் தேவாரத்தின் இறுதியில் அமைந்துள்ளன. நாமும் அப்பாடல்களைப் பாடிப் பயன் பெறுவோமாக!

## இரவில் வந்த விருந்தாளி

இளையான்குடி என்ற ஊரில் மாறர் என்பவர் வாழ்ந்து வந்தார். அவர் சிறந்த சிவனடியார். அவர் மனைவியும் அவருக்கு ஏற்றவர். சிவனடியார் அடிக்கடி அவர்களை நாடி வருவர், அவர்களுக்கு மாறர் அறுசுவை உணவளிப்பார்.

ஒருசமயம் அவர்களுக்கு வறுமை ஏற்பட்டது. அதனால் கடன் வாங்கி உணவளித்தனர் சில நாட்களில் கடன்தருவாரும் இல்லாதநிலை வந்தது. அப்பொழுது அவர்களைச் சோதிக்கச் சிவபெருமான் முற்பட்டார். சிவனடியார் கோலத்தில் இரவில் மாறரிடம் வந்தார். மழையோ கொட்டிக் கொண்டிருந்தது.

மாறர் அடியவரை அன்புடன் வரவேற்றார். அவருக்கு உணவு படைக்க விரும்பினார். வீட்டிலோ ஒன்றுமில்லை. தம் மனைவியுடன் சிந்தித்தார் அவரது துணைவியார், அதற்கு ஒரு வழி சொன்னார். இன்று காலை வயலில் நெல்லை முளைக்கப் போட்டிருந்தோம் அல்லவா? அதனை அரித்து எடுத்துக் கொண்டு வாருங்கள் என்றார். மாறர் உடனே அதை எடுத்துவரக் கூடையுடனே சென்றார். இருளிலும், மழையிலும் சென்று நெல்லை எடுத்து வந்தார். வீட்டில் விறகுகூட இல்லை கூரைக்குப் பயன் படுத்தியிருந்த மரங்களையே அறுத்தெடுத்தார். அடுப்பில் வைத்துத் தீ மூட்டினார். அவர் மனைவி நெல்லைக் கழுவி வறுத்தார். பிறகு குத்தி அரிசியாக்கினார். அதைக் கொண்டு உணவு தயாரித்தார். மாறர் வீட்டுக் கொல்லைக்குச் சென்றார். அங்கிருந்த கீரைகளைப் பறித்து வந்தார். அவர் மனைவி அதைக் கூட்டாக மாற்றினார்.

பிறகு, பசிக்களைப்பால் உறங்கும் சிவனடியாரை மாறர் எழுப்பினார். உறங்குவதைப் போல நடித்துக் கொண்டிருந்த சிவபெருமான் பேரொளியாக மாறினார். மாறர் அதிர்ச்சி அடைந்தார். இறைவன் அவர் கலக்கத்தை நீக்க எண்ணினார். ஒளி மறைந்தது இறைவன் காளைமீது உமை அம்பிகையுடன் அருட்காட்சி தந்தார், மாறரும் அவர்தம் மனைவியாரும் மகிழ்ந்து போற்றினர். இறைவன் அவர்களுக்கு நற்கதி அளித்தார். சிவனடியார்களுக்குப் பணிசெய்தே மாறர் உயர்ந்தார். அவரால் அவருடைய மனைவியாரும் உயர்ந்தார்.

## அம்மை அளித்த அருட்பால்

சோழநாட்டில் சீர்காழி என்ற தலம் உள்ளது. அங்கே சிவபாத இருதயர் என்றும் அந்தணர் வாழ்ந்து வந்தார் அவருடைய மனைவியார் பகவதியார். இருவரும் சிவபக்தி நிறைந்தவர்கள். சீர்காழி சிவபெருமானான தோணியப்பரைத் தினமும் வணங்கிவந்தனர். அவர் அருளால் அவர்களுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது.

குழந்தைக்கு மூன்று வயதானது. ஒருநாள் சிவபாத இருதயர் கோவிலுக்குச் சென்றார் குழந்தையும் பின்னால் சென்றது. கோயிலுக்குச் செல்வதற்கு முன் குளிக்க வேண்டும். சிவபாத இருதயரும் அங்கிருந்த குளத்தில் நீராடினார். குழந்தை கரையில் நின்றிருந்தது. அவர் நீரில் மூழ்கி மூழ்கி நீராடினார். அதனால் தந்தையைக் காணாது குழந்தை அழுதது 'அம்மே, அப்பா' என்று கதறியது. சிவபாத இருதயருக்கு அதன் அழுகை கேட்கவில்லை.

ஆனால், உலகத்திற்குப் பெற்றோரான சிவசக்திகளுக்குக் கேட்டது. அது முற்பிறப்பில் புண்ணியம் செய்த குழந்தை. எனவே சிவபெருமான் அம்பிகையுடன் தோன்றினார். குழந்தை அவர்களைக் கண்டது. சிவபெருமான் அம்பிகையை நோக்கினார். குழந்தைக்குப் பாலூட்டும்படி சொன்னார். அம்பிகை தமது பாலையே பொற்கிண்ணத்தில் இட்டு ஊட்டினார். குழந்தை உண்டு மகிழ்ந்தது. அழுகையும் நீங்கியது. சிவசக்தியும் மறைந்தனர்.

நீராடிய சிவபாத இருதயர் கரைக்கு வந்தார். குழந்தையைக் கண்டார். அதன் வாயில் பால் வடிந்திருந்தது

''உனக்குப் பால் தந்தவர் யார்?'' என்று கோபத்துடன் கேட்டார். குழந்தை தோணியப்பரது கோபுரத்தைக் காட்டி, 'தோடுடைய செவியன்' எனத் தொடங்கும் தேவாரத்தைப் பாடியது.

சிவபாத இருதயர் மிகவும் வியப்படைந்தார். தமது குழந்தை தெய்வக் குழந்தை என்பதை உணர்ந்தார். தேவியிடம் ஞானப் பால் உண்டதால் குழந்தை ஞான சம்பந்தராயிற்று. பிறகு

ஞான சம்பந்தர். ஊர் ஊராகச் சென்றார். சிவபெருமானின் கோயில்கள் பலவற்றையும் பாடினார். அப்பாடல்கள் தேவாரத்தின் முதற் பகுதியாக விளங்குகின்றன.

## முருக நாயனாரின் பூந்தோட்டம்

சோழநாட்டில் திருப்புகலூர் என்னும் ஊர் உள்ளது. இவ்வூர் சிறந்த சிவத்தலம். இங்கு முருகர் என்பவர் வாழ்ந்து வந்தார். அவர் சிவபெருமானிடத்துப் பேரன்புடையவர். சிவ வழிபாட்டுக்கு மலர்களும், இலைகளும் தேவை. எனவே முருகர் ஒரு பூந்தோட்டத்தை அமைத்தார்.

முருகரது பூந்தோட்டத்தில் கொன்றை, வில்வம், வன்னி செம்பகம் முதலிய மரங்கள் இருந்தன. அவர் மல்லிகை, முல்லை முதலிய செடிகளையும் வளர்த்திருந்தார். பூந்தோட்டத்தின் மற்றொரு பகுதியில் செடிகள் இருந்தன. மருக்கொழுந்து, தும்பை, அலரி, நந்தியாவட்டை, கொக்கு மந்தாரை போன்றவை அங்கு நிறைந்திருந்தன.

முருகர் விடியுமுன்பே எழுவார். குளித்து விட்டுப் பூந்தோட்டம் செல்வார். மலர்களையும், இலைகளையும் கொய்வார். அவற்றைத் தனித்தனிக் கூடைகளில் வைப்பார் அருகிலுள்ள குளத்திலிருந்து, தாமரை, செங்கழுநீர் முதலிய மலர்களையும் பறிப்பார். பிறகு அம்மலர்களைக் கொண்டு மாலைகள் கட்டுவார். அவர் மாலை கட்டி, இறைவனை அலங்கரிப்பதில் வல்லவர்.

திருப்புகலூர்த் திருக்கோயிலில் காலையிலும், மாலையிலும் பூசைகள் நிகழும். அதற்கு அம்மாலைகள் பயன்படுத்தப்பட்டன. முருகர் மலர்களைத் தூவி இறைவனைப் போற்றி வழிபடுவார். எப்பொழுதும் 'நமசிவாய' என்னும் ஐந்தெழுத்தைச் சொல்லிக் கொண்டிருப்பார், அதனால் எல்லோராலும் போற்றப்பட்டார் ஞானசம்பந்தரும் அவரது பணிகளைப் போற்றியுள்ளார், பூந்தோட்டப் பணியினால் இறுதியில் முருகர் சிவபெருமானோடு சேர்ந்தார்.

## கடலில் மிதந்த கற்பாறை

அப்பர் திருவாமூரில் பிறந்தவர். அவரது இயற்பெயர் மருள் நீக்கியார். இளமையிலேயே பெற்றோரை இழந்தார். அவரு

டைய அக்கா அவரை வளர்த்து வந்தார். திலகவதியார் என்பது அவர் பெயர், அப்பெண்மணி சிவபெருமானிடத்தில் மிகுந்த அன்பு பூண்டவர்.

சிலகாலம் சென்றது. மருள்நீக்கியார் கல்வி கற்கச் சென்றார். அப்பள்ளி சமண சமயத்தவருடையது. எனவே மருள் நீக்கியார் எளிதில் மதம் மாறினார். விரைவில் சமண நூல்களைக் கற்றார். சமணர்களுக்குத் தலைமைக் குருவாகவும் ஆனார். அப்பொழுது அவருக்குத் தருமசேனர் என்னும் பட்டம் கிடைத்தது தம்பி மதம் மாறியதால் திலகவதியார் பெரிதும் வருந்தினார்.

அவர் மருள் நீக்கியாரைச் சைவத்துக்கு மீட்க விரும்பினார். திருவதிகையிலுள்ள ஆலயம் சென்றார். அங்கு எழுந்தருளியுள்ள சிவபெருமானிடம் முறையிட்டார். அவரது விருப்பத்தை இறைவன் நிறைவேற்ற முற்பட்டார்.

சமணரோடு வாழ்ந்த மருள்நீக்கியார்க்குச் சூலைநோய் ஏற்பட்டது. அது பொல்லாத வயிற்று நோய். அந்நோயில் அவர் துடித்தார். சமணர்களால் அந்நோயைத் தீர்க்க முடியவில்லை. துன்பம் தாளாத அவர் திலகவதியாரிடம் திரும்பினார் அவர் திருவதிகை இறைவனிடம் அழைத்துச் சென்றார். திருநீறு அணிவித்து இறைவனை வணங்கச் செய்தார். வணங்கியதும் அந்நோய் தீர்ந்தது.

தனது துன்பத்தைத் தீர்த்த இறைவனை நோக்கினார். பத்தி வெள்ளம் பெருகியது. அழகிய தமிழ்ப்பாடல்களால் சிவபெருமானைப் போற்றிப் பாடத் தொடங்கினார். அன்றிலிருந்து அவருக்குத் 'திருநாவுக்கரசர்' என்ற பெயரும் உண்டாயிற்று.

அந்த நாட்டு மன்னர் சமண சமயத்தவன். மருள்நீக்கியார் சைவம் சென்றதை அறிந்து கோபம் கொண்டான். ஏனைய சமணர்களும் அரசனுக்குக் கோள் மூட்டினர்.

எனவே, அரசன் நாவுக்கரசரைத் தண்டிக்க விரும்பினான். அவரைச் சுண்ணாம்புச் சூளையில் அடைத்தான். அதனால் அவருக்கு எவ்விதத் துன்பமும் ஏற்படவில்லை, பிறகு நஞ்சை ஊட்டினான். அதுவும் வேலை செய்யவில்லை. யானையை விட்டுக் கொல்ல முயன்றான். யானை திரும்பி ஓடியது இறுதியாக, அவரைக் கற்பாறையோடு சேர்த்துக் கடலில் தள்ளச் செய்தான்.

என்ன அதிசயம்! அந்தக் கற்பாறை கடலில் படகுபோல மிதந்தது. அதன் மீதிருந்து திருநாவுக்கரசர் சிவபெருமானை வணங்கினார். அரிய பாடல்களைப் பாடினார். அக்கல் கரையை அடைந்தது. அதன்பிறகு அவரது புகழ் எங்கும் பரவியது. அவர் காலத்தில்தான் திருஞானசம்பந்தரும் வாழ்ந்தார். அவர்தான் முதன்முதலில் 'அப்பர்' என்று அழைத்தார் அப்பர் பாடல்கள் தேவாரத்தின் நடுப்பகுதியாக விளங்குகின்றன.

## அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ்

1. மதியால் வித்தகனாகி மனத்தால் உத்தமனாகிப்
பதிவாகிச் சிவஞான பரயோகத்து அருள்வாயே
நிதியே நித்தியமே என்நினைவே நற்பொருளாயோய்
கதியேசொற் பரவேளே கருவூரில் பெருமாளே!

நிலைத்த செல்வமே! என் நினைவில் உள்ள நல்ல பொருளே! எல்லோருக்கும் கதியாக விளங்கும் முருகா! கருவூரில் விளங்கும் பெருமானே! அடியேன் நல்லறிவு பெறவும், நல்லவனாகி வாழவும் சிவஞானம் பெறவும் அருள்வீராக!

2. தீராப் பிணிதீர சீவாத்தும ஞான
ஊர் ஆட்சியதான ஓர்வாக்கு அருள்வாயே
பாரோர்க்கு இறைசேயே பாலாக் கிரிராசே
பேரால் பெரியோனே பேரூர்ப் பெருமாளே!

உலகக் கடவுளான சிவபெருமானின் திருமகனே! மலைக்கு அரசே! பெரும்புகழ் பெற்றவரே! பேரூரில் விளங்கும் முருகா! அடியேனுடைய நோய்களைத் தீர்ப்பீராக! அடியேன் உயர்ந்த அறிவு பெற வழிகாட்டுவீராக!

## கந்தரலங்காரம்

3. விழிக்குத் துணை திருமென்மலர்ப் பாதங்கள் மெய்மை குன்றா
மொழிக்குத் துணை முருகா எனும் நாமங்கள் முன்பு செய்த
பழிக்குத் துணை அவன் பன்னிருதோளும் பயந்த தனி
வழிக்குத் துணை வடிவேலும் செங்கோடன் மயூரமே!

நாம் பார்க்கத் தக்கன முருகனின் திருவடிகள்! நாம் பேசத் தக்கன முருகா, குமரா என்ற சொற்கள்! அதனால் நம்முடைய பாவங்கள் அகல்கின்றன! நமக்குச் செங்கோட்டு முருகனின் வேலும் மயிலும் எப்போதும் துணையாக நிற்கின்றன.

4. சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச்
செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித்தோனை விளங்கு வள்ளி
காந்தனைக் கந்தக்கடம்பனைக் கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போதும் மறவாதவர்க்கு ஒருதாழ்வில்லையே!

சேந்தன், கந்தன், வேலன், தமிழ்க்கடவுள், வள்ளி மணாளன், கடம்பன், மயில்வாகனன் என்றெல்லாம் புகழப் படுபவர் செங்கோட்டு வேலர். அவரை நாம் வாழ்நாள் முழுவதும் மறவாது போற்ற வேண்டும். அப்படிச் செய்தால் நமக்கு எக்குறையும் ஏற்படாது.

## குழகக்கன்றின் குறும்புகள்

காமதேனு என்பது தேவ உலகத்தில் உள்ள ஒரு பசு. அது ஒரு காலத்தில் தவம் செய்ய விரும்பியது. நாரத முனிவரிடம் தவம் செய்ய ஏற்ற இடத்தைத் தெரிவிக்குமாறு கேட்டது அவர் கொங்கு நாட்டில் உள்ள பேரூரில் தவம் செய்யச் சொன்னார்.

காமதேனு பேரூர் வந்தது. அங்கு சிவபெருமான் ஒரு புற்றில் இலிங்க வடிவில் வீற்றிருந்தார். அந்தப் புற்றுக்கு அருகில் காமதேனு தவச்சாலை அமைத்துக் கொண்டது. அதன் கன்றான குழகனும் அங்கு இருந்து வந்தது. அது நாள்தோறும் அங்குள்ள காஞ்சி ஆற்றில் நீராடும். பின்பு புற்றில் உள்ள இறைவன் மேல் பாலைப் பொழிந்து வழிபடும்.

ஒருநாள் இரவு காமதேனு தவத்தில் மூழ்கி இருந்தது. அங்கு நிலவு ஒளி வீசிக் கொண்டிருந்தது. அப்போது குழகன் துள்ளி விளையாடிக் கொண்டிருந்தது. விளையாட்டில் முனைப்பாக இருந்த குழகன் திடீரென்று புற்றின்மேல் ஏறியது. குழகனின் குளம்பு இறைவன்மேல் அழுந்தியது. பிறகு தன் சிறு கொம்பால் புற்றை முட்டியது. கொம்பும் இறைவன் திருமேனியில் பாய்ந்தது, இதனால் செங்குருதி பெருகியது. புற்றெல்லாம் குருதி வழிந்து சிவந்தது. இவ்வாறு இரவும் கழிந்தது.

காலையில் காமதேனு வழிபாட்டிற்கு வந்தது. புற்றைக் கண்டு அதிர்ச்சி அடைந்தது. நடுங்கியபடி இறைவன் முன்பு சென்றது. கண்ணீர் வழியத் தன் கன்றின் செயலுக்காக மன்னிப்பு வேண்டியது. அப்பொழுது பேரூர்ப் பெருமான் அதற்குக் காட்சியளித்தார்.

இறைவன், ''காமதேனுவே! நீ வருந்தாதே! அறியாக் கன்றின் செயலை மன்னித்தோம். அதை நாம் அறியா விளையாட்டு என்றே எடுத்துக் கொண்டோம். குழகனின் குளம்புச் சுவடும், கொம்புச் சுவடும் என்றும் நம்மீது இருக்கும். அவையே நமக்குச் சிறந்த அணிகலன்கள்'' என்று கூறினார். பிறகு காமதேனுவிற்கு வேண்டிய வரங்களை நல்கி மறைந்தார்.

காமதேனு தங்கியிருந்த இடமாதலின் புற்றிருந்த பகுதி பட்டி எனப்பட்டது. அதனால் பேரூர்ப் பெருமானுக்கும் பட்டிப் பெருமான் என்ற திருப்பெயர் ஏற்பட்டது. இன்னும் பட்டிப் பெருமான் மீது அச்சுவடுகள் உள்ளன. இறைவனின் மன்னிக்கும் இயல்பையும், பெருங்கருணையையும் இந்நிகழ்ச்சியால் அறியலாம்.

## பிட்டுக்கு மண் சுமந்த பெருமான்

பாண்டிய நாட்டின் தலைநகரம் மதுரை. அது வைகைக் கரையில் உள்ளது. முன்பு ஒரு காலத்தில் அந்நாட்டை அரிமர்த்தனன் ஆண்டு வந்தான். அவனுக்கு, மாணிக்கவாசகர் அமைச்சராக இருந்தார். அவரது பெற்றோர் அவருக்கு இட்ட பெயர் திருவாதவூரர் என்பது. ஒருசமயம் குதிரைப்படையில் புதிதாகக் குதிரைகளைச் சேர்க்க அரசன் விரும்பினான். அதன்படி குதிரைகள் வாங்க மாணிக்கவாசகரையே அனுப்பினான். குதிரை வாங்க அவர் புறப்பட்டார்.

செல்லும் வழியில், ஒரு குருந்த மரத்தின் கீழ்ச் சிவபெருமான் குரு வடிவில் காட்சியளித்தார் மாணிக்கவாசகருக்கு அவர்மேல் ஆழ்ந்த ஈடுபாடு ஏற்பட்டது. எனவே, குதிரை வாங்குவதைப் பற்றி நினைக்காமல் இருந்தார். அதற்கென எடுத்துச் சென்ற பொருட்களைக் கொண்டு, அங்கு ஒரு பெரிய கோயில் கட்டினார். இதை ஒற்றர்கள் அரசனிடம் கூறினர். அரசனுக்குச் சினம் மூண்டது. மாணிக்கவாசகரைச் சிறைப்படுத்திக் கொடுமைகள் செய்தான். இறைவன் அவரைக் காக்க எண்ணினார்.

வைகையில் திடீரென்று வெள்ளம் வந்தது. ஊருக்குள்ளும் அது பாய்ந்தது. எனவே, ஆற்றின் கரையில் மண்ணைக் கொட்ட வேண்டியிருந்தது. மண்ணைக் கொட்டி வெள்ளத்தைத் தடுக்கும்படி மக்களுக்கு அரசன் ஆணையிட்டான். எல்லோரும் கரையை உயர்த்தச் சென்றனர்.

அக்காலத்தில் வந்தி என்ற மூதாட்டி மதுரையில் வாழ்ந்து வந்தார். அவர் பிட்டு விற்பவர். மதுரையில் சிவபெருமானின் பெரிய கோயில் உள்ளது. அவர் நாள்தோறும் கோயிலுக்குச் செல்வார். சிவபெருமானைப் போற்றி வழிபடுவார். மூதாட்டியான அவரால் மண்சுமக்கப் போக முடியவில்லை. எனவே இறைவனிடம் முறையிட்டார். கருணையே வடிவானவர் சிவபெருமான். எனவே ஒரு கூலியாள் போல வந்தியிடம் வந்தார். வந்தி மகிழ்ந்தார். பிட்டையே கூலியாகக் கொடுத்து, அவரைப் பணிக்கு அனுப்பினார்.

இறைவன் வைகைக் கரைக்குச் சென்றார். மண் சுமந்து எல்லோர் பங்கிலும் போட்டார். வந்தியின் பங்கில் மட்டும் போடவில்லை. இதனால் வந்திக்கு ஒதுக்கிய பங்கிலிருந்து, தண்ணீர் பெருகியோடியது. இதைக் கண்ட அரசனுக்குப் பெருங்கோபம் வந்தது. வந்தியின் ஆளை அழைத்தான். இறைவனும் அவன் முன்பு வந்தார். உடனே, தன் கைப்பிரம்பால் அவருக்கு ஓர் அடி கொடுத்தான். அந்த அடி எல்லோர் மீதும் வீழுந்தது. உலகம் திடுக்கிட்டது. கையிலிருந்த மண்ணை இறைவன் வந்தியின் பங்கில் கொட்டினார். உடனே மறைந்தார், அப்பங்கும் அடைபட்டு, வெள்ளம் குறைந்தது.

அரசன் நடுநடுங்கி நின்றான். இறைவன் வானில் தோன்றினார். வருந்தும் அரசனுக்கு ஆறுதல் சொன்னார். மாணிக்கவாசகரின் பெருமையை உணர்த்தினார். அரசன் ஓடோடிச் சென்று மாணிக்கவாசகரை விடுதலை செய்தான். காலில் விழுந்து மன்னிக்க வேண்டினான். அவரும் மன்னித்து அருளினார். மாணிக்கவாசகரின் பெருமையையும், வந்தியின் சிவபக்தியையும் அனைவரும் உணர்ந்தனர். இறைவனின் அருளை நினைத்து மாணிக்கவாசகர் பாடிய திருவாசகம் மிகச்சிறந்த சைவ நூலாகத் திகழ்கிறது.

## என்னை அடிக்க ஆளில்லையே

அரதத்த சிவாசாரியார் சிறந்த சிவனடியார். கஞ்சனூர் என்ற ஊரைச் சேர்ந்தவர். கஞ்சனூரில் அழகிய திருக்கோயில்

உள்ளது. அரதத்தர் நாள்தோறும் அக்கோயிலுக்குச் செல்வார் அங்கு எழுந்தருளியிருக்கும் சிவபெருமானை வணங்குவார் ஒரு சமயம் அவரிடம் சிலர் வந்தனர். சிவபெருமான்தான் கடவுள் என்பதை விளக்க முடியுமா? என்றனர். அவரும் உடன்பட்டார். இரும்பு முக்காலியைப் பழுக்கக் காய்ச்சிக் கொண்டு வரச் சொன்னார். முக்காலியும் வந்தது அரதத்தர் தயங்காது அதன் மீது ஏறினார். சிவபெருமானே பரம்பொருள் என்று சத்தியம் செய்தார். முக்காலிச்சூடு அவரை ஒன்றும் செய்யவில்லை. அவருடைய சிவபக்தியை எல்லோரும் வியந்தனர்.

ஒருசமயம் அவர் உடல்நலம் குன்றியிருந்தார். அதனால் அவரால் குளிக்க முடியவில்லை. எனவே கோயிலுக்குச் செல்ல முடியவில்லை. மூன்று நாட்களில் நோய் குறைந்தது. குளித்து விட்டுக் கோயிலுக்குப் போனார்.

கோயிலில் ஒரு பெண்ணைக் கட்டி வைத்திருந்தனர் கோயில் தலைவர் அங்கு வந்தார் அவளைப் பார்த்து, நேற்று ஏன் கோயில் வேலைக்கு வரவில்லை? என்று கேட்டு அடிக்கத் தொடங் கினார். இதைப் பார்த்த அரதத்தர் விம்மியழத் தொடங்கினார். அங்கிருந்த எல்லோரும் இதனால் திடுக்கிட்டனர். இப்பெண்ணை அடிப்பதற்கு இவர் ஏன் அழுகிறார்? என்று வியந்தனர். அரதத்தரிடம் ஒருவர் பணிவுடன் காரணம் கேட்டார்.

அரதத்தர், 'ஐயா! ஒருநாள் பணிக்கு வராததற்கு இந்தப் பெண்ணை அடிக்கின்றாரே ! நான் மூன்று நாட்களாக வரவில்லையே! என்னையும் அடித்துத் திருத்த ஆளில்லையே ! என்று அழுகிறேன்!' என்றார். நோயுற்றபொழுது கோயிலுக்குச் செல்லாமலிருப்பதில் தவறில்லை. ஆயினும் அரதத்தரின் சிவபக்தி அதையும் குறையாகவே எண்ணியது. அரதத்தரின் பெருமையை அங்கிருந்தோர் உணர்ந்தனர். திருக்கோயில் வழிபாட்டின் மேன்மையை அறிந்து வியந்தனர்.

அரதத்தர் பெரிய ஞானி. அவர் மூன்று நாட்கள்தான் திருக் கோயில் செல்லவில்லை. அதற்குத் தக்க காரணமும் இருந்தது. ஆனாலும் அழுதார். ஆனால் நாம் அப்படி இருக்கிறோமா? இனியாவது திருக்கோயில் வழிபாட்டைக் கடமையாகக் கொள்வோம். உயர்வடைவோம்.

'ஆலயம் தொழுவது சாலவும் நன்று'

## திருஞான சம்பந்தர் தேவாரம்

### முதல் திருமுறை

முந்தி நின்ற வினைகள் அவைபோகச்
சிந்தி நெஞ்சே சிவனார் திருப்புன்கூர்
அந்தம் இல்லா அடிகள் அவர்போலும்
கந்தம்மல்கு கமழ்புன் சடையாரே.

நறுமணம் மிக்க சடையை உடையவர் சிவபெருமான். அவர் என்றும் அழிவில்லாது இருப்பவர். திருப்புன்கூரில் வீற்றிருப்பவர். நம்பாவங்கள் தீர அவரை எப்பொழுதும் நாம் வணங்கிவர வேண்டும்.

### இரண்டாம் திருமுறை

மந்திரம் ஆவதுநீறு வானவர் மேலதுநீறு
சுந்தரம் ஆவதுநீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரம் ஆவதுநீறு சமயத்தில் உள்ளதுநீறு
செந்துவர் உமைபங்கன் திருஆலவாயான் திருநீறே.

பவளம் போன்ற வாயினை உடையவர் உமையம்மை. அவரைத் தனது உடம்பில் பாதியாய் வைத்திருப்பவர் சிவபெருமான். அவர் மதுரையில் கோயில் கொண்டுள்ளார். அவரது திருநீறு நம்மைக் காக்கும். தேவர்கள் அதை எப்போதும் அணிகின்றனர். அது அழகைத் தருகிறது. திருநீறு எல்லோராலும் போற்றப்படுகிறது. அது சமய நூல்களில் புகழப்படுகிறது.

### மூன்றாம் திருமுறை

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக்கு உய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது
நாதன் நாமம் நமச்சிவாயவே.

சிவபெருமானுக்குரிய மிகச்சிறந்த மந்திரம் நமச்சிவாய என்பது. நான்கு வேதங்களைவிட அது உயர்ந்தது. அதை அன்புடன் ஓதுகின்றவர்களை, அது நல்வழியில் செலுத்தும்.

# திருநாவுக்கரசர் தேவாரம்

## நான்காம் திருமுறை

பெரும்புலர் காலைமூழ்கிப் பித்தற்குப் பத்தராகி
அரும்பொடு மலர்கள் கொண்டு ஆங்கு ஆர்வத்தைஉள்ளே வைத்து
விரும்பி நல்விளக்குத் தூபம் விதியினால் இடவல்லார்க்குக்
கரும்பினில் கட்டிபோல்வார் கடவூர் வீரட்டனாரே.

அதிகாலையில் எழுந்து நீரில் குளிக்க வேண்டும். பிறகு நல்ல மலர்களைக் கொய்து வரவேண்டும். அவற்றைச் சிவபெருமானுடைய திருக்கோயிலுக்கு அன்புடன் அளிக்க வேண்டும். அத்தோடு முறைப்படி திருக்கோயிலில் விளக்கு ஏற்ற வேண்டும். அங்கு நறுமணப்புகை இடவேண்டும், இவற்றைச் செய்யும் அடியார்களுக்குத் திருக்கடவூரில் வாழும் சிவபெருமான் வெல்லம் போல இனிப்பார்.

## ஐந்தாம் திருமுறை

நன்று நாள்தொறும் நம்வினை போயறும்
என்றும் இன்பந் தழைக்க இருக்கலாம்
சென்று நீர் திருவேட்களத்து உள்உறை
துன்று பொற்சடையானைத் தொழுமினே

பொன்போன்ற சடைகளை உடையவர் சிவபெருமான். அவர் திருவேட்களத்தில் குடிகொண்டுள்ளார். அந்தப் பெருமானை நாள்தோறும் வணங்குவது நல்லது. அதனால் நம் பாவங்கள் தீரும். என்றும் இன்பத்தோடு நாம் வாழலாம்.

## ஆறாம் திருமுறை

அருந்தவர்கள் தொழுதுஏத்தும் அப்பன் தன்னை
அமரர்கள் தம்பெருமானை அரனை மூவா
மருந்து அமரர்க்கு அருள்புரிந்த மைந்தன் தன்னை
மறிகடலும் குலவரையும் மண்ணும், விண்ணும்
திருந்து ஒளிய தாரகையும் திசைகள் எட்டும்
திரிசுடர்கள் ஓர் இரண்டும் பிறவும் ஆய
பெருந்தகையைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே!

தில்லையில் ஆடும் பெருந்தகையானை, சிவபெருமானை முனிவர்கள் போற்றுகின்றனர். அவர் தேவர்களுக்குத் தலைவர். அவர்களுக்குச் சாவா மருந்தான அமுதினை அளித்தவர். அவர் கடலும், மலையும், மண்ணும், விண்ணும், கதிரவனும், சந்திரனும், விண்மீன்களும், எட்டுத் திசைகளும், பிறவும் ஆனவர். அப்பெருமானை நாம் போற்றா நாட்கள் எல்லாம் பயனற்ற நாட்களே. எனவே அவரை நாம் நாளும் வணங்க வேண்டும்.

## சுந்தரர் தேவாரம்

## ஏழாம் திருமுறை

1. பண்ணிடைத் தமிழ் ஒப்பாய் பழத்தினில் சுவை ஒப்பாய்
கண்ணிடை மணி ஒப்பாய் கடுஇருள் சுடர் ஒப்பாய்
மண்ணிடை அடியார்கள் மனத்துஇடர் வாராமே
விண்ணிடைக் குருகாவூர் வெள்ளடை நீஅன்றே.

திருக்குருகாவூரில் உறைபவர் சிவபெருமான். அவர் திருப் பெயர் வெள்ளடை என்பது. அவர் தமிழ் இசை போன்று இனியவர். பழத்தினில் சுவை போன்றவர். கண்ணின் மணி போன்றவர். இருளை ஓட்டும் ஒளியாக இருப்பவர். மண்ணுலகில் வாழும் அடியார்களின் துன்பங்களைக் களைபவர்.

2. பொன்னும் மெய்ப்பொருளும் தருவானைப்
போகமும் திருவும் புணர்ப்பானை
பின்னை என் பிழையைப் பொறுப்பானைப்
பிழைஎலாம் தவிரப் பணிப்பானை
இன்ன தன்மையன் என்று அறியொண்ணா
எம்மானை எளிவந்த பிரானை
அன்னம் வைகும் வயல் பழனத்து
அணி ஆரூரானை மறக்கலும் ஆமே !

வயல்வளம் மிக்கது திருவாரூர். அங்கு சிவபெருமான் உறைகிறார். அவர் எனக்குப் பொன்னையும், அறிவையும் அளித்தவர். இன்பத்தையும் செல்வத்தையும் வழங்கியவர். எனது தவறுகளை மன்னித்து அருளியவர். நான் தவறி நடக்காதபடி செய்தவர். இன்ன இயல்புடையவர் என்று சொல்ல முடியாதவர். அப்பெருமானை நான் மறக்க முடியுமா?

## மாணிக்கவாசகர் பாடிய திருவாசகம்

### எட்டாந்திருமுறை

1. வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான்எனது என்று அவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே !

இறைவா! நீ வானமாகவும், மண்ணுலகமாகவும், காற்றாகவும் ஒளியாகவும், உடலாகவும், உயிராகவும், எல்லோரையும் ஆட்டுவிக்கின்ற தலைவனாகவும் உள்ளாய்! உன்னை நான் எப்படி வாழ்த்துவேன்?

2. குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
ஈறிலாக் கொழுஞ் சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே
சிற்றபெறா நீர்போல் சிந்தைவாய்ப் பாயும்
திருப்பெருந்துறை உறை சிவனே
இறைவனே நீஎன் உடல்இடங் கொண்டாய்
இனிஉன்னை என் இரக்கேனே!

நிறைந்த அமுதமே ! முடிவற்ற பெருஞ்சுடரே! வேதங்களின் பொருளே ! என் மனத்துள் வீற்றிருக்கும் அரசே ! வெள்ளம் போல் என் சிந்தையில் பாய்பவனே ! திருப்பெருந்துறையில் கோயில் கொண்ட சிவனே ! இறைவா நீ என் உடலையே கோயிலாகக் கொண்டு விளங்குகிறாய். இனி உன்னிடம் நான் எதைக் கேட்பேன்?

### திருப்பல்லாண்டு (சேந்தனார்)

மன்னுகதில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சகர்போ யகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனியெல் லாம்விளங்க
அன்னநடை மடவா ளுமைகோ னடியோமுக்
கருள் புரிந்து
பின்னைப்பிற வியறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே,

'திருத்தில்லைப்பதி என்றும் நிலைபெற்று நிற்க நம் பக்தர்கள் புகழ் மென்மேலும் பெருகுக. வஞ்சகர்கள் அகலட்டும். பொன் வேயப்பெற்ற பொன்னம்பலத்துள்ளே எங்கும் நிறைந்துள்ள சிவபெருமான் இருந்து, உலகமெல்லாம் ஞானஒளி விளங்கும்படி அன்னநடை பயிலும் சிவகாமி அம்மை நாயகனாக இருந்து. தன் அடியார்களுக்குத் திருவருள் புரிந்து இனி வரக்கூடிய பிறவியை ஒழிக்க நெறி தந்தவர். அவ்வாறு பிறவி ஒழித்து, முக்தி நெறி அளித்து அருளிய அருட்பித்தனாகிய அம்பலவாணப் பெருமானுக்குப் பல்லாண்டு கூறுவோமாக.

## திருமந்திரம் (திருமூலர்)

யாவர்க்குமாம் இறைவற்கு ஒரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கு ஒரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே!

இறைவனுக்கு இடும் ஒரு பச்சிலை எல்லா உயிர்களுக்கும் நன்மை செய்கின்றது. அதுபோல மாட்டிற்கு அளிக்கும் ஒரு பிடி புல் எல்லோருக்கும் நலம் அளிக்கின்றது. நாம் உண்ணும்போது ஒரு கைப்பிடியாவது பிறர்க்குப் படைக்க வேண்டும். அதுவும் உலகிற்கு நன்மை சேர்க்கின்றது. எல்லாவற்றிற்கும் மேலாக நாம் பேசும் இன்சொல் எல்லோருக்கும் இன்பம் அளிக்கின்றது.

## அற்புதத் திருவந்தாதி (காரைக்காலம்மையார்)

பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன் –நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
எஞ்ஞான்று தீர்ப்ப திடர்

கருமணி போன்ற கழுத்தையுடைய சிவபெருமானே ? அடியவனாகிய நான் பிறந்து பேசத் தொடங்கிய நாள்முதல் உன்னுடைய திருவடிகளிலேயே அன்பு வைத்து, இப்பொழுது உன்னுடைய திருவடிகளையே அடைந்துள்ளேன். வானோர்களுக்குத் தலைவா ! என்னுடைய பிறவியாகிய துன்பத்தை எப்பொழுது தீர்ப்பாய் ! சொல்வாயாக,

## பெரியபுராணம் (சேக்கிழார்)

நன்மை பெருகு அருள்நெறியே வந்துஅணைந்து நல்லூரில்
மன்னுதிருத் தொண்டனார் வணங்கி மகிழ்ந்து
எழும்பொழுதில்
உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம் என்றவர்தம்
சென்னிமிசைப் பாதமலர் சூட்டினான் சிவபெருமான்

இத்திருப்பாடல் திருநாவுக்கரசர் வரலாற்றில் இடம் பெற்றது. திருநாவுக்கரசர் வேண்டிக் கொண்டபடி சிவபெருமான் திருநல்லூரில் அவர் தலைமீது தன்னுடைய திருவடி மலர்களைச் சூட்டியருளினார்,

## திருமால் நெறி

திருமாலை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயம் வைணவம். திருமால் எழுந்தருளியுள்ள கோயில்கள் நூற்றியெட்டு. இவற்றுள் மிகவும் சிறப்புப் பெற்றது திருவரங்கம். திருமாலை வழிபட்டுப் பேறு பெற்றோர் ஆழ்வார்கள் எனப்படுவார்கள். ஆழ்வார்கள் பன்னிருவர். இவர்கள் திருமால் மீது பாடிய பாடல்களே "நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்" எனப்படும்.

## ஆழ்வார்களின் பெயர்கள்

பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், மதுரகவியாழ்வார், குலசேகர ஆழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், தொண்டரடிப் பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார்.

## நம்மாழ்வார்

இவர் பாண்டிய நாட்டிலே பிறந்தவர் ஆழ்வார்களில் மிகவும் சிறப்புப் பெற்றவர். நம்மாழ்வார் இளம் வயதிலேயே இறைவனின் திருவருள் கைவரப் பெற்றவர். சமயப் பொதுமை உடையவர்.

திருக்குருகூர் கோயிலில் உள்ள புளியமரத்தடியின் கீழ் இருந்து பதினாறு ஆண்டுகள் தவமியற்றியவர். கிறிஸ்துவர், இஸ்லாமியர், பௌத்தர் போன்றோர் இவரை 'நம் சமயத்தவர்' என்றே கூறுவர்.

ஒன்றெனப் பலவென அறிவரும் வடிவினுள் நின்ற
நன்றெழில் நாரணன் நான்முகன் அரனென்று மிவரை
ஒன்றநும் மனத்துவைத் துள்ளிநும் மிருபசை யறுத்து
நன்றென நலஞ்செய்வ தவனிடை நம்முடைநாளே''

இப்பாடல் மூன்று மூர்த்திகளையும் ஒரே தன்மையாக நினைந்து வழிபடல் வேண்டும் எனக் கூறுகின்றது.

## சூடிக்கொடுத்த சுடர்க்கொடி

பெரியாழ்வாரின் வளர்ப்பு மகளே ''ஆண்டாள் நாச்சியார்''. இவர் தன்னை நாயகியாகவும், திருமாலை நாயகனாகவும் நினைந்து அவனையே தான் மணஞ்செய்து கொள்ளக் கருதி—இடைவிடாது அவனையே நினைந்து — சிந்தித்து, துதித்து—வாழ்ந்தவர். திருமால் மீது கொண்ட அன்பின் ஆழம் காரணமாக ஒவ்வொரு நாளும் ''தான் சூடிய மாலையினையே திருமாலுக்குச் சூடக் கொடுத்தார்''. இறைவனும் அதனையே மகிழ்ந்து ஏற்றுக் கொண்டார். அன்றுமுதல் இவர் 'சூடிக் கொடுத்த சுடர்க்கொடி' எனப்பட்டார். மகளிரின் இறைபணிக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர் ஆண்டாள் நாச்சியார். இவர் பாடிய திருப்பாவைப் பாடல்களை மார்கழி மாதத்தில் மகளிர் பாடி மகிழ்ந்து வழிபடுவர். இவர் பாடிய பாவைப் பாடல்களைப் பாடி நோன்பிருந்தால் விரும்பிய வண்ணம் கணவன் கிடைப்பான் என்பது நம்பிக்கை. இப்பாவைப் பாடல்களைச் ''சங்கத் தமிழ் மாலை'' என்று கூறுவர்.

## திருப்பாவை

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள்நம் பாவைக்குச் சாற்றிநீ ராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்து
ஓங்கு பெருஞ்செந்நெ லூடு கயலுகள
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய்

—ஆண்டாள்

## திருப்பல்லாண்டு

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்து ஆண்டு
பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா ! உன்
சேவடி செவ்விதிருக் காப்பு !
அடியோ மோடும்நின் னோடும் பிரிவின்றி
ஆயிரம் பல்லாண்டு
வடிவாய் நின்வல மார்பினில் வாழ்கின்ற
மங்கையும் பல்லாண்டு
வடிவார் சோதிவலத்துறை யும்சுட
ராழியும் பல்லாண்டு
படைபோர் புக்கு முழங்கும்அப் பாஞ்ச
சன்னியமும் பல்லாண்டே

— பெரியாழ்வார்

## தவத்திரு சாந்தலிங்க அடிகளார்

தொண்டை நாட்டில் 300 ஆண்டுகட்கு முன்பு பிறந்தவர். பேரூரில் திருமடம் அமைத்து வாழ்ந்து வந்தவர். சிறந்த தவசி. இவரது திருமடத்தில் பல அடியார்கள் இருந்தனர், அடியார்கள் சமயப் பணியும், அடியார் பணியும் செய்து வந்தனர். சாந்தலிங்க அடிகளார் சமய பேதங்கள் அற்றவர். தவவலிமை உடையவர். கொலைமறுத்தல், வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோதவுந்தியார் என்ற நான்கு நூல்களை அருளியுள்ளார்.

சாந்தலிங்கர் செய்த கொலைமறுத்தல், மிகச்சிறிய நூல் புலால் உண்பதால் வரும் தீமைகளையும், அதனைக் கைவிடுவதால் வரும் நன்மைகளையும் பல சமய வாதிகளின் கருத்துப் பாங்கினுக்கு ஏற்ப வினா - விடை அமைப்பில் இந்நூல் கூறியுள்ளது. அக்கருத்தை இம்மடம் மக்களிடையே பரவச் செய்து கொங்குநாட்டு மக்களிடையே "புலால் உணவு தீமை தருவது, அதை உண்ணுவது பாவம்" என்ற உணர்வை ஏற்படுத்தி உள்ளது. வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம் இரண்டும் பக்தியின் சிறப்பினைக் கூறுகிறது. அவிரோதவுந்தியார் சமரசத்தைக் கூறுகிறது இந்நூல்கள் கொல்லாமை, புலால் உண்ணாமையின் சிறப்புகள், பக்தியின் சிறப்பு, சாதி சமய வேறுபாடுகள் கூடாது போன்ற கருத்துக்களைக் கொண்டவை. இவர் தோற்றுவித்த மடம் இன்று "சாந்தலிங்கர் திருமடம்" என்ற பெயரில் புகழ் பெற்று விளங்குகிறது. இங்கு சமய வகுப்புகள் நடைபெறு

கின்றன. ஆதீனத்தோடு தொடர்புடைய கல்வி நிறுவனத்தில் பயிலும் சிறார்களுக்கு வழிபாட்டு நெறிமுறைகள் கற்றுத் தரப்படுகிறது. ஆதீனத்தில் நாள் வழிபாடு, சிறப்பு வழிபாடு நடைபெறுகிறது. இவ்வழிபாட்டு நெறிமுறைகள் தூய தமிழ்நெறியில் கற்றுத் தரப்படுகிறது

இம்மடத்துத் தலைவர் கோயில்களைப் புதுப்பித்தல், திருக் குடமுழுக்கு நீராட்டு விழாச் செய்வதில் அதிக ஈடுபாடு கொண்டவர். அவ்வப்போது திருமடம் சார்பாக நலிவுள்ள கோயில்களைப் புதுப்பிக்கும் பணியும் செய்கிறது. சமய நூல்களையும், பக்திப் பாடல்களையும், கையடக்கப் பிரதிகளாக அவ்வப்போது வெளியிட்டு மக்களுக்கு உதவி வருகிறது.

சாந்தலிங்கர் 'குருலிங்க சங்கம' வழிபாட்டைப் போற்றியவர். (குரு - இறைவன் - அடியார்) குரு, இறைவன், அடியார் மூவரும் வழிபாட்டுக்கு உரியவர் என்பது பொருள். சாந்தலிங்க அடிகளார் அருளிய நான்கு நூல்களையும் ஒருமுறையேனும் பயில்தல் வேண்டும்.

போற்றி நீறணிந்து உருத்திர சாதனம்
    பூண்டிடு ஐந்து எழுத்து உள்ளே
சாற்று நீகுருஆதி மூவுருவையும்
    தாழ்ந்து இறைஞ்சி இவை செய்தால்
மாற்றலாம் பிறப்பு சிறப்பினை நெஞ்சமே
    மன்றுள் ஆடியதாளும்
தோற்றும் உள்ளொளிக்கு உள்ளொளி ஆயதைத்
    தொழுது வாழ்தலும் ஆமே.

—சாந்தலிங்க அடிகளார்

# மலர்வழிபாடு (அருச்சனை)

## விநாயகப் பெருமான்

கணபதிக் களிறே போற்றி
ஐங்கரத்து அப்பா போற்றி
சிவம்மகிழ் சிறுவா போற்றி
செந்நெறி காட்டுவாய் போற்றி
திருமுறை உதவினாய் போற்றி
திங்களணி திருவே போற்றி
அறுகுத்தார் அரசே போற்றி
அல்லல் தீர்க்கும் அமுதே போற்றி

## முருகப் பெருமான்

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற ஈராறு தோள்போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றிபோற்றி

(கந்த புராணம்)

பன்னிரு கரத்தாய் போற்றி பசும்பொன்மா மயிலாய் போற்றி
முன்னிய கருணை ஆறு முகப் பரம்பொருளே போற்றி
கன்னியர் இருவர் நீங்காக் கருணை வாரிதியே போற்றி
என்னிரு கண்ணே கண்ணுள் இருக்குமா மணியே போற்றி

(திருச்செந்தூர்ப் புராணம்)

## அம்பிகை

சுரும்புமுரல் கடிமலர்ப் பூங்குழல் போற்றி
உத்தரியத் தொடித்தோள் போற்றி
கரும்புருவச் சிலைபோற்றி கவுணியர்க்குப்
பால்சுரந்த கலசம் போற்றி
இரும்பு மனங் குழைத்தென்னை எடுத்தாண்ட
அங்கயற்கண் எம்பிராட்டி
அரும்புமிள நகைபோற்றி ஆரணநூபுரஞ்
சிலம்பும் அடிகள் போற்றி

(திருவிளையாடற் புராணம்)

## சிவபெருமான்

ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடிபோற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தேநின்ற நிமலனடி போற்றி
மாயப்பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறை நந்தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளு மலை போற்றி

(திருவாசகம்)

## திருமால்

அன்றிவ் வுலக மளந்தாய் அடிபோற்றி
சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய் திறல்போற்றி
பொன்றச் சகடமுதைத்தாய் கழல்போற்றி
கன்று குணிலா வெறிந்தாய் கழல்போற்றி
குன்று குடையா வெடுத்தாய் குணம்போற்றி
வென்று பகைகெடுக்கும் நின்கையில் வேல்போற்றி
என்றென்றுன் சேவகமே யேத்திப் பறை கொள்வான்
இன்றுயாம் வந்தோம் இரங்கேலோர் எம்பாவாய்

(திருப்பாவை)

## கதிரவன் (சூரியன்)

விண்மணியாய் நின்ற மெய்ப்பொருளே போற்றி
உலகிருளை நீக்கவொளிர் கின்ற பொருளே போற்றி
நலமருளிக் காக்கும் நாதா போற்றி
மெய்யாக எவ்வுயிர்க்கும் விளங்கும் பொருள் போற்றி
சுடராய் விளங்கும் செம்பொருள் போற்றி
தீதகற்றிக் காக்கும் திருவே போற்றி
அன்னையென அன்பால் அருள்வாய் போற்றி
விருப்புற்ற ஆன்மாக்கள் வேண்டுவன அளிப்பாய் போற்றி
அருட்சக்தியாய் வந்து அணைப்பாய் போற்றி
வாடும் பயிர்க்குதவு மாரியென வந்தருள்வாய் போற்றி
நாடும் பொருட்கெல்லாம் நாயகமே போற்றி
ஈராறு பானுவாய் இலங்கும் இறைவா போற்றி

# புதுமனை புகுவிழா

புதுமனை புகுவிழாவிற்கு முந்தையநாள் மாலை நிலத்தேவர் வழிபாடு செய்ய வேண்டும்,

## நிலத்தேவர் வழிபாடு (வாஸ்து சாந்தி)

வீட்டிற்கு முன்பகுதியில் மெழுகிக் கோலமிடவும். தலை வாழை இலையை நுனிவடக்கிருக்கும்படி போட்டு அதன்மீது பச்சரிசியைப் பரப்பி அதன்மேல் ஓம் என்று எழுதவும் நூல் சுற்றிய ஐந்து மண்டலங்களை அதன்மீது நீர் நிறைத்துவைக்கவும். அதன் மேல் தருப்பை, மாவிலை, தேங்காய் முதலியவற்றை வைத்து மலரிடவும், கலசங்களுக்கு முன்னால் மஞ்சள் பிள்ளையார் பிடித்து வைத்து மலரிடவும். தேங்காய், பழம் வெற்றிலைபாக்கு, நனைத்த அவலை (சர்க்கரை கூட்டியது) போன்றவற்றை வைக்கவும். அருகில் திருவிளக்கேற்றிக் கீழ்வரும் பாடலைக்கூறிக் கலசங்களின் மேல் மலர்தூவி வணங்கவும்.

ஒன்றாகி உலகனைத்தும் ஆனார்தாமே
 ஊழிதோறும் உயர்ந்தார்தாமே
நின்றாகி எங்கும் நிமிர்ந்தார்தாமே
 நீர்வளி தீ ஆகாசம் ஆனார்தாமே
கொன்றாடும் கூற்றை உதைத்தார் தாமே
 கோலப்பழனை உடையார்தாமே
சென்றாடு தீர்த்தங்கள் ஆனார்தாமே
 திருவாலங் காடுறையும் செல்வர்தாமே

## பிள்ளையார் வழிபாடு

பிள்ளையார் வைத்து மலர்தூவிக் கீழ்வரும் பாடலை ஓதவும்.

'ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்து அடிபோற்று கின்றேனே''

பழம் அல்லது சிறிது அவலை அமுதாக ஊட்டி. கருப்பூர வொளி காட்டி வணங்கவும்.

ஒரு மண் கலசத்தில் ஆன் ஐந்து கலந்து வைத்துக் கொள்ளவும் (பசுவின் பால். தயிர், நெய், சிறுநீர், சாணம்). கலசங்களுக்கு முன்புறம் சதுரமாகச் செங்கற்களை அடுக்கி ஒரு வேள்விக் குண்டம் அமைத்துக் கொள்ளவும். உள்ளே மணலைப் பரப்பி வலப்புறம் மணலைப் பலகையிட்டு அமர்ந்து வேள்வி செய்யவேண்டும். வேள்விக் குண்டலத்திற்கு இடப்புறம் ஒரு பூசணிக்காயை வைத்து மலரிடவும். முன்புறம் வைக்கோலால் செய்த ஒரு மனித உருவத்தைக் கிடத்தி அதற்குத் திருநீறு முதலிய வற்றை இட்டு மலர்ச்சரம் அணிவிக்கவும்.

வேள்வியில் ஆல், அரசு, அத்தி, மா, வன்னி முதலிய குச்சிகளை இடலாம். வேள்விக் குண்டலத்திற்குத் திருநீறு முதலியவற்றை எட்டுத் திசைகளிலும் இட்டு மலரிடவும். நான்கு புறமும் தருப்பையிடவும். அடுத்துக் கீழ்வரும் பாடலைச் சொல்லிக் கருப்பூரம் ஏற்றி எரிவளர்க்கவும்.

''மாறி நின்றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலன்ஐந்தின் வழிஅடைத்து அமுதே
ஊறி நின்றென்னுள் எழுபரஞ் சோதி
உள்ளவா காண வந்தருளாய்
தேறலின் தெளிவே சிவபெருமானே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த
இன்பமே என்னுடை அன்பே''

சிவபுராணத்தை ஓதியபடி மாவிலையால் நெய்வார்க்கவும். இறுதியில் குண்டலத்தின் எட்டுப் பக்கங்களிலும் உள்ளேயும் சிறிது அவலை வைக்கவும். நறும்புகை, விளக்கொளி முதலியவற் றைக் காட்டி மலர்தூவி வணங்கவும்.

எரியில் விளைந்த அருட்சத்தியைக் கலசங்களுக்கு (தருப்பை யையும், மலர்களையும் எடுத்து நீர்வார்த்துப் பாவனையாக) எழுந்தருளும்படி வேண்டிக் கொள்ளவும். பூசணிக்காயை எட்டுத் துண்டுகளாக்கிக் குங்குமம் தடவி ஒரு தட்டில் வைத்து நடுவில் வைக்கப்பட்ட கலசத்தில் உள்ள நீரோடு மற்ற கலசங்களில் உள்ள நீரைச் சிறிது சேர்க்கவும். அதை ஒருவரும், ஆன் ஐந்தை ஒருவரும், பூசணித் துண்டுகளை ஒருவரும் எடுத்துக்கொள்ளவும். வைக்கோல் பொம்மையை வேள்வியில் உள்ள நெருப்பு மூலம் பற்றவைத்து வீட்டைச்சுற்றி வலமாக இழுத்துவரவேண்டும் எட்டுத் திக்குகளிலும் பூசணித் துண்டுகளை இட்டுக் கலச

நீரையும் ஆன் ஐந்தையும் தெளிக்கவும். வீட்டிற்கு முன்புறம் வடகிழக்கே பொம்மையை எரித்துவிடவும். சகல நீரையும் ஆன் ஐந்தையும் வீடு முழுவதும் தெளிக்கவும்.

## சிவசக்தி வேள்வி

வீட்டினுள் முன்போலவே இரண்டு வாழையிலைகளையிட்டு பச்சரிசி பரப்பவும். அதன்மேல் ஐங்கோணம் வைத்து நடுவில் ஓம் என்றும் மற்ற கட்டங்களில் நமசிவாய என்ற எழுத்துக்களையும் எழுதவும். அதன்மேல். இரண்டு புதிய குடங்களை அல்லது செம்புகளை நூல் சுற்றி வைத்து நீர்வார்க்கவும், முன் போலவே தருப்பை, மாவிலை, தேங்காய் வைத்து மாலை அணிவிக்கவும். திருநீறு, சந்தனம், குங்குமம், மஞ்சளரிசி முதலியவற்றையும் கலசங்களுக்கு அணிவித்துச் சிவகலசத்திற்கு வெள்ளை நிறத் துண்டையும், சத்தி கலசத்திற்குச் சிவப்பு நிறத் துண்டையும் சாத்தவும். சத்தி கலசம் சிவகலசத்திற்கு இடதுபுறம் இருக்க வேண்டும்.

முன்புறம் வேள்விக்குண்டம் அமைத்து அதற்குத் திருநீறு முதலியவற்றை எட்டுத் திசைகளிலும் இட்டு மலரிடவும். வேள்விக் குச்சிகளை உள்ளே இட்டு வைக்கவும். முதலில் பிள்ளையார் வழிபாட்டைச் செய்யவும்.

சிவ சக்திக் கலசங்களில் எல்லாத் தீர்த்தங்களும் இருப்பதாக எண்ணி 'ஒன்றாகி' எனத் தொடங்கும் பாடலை ஓதி மலர் தூவவும். இறைவனையும், இறைவியையும் அதில் எழுந்தருளும்படி வேண்டிக்கொள்ளவும். 'வேற்றாகி' எனத் தொடங்கும் கயிலைப் பதிகத்தை முழுமையாகக் கூறி மலரிட்டுப் போற்றி வழிபாடு (அருச்சனை) செய்யவும்.

வேள்விக் குண்டத்தின் நான்குபுறமும் தருப்பை வைத்து கருப்பூரம் ஏற்றி எரிவளர்க்கவும். அப்போது 'மாறி நின்றென்னை' என்ற பாடலை ஓதி மலர் தூவவும். முன்பு போலவே சிவபுராணம் கூறியபடி மாவிலையால் நெய் வார்த்து வேள்வி செய்யவும். வேள்வி செய்யும் போது புதுமனைக்கு உரியவர்களை அருகில் இருத்திக் கொள்ளவும். அவர்களே ஒவ்வொரு குச்சியாக எடுத்து நெய்யில் தொட்டுக் குழியில் இடுதல் நலம்பயக்கும். வேள்வியின் நிறைவில் தேங்காய், பழம், வெற்றிலை பாக்கு, துணி, பூ முதலியவற்றை ஒரு மூட்டையாகக் கட்டி நெய் வார்த்து இடவும். பின்னர் எட்டுத் திசை

களிலும் கண்டத்திலும் சிறிது அவலை அமுதாக வைத்து நறும் புகை, விளக்கொளி, கருப்பூரம் முதலியவற்றைக் காட்டவும். தருப்பையையும் மலர்களையும் நீரில் நனைத்து இருகைகளிலும் எடுத்துக்கொண்டு நெருப்பில் விளைந்த அருட்சத்தியை குடங் களுக்குப் (பாவனையாக) எழுந்தருளச் செய்யவும். (கலசங்களின் மேல் தூவவும்) குண்டத்தைச் சுற்றிலும் உள்ள தருப்பையை எடுத்துச் சாம்பலாக்கி நெய்யில் குழைத்துக் கலசங்களுக்கு இடவும். பிறகு எல்லோரும் அதை அணியலாம்.

## திருமகள் வழிபாடு

ஒரு தட்டில் காசுகளை வைத்து அதற்குத் திருநீறு, சந்தனம், குங்குமம், மஞ்சளரிசி மலர்கள், வில்வம் போன்ற வற்றை இடவும். பின்வரும் பாடலைச் சொல்லி மலர்தூவி வழிபடவும்.

"திருவே என்செல்வமே தேனே வானோர் செழுஞ்சுடரே
செழுஞ்சுடர் நற்சோதிமிக்க
உருவே என்னுறவே என் ஊனே ஊனின் உள்ளமே
உள்ளத்தின் உள்ளே நின்ற
கருவே யென் கற்பகமே கண்ணே கண்ணிற் கருமணியே
மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினை நோய் அடையாவண்ணம் ஆவடு
தண்துறையுறையும் அமரர் ஏறே"

பின்னர் நறும்புகை விளக்கொளி காட்டி அமுதூட்டவும். கருப்பூரவொளி காட்டி வணங்கவும். அனைவருக்கும் திருநீறு வழங்கவும்.

ஒரு பூசணிக்காயிற்குச் சிவப்பு கருப்புப் புள்ளிகள் இட்டு வீட்டிற்கு முன்புறம் வடகிழக்கே உரியில் வைத்துக் கட்டவும். அல்லது தென்மேற்கிலும் கட்டலாம். அதற்கு சிறிது மலர்ச்சரம் இட்டுக் கற்பூரம் காட்டவும்.

சிவசக்தி கலசங்களுக்குக் கருப்பூரம் காட்டி வணங்கிப் பின் தேங்காய்களை எடுத்து வைத்துவிட்டு, மாவிலையால் அந்நீரை புதுமனையின் எல்லாவிடங்களிலும் தெளிக்க வேண்டும். பிறகு அந்நீரை எல்லோருக்கும் வழங்கலாம். வேள்விக் குழியிலிருந்து சிறிது நெருப்பை எடுத்துப் புதிய அடுப்பில் சேர்த்துப் பாலைக் காய்ச்சி அனைவருக்கும் வழங்கவும்.

# தமிழ்த் திருமணச் செயல்முறை விளக்கம்

மணப்பந்தரின் கீழ் சிவசக்தி கலசங்கள் மணமக்களுக்கு முன்னால் வைக்கவும். வேள்விக் குண்டம் ஒன்றை அமைத்துக் கொள்ளவும். வலதுபுறம் திருமணம் செய்து வைப்பவர் அமர்ந்து செயல்முறைகளைச் செய்தல் வேண்டும்.

## பிள்ளையார் வழிபாடு

மணமக்களை அமரச்செய்து பிள்ளையார் வழிபாட்டைத் தொடங்க வேண்டும். கலசங்களுக்கு முன் புறமுள்ள பிள்ளையாரை மணமக்கள் கைகளில் அறுகு மலர் முதலிய வற்றைக் கொடுத்துப் பின்வரும் பாடலைச் சொல்லித் தூவி வணங்கச் செய்ய வேண்டும்.

''திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானைக்
காதலால் கூப்புவர் தம்கை''

நறும்புகையும் விளக்கம் காட்டித் தேங்காய் பழம் முதலிய வற்றைப் படைத்து கருப்பூரவொளி காட்டி மலரிட்டு வணங்கும்படி செய்யவேண்டும்.

## காப்பணிவித்தல்

மணமகளின் கையில் தேங்காயைக் கொடுத்து மஞ்சள் தடவிய கயிற்றில் ஒரு மஞ்சள் கொம்பைக் காட்டி அதை மணமகனின் வலது கையில் கட்டவும். பிறகு மணமகளுக்கும் அதே போல இடது கையில் காப்புக் கட்டவும். இருவருக்கும் கீழ்வரும் பாடலைச் சொல்லித் திருநீறு அளிக்கவும்.

'மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கர் திருஆலவாயின் திருநீறே''

## சிவசக்தி கலச வழிபாடு

முறைப்படி சிவசத்தி கலசங்களில் இறைவனையும் இறைவியையும் எழுந்தருளச் செய்யவும். அப்பொழுது கீழ்வரும் பாடலைச் சொல்லவும்.

''வெள்ளி வெற்பின்மேல் மரகதக் கொடியுடன் விளங்கும்
தெள்ளுபேர்ஒளிப்பவள வெற்புஎன இடப்பாகம்
கொள்ளும் மாமலை யாளுடன் கூட வீற்றிருந்த
வள்ளலாரை முன் கண்டனர் வாக்கின் மன்னனார்''

மங்கல் நாணைச் சத்தி கலசத்தின் மேல் அணிவிக்கவும். வேற்றாசி எனத்தொடங்கும் திருக்கயிலைப் பதிகத்தை ஒதவும். அப்பொழுது மணமக்கள் கைகளில் வில்வம் மலர்கள் மஞ்சளரிசி போன்றவற்றைக் கொடுத்து அவற்றைக் கலசங்களுக்கு இடச் செய்து வழிபடச் செய்ய வேண்டும். அதே போலக் கீழ்வரும் பாடலைச் செ.ால்லி மலரிட்டு வழிபடச் செய்ய வேண்டும்.

சுரும்புமுரல் கடிமலர்ப் பூங்குழல் போற்றி
உத்தரியத் தொடித் தோள் போற்றி
கரும்புருவச் சிலை போற்றி கவுணியர்க்குப்
பால் சுரந்த கலசம் போற்றி
இரும்பு மனம் குழைத்து என்னை எடுத்தாண்ட
அங்கயற்கண் எம்பிராட்டி
அரும்பு மிளநகை போற்றி ஆரண நூபுரம்
சிலம்பும் அடிகள் போற்றி

கலசங்களுக்கு நறும்புகை விளக்கொளி முதலியவற்றைக் காட்டி அமுதூட்டி கருப்பூரவொளி காட்டவும். அடுத்து முன்பு சொல்லிய முறைப்படி எரிவளர்த்து, சிவபுராணம் ஓதி நெய் வார்த்து இறுதியில் நிறையமுது அளித்து (தேங்காய் பழம் வெற்றிலை பாக்கு, மலர்கள் தூவி முதலியவற்றை நெய்விட்டு வேள்விக் குண்டத்தில் இடுக) வேள்விக் குண்டத்தின் எட்டுத்திக்கு களிலும் உள்ளேயும் பழத்தை அமுதாக வைத்து நறும்புகை விடவும். முறைப்படி விளக்கொளியையும் கருப்பூரவொளியையும் காட்டி மலரிட்டு வணங்கவும். வேள்வியில் விளைந்த அருட் சக்தியைக் கலசங்களுக்கு முன்பு கூறிய முறைப்படி எழுந்தருளச் செய்யவும். வேள்விக்குண்டத்தைச் சுற்றி யிடப்பட்ட

தருப்பையைச் சுட்டு நெய்கலந்து கலசங்களுக்கும் மணமக்களுக்கும் பொட்டு வைக்கவும். எல்லோரும் தூவ மஞ்சளரிசி வழங்கவும்.

நல்லவேளையில் மணமகள் கையில் மங்கல நாணைக் கொடுத்து மணமகளை வலப்புறம் எதிரில் நிற்கச்செய்து கீழ்வரும் பாடலை ஓதியபடி மங்கலநாணை அணிவிக்கச் செய்யவும்.

''மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணினல் லஃதுறும் கழுமலவளநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை இருந்ததே''

மணமகனை மங்கல நாணிற்குத் திருநீறு சந்தனம் குங்குமம் மலர் முதலியவற்றை இடச் செய்யவும். மணமக்களை மூன்று முறை மணமாலைகளை மாற்றிக் கொள்ளும்படி பணிக்கவும். முதலில் மணமகள் அணிவித்தல் முறையாகும்.

மணமகனும் மணமகளும் பெற்றோர் கால்களில் நீர்வார்த்து சந்தனம் குங்குமம் வைத்து மலரிட்டுக் கீழ்வரும் பாடலைச் சொல்லி வணங்க வேண்டும்.

அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ
அன்புடைய மாமனும் மாமியும் நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ
ஒருகுலமும் சுற்றமும் ஓருரும் நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய் நீ
துணையாய் என் நெஞ்சம் துறப்பிப்பாய் நீ
இப்பொன் நீ இம்மணி நீ இம்முத்து நீ
இறைவன் நீ ஏறூர்ந்த செல்வன் நீயே

பெற்றோர் அப்பொழுது மணமக்கள் மீது மஞ்சளரிசி தூவி வாழ்த்த வேண்டும். பின்னர் மணமகன் மணமகளின் வலது கையைத் தனது வலது கையால் பற்றிக் கொண்டு மணப் பந்தரை மும்முறை வலம் வர வேண்டும். மணமக்கள் எல்லோரையும் பணிந்து ஆசிபெறவேண்டும். மணமக்கள் அடுத்துக் கதிரவனை வழிபட்டு விட்டு அருகிலுள்ள பிள்ளையார் திருக்கோயில் சென்று வழிபட்டு வருதல் வேண்டும்.

# புனிதநீர் தெளித்தல்

## (மகப்பேற்று மங்கலம்)

இவ்வகையான விழாக்களுக்குப் புதுமனை புகுதல் வரிசையில் உள்ள பிள்ளையார் வழிபாடு முதலியவற்றைச் செய்து அங்கு குறிப்பிட்டுள்ள வணக்கப் பாடல்களை ஓதியபின் கீழ்க்காணும் பாடல்களையும் ஓதி இறைவழிபாடு செய்யவும். பிறகு புனித நீரைக் குழந்தை மீதும் பெற்றோர் மீதும் தெளிக்கவும்.

''திலகவதியார் பிறந்து சிலமுறை யாண்டகன்றதற்பின்
அலகில் கலைத்துறை தழைப்ப அருந்தவத்தோர் நெறி வாழ
உலகில் வரும் இருள்நீக்கி ஒளிவிளங்கு கதிர்போல் பின்
மலரும் மருள்நீக்கியார் வந்தவதாரம் செய்தார்

—சேக்கிழார்

வங்கமலி கடற்காரைக் காலின்கண் வாழ் வணிகர்
தங்கள் குலத் தலைவனார் தனதத்தனார் தவத்தால்
அங்கவர்பால் திருமடந்தை அவதரித்தாள் எனவந்து
பொங்கிய பேரழகுமிகப் புனிதவதியார் பிறந்தார்.

—சேக்கிழார்

## அமுதூட்டுதல்

''எண்ணரில் சிவஞானத் தின்னமுதம் குழைத்தருளி
உண்ணடிசில் என ஊட்ட உமையம்மை எதிர்நோக்கும்
கண்மலர் நீர் துடைத்தருளிக் கையில் பொற்கிண்ணம் அளித்து
அண்ணலை அங்கழுகைதீர்த்து அங்கணனார் அருள்புரிந்தார்.

—சேக்கிழார்.

இப்பாடலைச் சொல்லி ஒளிவழிபாடு செய்து அமுதூட்டவும்.

## காதணி விழா

''செவிகாள் கேண்மின்களோ - சிவன் எம்மிறை செம்பவள
எரிபோல் மேனிப்பிரான் திறம் எப்போதும் செவிகாள்
கேண்மின்களோ''

—அப்பர்.

''தோலும் துகிலும் குழையும் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ் சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையும் உடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பி

—மாணிக்கவாசகர்.

''செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை —குறள்

இப்பாடல்களை ஓதி ஒளிவழிபாடு செய்தபின் காதணி அணிவிக்கவும்.

## எழுத்தறிவித்தல்

''நமச்சி வாயவே ஞானமும் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே'' —அப்பர்

''சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாம் உணர்ந்தார் அந்நிலைக்கு''
—சேக்கிழார்

இப் பாடல்களை ஓதி ஒளிவழிபாடு செய்து குழந்தையின் நாவில் திருவைந்தெழுத்தை எழுதிக் கற்றலைத் தொடங்கி வைக்கவும்.

## பெண்கள் சீர்மங்கலம் செய்தல்

''சீரும் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆளும் பெறாத அறிவு பெற்றேன்; பெற்றதார்
பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழற ஊறி உமைமணவாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே''
—சேந்தனார்

திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காக்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகும் ஆழத்துப் பிள்ளையைப் பேணுவாம்
—விருத்தாசல புராணம்

இப்பாடல்களை ஓதி ஒளிவழிபாடு செய்து சீர் மங்கலம் நடத்தலாம்.

# நீத்தார் கடன் செய்தல்

உயிர் உடலை விட்டுப் பிரியத் துடிக்கும் போது பொறி புலன்கள் கலங்குகின்றன. எனவே அப்பொழுது இறைவனை நினைத்தல் அரிது. ஆகையால் அவருக்கு நெருங்கியவர்கள் அருகில் அமர்ந்து திருவாசகத்தை வாய்விட்டு ஓதுவது சிறந்த செயலாகும். அதனால் அவ்வுயிர் சிவ சிந்தனையோடு உடலை விட்டுப் பிரிந்து நற்கதி அடையும்.

இறந்தவர்களைப் புதைப்பதும் உண்டு. எரித்து விடுவதும் உண்டு. சங்க காலத்திலேயே இவ்விருமுறைகளும் இருந்துள்ளன.

உடல் கிடத்தப்பட்டுள்ள இடத்திற்கு ஈசான திசையில் (வடக்கு) மெழுகி முறைப்படி வாழையிலை இட்டு பச்சரிசியைப் பரப்பி அதில் திருவைந்தெழுத்தை எழுதி இரண்டு நிறை கலசங்களை வைக்கவும். அருகில் சிறுமண் செப்பில் ஆனைந்தையும் வைக்கவும், முதலில் மஞ்சளில் பிள்ளையார் பிடித்து வைத்து நீத்தார் கடன் செய்பவரை முன்னிறுத்திக் கொண்டு வழிபாடு செய்ய வேண்டும். அப்பொழுது,

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

என்னும் திருமந்திரப் பாடலை ஓதவும்.

பிறகு நிறை கலசங்களில் சிவ சக்தியை எழுந்தருளச் செய்ய வேண்டும். அதற்கு இரண்டு கைகளிலும் மலர்களை எடுத்துக் கொண்டு

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
அறிவு அழிந்திட்டு ஐமேல்உந்தி
அலமந்த போதாக அஞ்சேலென் றருள்
செய்வான் அமரும் கோயில்
வலம் வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென் றஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரமேறி
முகில்பார்க்கும் திருவையாறே

என்னும் ஞான சம்பந்தர் தேவாரத்தை ஓதி நிறைகுடங்களின் மேல் தூவவும். பிறகு திருக்குடங்களுக்கு முறைப்படி நறும்புகை, விளக்கொளி முதலியவற்றைக் காட்டி அமுதூட்டிக் கருப்பூர ஒளிகாட்டி மலர் தூவவும்.

போற்றியோ நமச்சிவாய புயங்கனே மயங்குகின்றேன்
போற்றியோ நமச்சிவாய புகலிடம் பிறிதொன்றில்லை
போற்றியோ நமச்சிவாய புறம் எனைப் போக்கில் கண்டாய்
போற்றியோ நமச்சிவாய சயசய போற்றி போற்றி

என்னும் திருவாசகப் பாடலை ஓதி நிறை குடங்களின் மேல் மலரிடவும்.

ஐயினால் மிடறடைப்புண்டு ஆக்கைவிட்டு
ஆவியார் போவதுமே அகத்தார் கூடி
மையினாற் கண்ணெழுதி மாலைசூட்டி
மயானத்தி லிடுவதன் முன் மதியம் சூடும்
ஐயனார்க்காளாகி அன்புமிக்கு
அகங்குழைந்து மெய்யரும்பி அடிகள் பாதம்
கையினால் தொழுமுடியார் நெஞ்சினுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே.

—அப்பர் தேவாரம்

தந்தையார் தாயாருடன் பிறந்தார்
தாரமார் புத்திரரார் தாந்தாமாரே
வந்தவாறெங்கனே போமாறேதோ
மாயமாமிதற்கேதும் மகிழ வேண்டா
சிந்தையீர் உமக்கொன்று சொல்லக் கேண்மின்
திகழ்மதியும் வாளரவும் திளைக்கும் சென்னி
எந்தையார் திருநாமம் நமச்சிவாய
என்றெழுவார்க்கு இருவிசும்பில் இருக்கலாமே

—அப்பர் தேவாரம்

வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய் செய்தபறிதான்
தாழாதறஞ் செய்மின் தடங்கண்ணான் மலரோனும்
கீழ்மேலுற நின்றான் திருக்கேதாரமெனீரே

—சுந்தரர் தேவாரம்

முதலிய பாடல்களை ஓதவும்.

## திருப்பொற் சுண்ணம் இடித்தல்

அடுத்து ஒரு சிறு கிண்ணத்தில் திருமஞ்சனப் பொடியை இட்டு அதற்கு மலர்ச்சரம் சுற்றவும். ஒரு மாவிலைக் கொத்திற்கும் அதே போல் மலர் சுற்றி அதை உலக்கையாகப் பாவித்துத் திருவாசகத்தில் உள்ள திருப்பொற்சுண்ணப் பாடல்களை ஓதியபடி இடிக்கவும்.

முப்புரி நூலை வழிபாடு செய்து நிறை கலசங்களில் சுற்றிக் கட்டவும். அதன் மற்றொரு முனையை இறந்தவரின் வலது காதில் சுற்றவும். அதன் வழியாகச் சிவசக்தியை இறந்தவரின் உள்ளத்தில் எழுந்தருளும்படி வேண்டவும். அப்பொழுது திருவைந்தெழுத்தை ஓதியபடி தருப்பை அல்லது மாவிலைக் கொத்தினால் நிறைகுடங்களிலிருந்து இறந்தவர் காதுவரை ஐந்துமுறை நூலைத் தடவிக் கொண்டுவர வேண்டும். இறைவன் இறந்தவருள்ளத்தில் எழுந்தருளியதாகப் பாவித்து உடலைக் குளிப்பாட்டத் தொடங்கவும். அப்பொழுது 'தந்தையார் தாயார்' என்று தொடங்கும் அப்பர் தேவாரத்தைப் பாடவும்.

முதலில் தூய நீராலும் அடுத்து ஆனைந்தாலும் முழுக் காட்டவும். பிறகு திருப்பொற்சுண்ணத்தை நிறைகுடநீரில் கலந்து நீராட்டி உடலை வேறிடத்தில் கிடத்திப்புத்தாடை அணிவிக்கவும். திருநீறு, சந்தனம், குங்குமம், முதலியவற்றை இடவும். மாலை அணிவித்து நறும்புகை விளக்கொளி முதலியவற்றைக்காட்டி அமுதூட்டிக் கருப்பூரவொளி காட்டி மலர் தூவவும். இவற்றைச் செய்யும்போது சிவபுராணம் ஓத வேண்டும்.

## சமாதி செய்தல்

ஆழமாகக் குழிதோண்டி உடலைத் துணிப்பையில் வைத்து உப்பு, திருநீறு, வில்வம், கருப்பூரம் முதலியவற்றை மாறிமாறிப் போடவும். அதன்மீது முறைப்படி உடலை வைத்து அதன்மீது மேற்கண்ட பொருள்களை இடவும். பிறகு உரியவரைக் கொண்டு மண்ணை மூன்று முறை தள்ளச் செய்யவும். சமாதியை மூடிவிட்டுக் கருப்பூரம் ஏற்றி வழிபடவும். பிறகு நீரில் மூழ்கி விட்டு வீடு திரும்ப வேண்டும்.

# ஒளி வழிபாடு

உடலைச் சமாதி வைத்தால் பத்தாம் நாளும், எரித்தால் பதினாற்றாவது நாளும் ஒளி வழிபாடு செய்வது முறையாகும். அன்று வீடு முதலியவற்றைத் தூய்மையாக்கி மாவிலைத் தோரணம் கட்டவும். ஆனைந்தை வீடுமுழுவதும் தெளித்துத் தூய்மையாக்கவும்,

இறந்தவருக்கு நீத்தார் கடன் செய்பவரை அவர்தம் மனைவியுடன் தெற்கு நோக்கி மனைகளில் அமரச்செய்து, அவர்களைக் கொண்டு சடங்குகளைச் செய்விக்க வேண்டும். முதலில் மஞ்சளில் பிள்ளையார் பிடித்துவைத்து முன்பு சொன்ன முறைப்படி வழிபாடு செய்யவும்.

முறைப்படி இரு நிறை கலசங்களை வைத்து அதில் முன்பு சொன்ன முறைப்படி சிவசக்தியை எழுந்தருளச் செய்யவும். அதற்கு நறும்புகை விளக்கொளி காட்டி அமுதூட்டிக் கருப் பூரவொளி காட்டவும். அப்பொழுது நமச்சிவாய என்னும் பாடலை ஓதி மலர் தூவவும். நிறை குடங்களைச் சுற்றிலும் பதினாறு அகல் விளக்குகளை ஏற்றி வைக்கவும். பத்தாவது நாளில் ஒளிவழிபாடு செய்தால் பத்து விளக்குகளை ஏற்றி வைக்கவும்.

நிறை கலசங்களுக்கு முன்னால் மணல் பரப்பிக் குண்டம் அமைத்து முறைப்படி எரிவளர்க்கவும். சிவபுராணம் கோளறு பதிகம் சொல்லி எரியோம்பி முறைப்படி வேள்வியை நிறைவு செய்யவும் பிறகு உரியவரிடம் கருப்பூரம் ஏற்றிய தட்டைக் கொடுத்து,

"முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தனெனக் கருளியவாறார் பெறுவார் அச்சோவே

என்னும் திருவாசகப் பாடலை ஓதியபடி மூன்றுமுறை சுற்றிவரச் செய்யவும்.

"பண்ணின் நேர் மொழியாள் பங்க நீ அல்லாள்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
திண்ணமே ஆண்டாய் சிவபுரத்தரசே
திருப்பெருந்துறை உறை சிவனே
எண்ணமே உடல்வாய் மூக்கொடு செவிகண்
என்றிவை நின்கணே வைத்து
மண்ணின் மேல் அடியேன் வாழ்கிலேன் கண்டாய்
வருக என்றருள் புரியாயே

"கடையவனேனைக் கருணையினால்
கலந்தாண்டு கொண்ட
விடையவனே விட்டிடுதி கண்டாய்
விறல் வேங்கையின் தோல்
உடையவனே மன்னும் உத்தரகோச
மங்கைக்கரசே
சடையவனே தளர்ந்தேன் எம்பிரான்
என்னைத் தாங்கிக் கொள்ளே"

முதலிய பாடல்களை ஓதவும். பிறகு எல்லாவற்றுக்கும் கருப்பூர ஒளிகாட்டி மலர் தூவவும். நிறை கலசங்களில் உள்ள புனித நீரை எல்லா இடங்களிலும் எல்லோர் மீதும் தெளித்துத் திருநீறு வழங்கவும். இயன்றவரை எளியவர்களுக்கு அறம் செய்யவும்.

ஓராண்டு முடிவிலும் இதே முறைப்படி ஒளிவழிபாடு செய்யவும் அப்பொழுது பன்னிரண்டு அகல் விளக்குகளை ஏற்ற வேண்டும் ஒளிவழிபாடு முதலியவற்றைத் தந்தைக்கு இளைய மகனும் தாய்க்கு மூத்த மகனும் செய்வது முறையாம். அன்று இயன்ற அளவு எளிய மக்களுக்கு உணவு உடைமுதலிய வற்றை வழங்கவேண்டும்.

நாமே ஆண்டு தோறும் முனமனாகட்கு வழிபாடு (திதி) செய்யலாம். அன்று முதலில் பிள்ளையார் வழிபாடு செய்ய வேண்டும். விளக்கேற்றி வைத்து ' மூவேழ் சுற்றம் முரணுறு நரகிடை ஆளாமே அருள் அரசே போற்றி'' என்று மூன்று அல்லது ஐந்து முறை சொல்லி மலரிட்டு வணங்கவும் அன்று எளியவர்களுக்கு உணவோ அல்லது பொருளோ வழங்கிப் பிறவிப்பயன் தேடலாம்.

———